சிவனின் கண்கள்

ருத்திராக்ஷம்

நசிகேதன்

ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்

ருத்திராக்ஷ முகங்களும் வகைகளும்



மிக அரிதான 1 முகம்

1 முகம்

2 முகம்



3 முகம்

4 முகம்

5 முகம்

6 முகம்

7 முகம்

8 முகம்

9 முகம்

10 முகம்

11 முகம்

12 முகம்

13 முகம்

14 முகம்

கௌரி சங்கரம்

உ

ஓம் சிவாய நமஹ:

சிவனின் கண்கள்

ருத்திராக்ஷம்

ஆசிரியர்

நசிகேதன்

ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்

6/11, வெங்கடேஸ்வரா காலனி முதல் தெரு,

கொடுங்கையூர், சென்னை - 600 118.

போன்: 044-2555 4336, 98401 56711, 94444 88247

நூல் குறிப்பு

தலைப்பு	:	சிவனின் கண்கள் - ருத்திராக்ஷம்
ஆசிரியர்	:	நசிகேதன்
நூல் வகை	:	ஆன்மிகம் (சைவம்)
பதிப்பு	:	முதல் பதிப்பு - 2005
உரிமை	:	ஆசிரியருக்கே
எழுத்து	:	11 புள்ளி
பக்கங்கள்	:	96
படிகள்	:	2000
வெளியீடு	:	ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம் 6/11, வெங்கடேஸ்வரா காலனி முதல் தெரு, கொடுங்கையூர், சென்னை - 600 118. போன்: 044-2555 4336, 98401 56711, 94444 88247 98400 51633
வரைகலை	:	ஜே.வி
ஒளி அச்சு	:	சிவா கம்ப்யூட்டர்ஸ்
அச்சகம்	:	ஆதிசக்தி பிரிண்டர்ஸ், சென்னை - 14

விலை ரூ. 35.00

ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்
6/11, வெங்கடேஸ்வரா காலனி,
முதல் தெரு, மாதவரம் பால்பண்ணை
சென்னை-600 051.
Ph: 044-25554336-9340061833
9840156711

முன்னுரை

மெய்யன்பர்களே வணக்கம்!

இவ்வுலகில் உள்ள பற்பல சமயங்கள் இறைவனை வணங்கும் போது ஜெபம் செய்கின்றன. அப்படி ஜெபம் செய்யும்போது அதற்காக ஜபமாலைகளை பயன்படுத்துகின்றன. அவை வெவ்வேறு பொருட்களால் ஆனதாக இருக்கலாம், வெவ்வேறு எண்ணிக்கை கொண்டதாக இருக்கலாம், வெவ்வேறு அளவில் நீண்டதாகவோ அல்லது குட்டையாகவோ இருக்கலாம், ஆனால் பல சமய வழி பாடுகளில் ஜபம் என்பது செய்யப்படுகிறது, ஜபமாலையின் மணி கள் அங்கே உருட்டி எண்ணப்படுகின்றன என்பது மட்டும் உண்மை.

இந்த சமயங்களுக்கெல்லாம் ஜபம், ஜபத்திற்கான மணிமாலை, ஜபத்தில் இறைவனோடு மணிகளை எண்ணும் செயல் என்ற சிந்தனையை முதன் முதலாக அறிமுகப்படுத்தி வைத்ததே நம் இந்துமதம்தான். ஏனெனில் நம் இந்துமதத்தின் பல்வேறு வழிபாட்டு முறைகள், இன்று உலகின் பல்வேறு மதங்களில் பரவி உள்ளதே இதற்குக் காரணம்.

வைணவம் "துளசிமணிமாலை"யை வைத்து எண்ணி ஜபம் செய்கிறது, "சௌரம்" ஸ்படிக மணி மாலையால் ஜபிக்கிறது. "சாக்த" வழிபாட்டில் தாமரைமணி, செஞ்சந்தன மணி மாலை களால் ஜபம் செய்கிறார்கள். ஆன்மீகவாதிகள் எல்லோருமே ஏதாவது ஒரு மணி மாலைகளை பயன்படுத்தி ஜெபிக்கிறார்கள். இதுபோலவே "சைவ சமயம்" நீண்ட "ருத்திராக்ஷ மணி மாலை"யை வைத்து எண்ணி சிவாயநம என்ற பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபம் செய்கிறது.

இன்று சிவாலயங்களில் சிவராத்திரி, பிரதோஷம், ஆருத்திரா தரிசனம் போன்ற பற்பல சிவ வழிபாடுகள் இன்று விமரிசையாக நடக்கின்றன. எண்ணற்ற சிவபக்தர்கள் பெருகி உள்ளார்கள். எனவே சிவநாமத்தை அவர்கள் "ஜபம்" செய்வது எப்படி? ருத்திராக்ஷம் என்றால் என்ன? ருத்திராக்ஷங்களை எப்படிப்

பயன்படுத்த வேண்டும். அதனால் ஏற்படும் பலன்கள் என்னென்ன என்ற விபரங்களை அவர்களுக்கு கொடுக்க வேண்டி ஒரு உந்துதல் ஏற்பட்டது. அதனால், பிறந்ததே சிவனின் கண்கள் "ருத்திராக்ஷம்" என்ற இந்த நூல்.

மேலும் இந்நூலை எழுதத் தூண்டி வெளியிட்ட "நார்த் மெட்ராஸ் டைம்ஸ்" பத்திரிக்கையின் வெளியீட்டாளர் ஜெ. தாமோதரனுக்கும், விளம்பர நிர்வாகி கஸ்தூரி மைந்தனுக்கும், பதிப்பாளர் கே. பாஸ்கரனுக்கும், அவ்வப்போது உரிய ஆலோசனைகள் வழங்கி உதவிய, சென்னை வேப்பேரி, கால்நடை மருத்துவக் கல்லூரியின் உதவி நூலகர் ஜி. இரத்தினசபாபதிக்கும், எழுத்துப் பணியில் என்னோடு கூடி உதவிபுரிந்த அமுதா நடராஜனுக்கும், வேளச்சேரி ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ P. சட்டநாதக் குருக்கள் அவர்களுக்கும் மற்றும், செல்வன் S. பிச்சுமணி சிவம், செல்வன் என். பாலசுப்பிரமணியன் மற்றும் N. குருமூர்த்திக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் இந்நூலை ஒளி அச்சுக் கோர்வை செய்து கொடுத்த சிவா கம்ப்யூட்டர்ஸ் நிறுவன உரிமையாளர் ஜே. வினோத் அவர்களுக்கும் அச்சடித்து தந்த ஆதிசக்தி பிரிண்டர்ஸாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நசிகேதன்
சென்னை-51

பதிப்புரை

பக்த கோடிகளுக்கு வணக்கம்.

இது எங்கள் பதிப்பில் வெளிவரும் முதல் நூல். சிறியதாக இருப்பினும் முத்தான சத்தான நூலாக அது இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அப்பணியை "நார்த் மெட்ராஸ் டைம்ஸ்" பத்திரிக்கையில் "எடிட்டராக" பணிபுரியும் திரு. ஜி. நடராஜன் என்ற நசிகேதன் அவர்களிடம் ஒப்படைத்தோம். பல நாட்கள் எடுத்துக் கொண்டு, பல நூல்களை ஆய்வு செய்து இந்த நூலை அவர் படைத்துள்ளார். நூல் சிறப்பாக வெளிவந்துள்ளதில் எங்களுக்கு மகிழ்ச்சியே. படித்தபின் நீங்களும் மகிழ்வீர்கள்.

நல்ல நூல் "ருசிகர்களாகிய" நீங்கள் இந்நூலை அன்புடன் வாங்கி பக்தியுடன் படித்து, அவ்வழியை பின்பற்றி மற்றவர்களுக்கும் சொன்னால், மற்றவர்களும் இந்நூலை வாங்கத் தூண்டினால், உங்களைப்போல் அவர்களும் பயன்பெறுவார்கள், நாங்களும் உற்சாகத்துடன் அடுத்தடுத்து நல்ல நூல்களைக் கொண்டுவர அயராது உழைப்போம். செய்வீர்கள் தானே?

- தங்கள் பணிவுள்ள
ஸ்ரீ மதுரகாளி பதிப்பகத்தார்
சென்னை - 118

சமர்ப்பணம்

இப்புவியில் எம்மை உருவாக்கிய
ஈசனின் பாதார விந்தங்களுக்கும்
உயிர்தந்து உலவ வைத்த
என் தாய் G. **காமாக்ஷி அம்மாள்** அவர்களின்
பொற்பாத கமலங்களில் பொருந்திபணிந்து
இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

- *ஆசிரியர்*

உ

ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம:

ஸ்ரீ விநாயகர்

திருமந்திரம் (1)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

- திருமூலர்

உ

ஓம் நமசிவாய

ஸ்ரீ நடராஜர்

திருமந்திரம் (2749)

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டை யாகாசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சக்தி திருஅம்பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந்தானே

- திருமூலர்

உ

ஓம் சக்தயே நம:

ஸ்ரீ ஆதிபராசக்தி

திருமந்திரம் (1046)

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்தூரப்
பரிபுரை நாரணியாம் பல வண்ணத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வரும்பல வாய் நிற்கும் மாதுதானே.

- திருமூலர்

உ

ஓம் நந்திகேஸ்வராயநம:

ஸ்ரீ நந்திகேஸ்வரர்



திருமந்திரம் (68)

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டிலே
நந்தி வழிகாட்ட நானிருந்தேனே.

- திருமூலர்

சிவ பக்தனான நந்திகேஸ்வரன் ருத்திராக்ஷம் அணிந்திருப்பது

த்யானம்

ரக்தம் த்ரிநேத்ரம் ஜடிலம் வராபய கராம் புஜம்|
அக்ஷமாலாம் த்ரிசூலஞ்ச ததாநம் ஸவ்ய வாமயோ:||
பஸ்மோத் தூளித ஸர்வாங்கம் விபுத ஜனஸேவிதம்|
சிவா பரஸ்வரூபஞ்ச வந்தேஹம் நந்திகேஸ்வரம்||

பொருள்: சிவந்த மேனி உடையவரும், முக்கண்கள் கொண்டவரும், நீண்ட ஜடையுடையவரும், கைகளில் வரதமுத்திரை அபயமுத்திரை காட்டி **ருத்திராக்ஷ ஜபமணிமாலை** மற்றும் திரிசூலம் கொண்டிருப்பவரும், உடல் முழுவதும், திருநீறணிந்திருப்பவரும், வித்வான்களால் வணங்கப்படுபவரும், சிவ "சாரூபம்" கொண்டு விளங்குபவரும் ஆன ஸ்ரீ நந்திகேஸ்வரனே உம்மை வணங்குகிறோம்.

மூர்த்தி த்யானம்

தஞ்சை சரஸ்வதி மஹால்
நூலக வெளியீடு

பொருளடக்கம்

1. ருத்திரன் என்பவர் தீமைகளை அழிப்பவர் 13
2. ருத்திராக்ஷ மணிகள் சிவனின் கண்கள் 15
3. ருத்திராக்ஷ மரங்கள் தோன்றிய புராணக்கதை 16
4. ருத்திராக்ஷ மணிகளின் நிறப்பிரிவுகள் 17
5. ருத்திராக்ஷ மணிகளின் முகங்களும், பயன்களும் 18
6. ருத்திராக்ஷ மணிகளின் சிறப்புகள் 27
7. ருத்திராக்ஷ மணிமாலைகள் கட்டும் முறை 32
8. ருத்திராக்ஷ மணிகளை அணியும் முறை 34
9. ருத்திராக்ஷ மணிகளை யார் யார் அணிந்து கொள்ளலாம்? 40
10. ருத்திராக்ஷ மரம் சில தாவரவியல் தகவல்கள் 43
11. ருத்திராக்ஷ மணிகள் பற்றிய விஞ்ஞான விந்தைகள் 45
12. ருத்திராக்ஷ மணிகளின் மருத்துவ குணங்கள் 47
13. ருத்திராக்ஷம் பற்றிய சில எச்சரிக்கைகள் 53
14. ருத்திராக்ஷ மணிகள் உருவாகக் காரணமான ஒரு சிவஸ்தலம் (திருவதிகை) 57
15. ருத்திராக்ஷ மணிகளால் ஜபம் செய்யும் முறைகள் 59
16. ருத்திராக்ஷ மாலை மற்றும் ஜபமாலை பூஜை முறைகள் 62
17. ருத்திராக்ஷம் பற்றி உபநிஷதம் கூறும் உண்மைகள் - I (ருத்திராக்ஷ ஜாபாலோ உபநிஷத்) 72
18. ருத்திராக்ஷம் பற்றி உபநிஷதம் கூறும் உண்மைகள் - II (அக்ஷமாலிகோ உபநிஷத்) 77
19. ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ருத்திராக்ஷ ஜபத்திற்கான ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரம் 80
20. மார்க்கண்டேயர் அருளிய ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம் ... 81
21. ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய வேதஸார சிவ ஸ்தோத்ரம் 83
22. ஸ்ரீ வஸிஷ்ட்டர் அருளிய தாரித்ர்ய து:க்கதஹன ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷரீ ஸ்தோத்ரம் 85
23. ருத்திராக்ஷ குறிப்புகள் உள்ள சில தேவாரப் பாடல்கள் 87
24. திருமந்திரம் கூறும் ஓரெழுத்து மற்றும் ஐந்தெழுத்தின் சிறப்புகள் 93
25. ருத்திராக்ஷ மணிமாலைகளின் பல மொழி பெயர்கள் 95

1

ருத்திரன் என்பவர் தீமைகளை அழிப்பவர்

ருத்திராக்ஷ மணிகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு முன்பு "ருத்திரனை"ப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

"ருத் திராவயதி இதி ருத்ரஹ:" என்பது வாக்கியம், ருத், ரோத், ரோதம் என்றால் அது நமக்கு வரும் இன்னல்கள் கஷ்டங் களை குறிக்கும் சொல்லாகும். (அதனால்தான் கஷ்டங்களால் வரும் அழுகைக்கு "ரோதனம்" என்று பெயர் வந்தது.) த்ராவயதி என்றால் அதனை விரட்டுகிற, ஆற்றல்மிக்கவன், அதனை ஓட்டுகிற சக்தி மிக்கவன் என்பது பொருள் ஆகும்.

ஐந்துவிதமான சிவபுண்ணியங்கள்

1. *மனதில் சிவபெருமானை தியானம் செய்தல்.*
2. *உதடுகள் "திருவைந்தெழுத்து" முதலான சிவ மந்திரங்களை ஓதுதல்.*
3. *திருநீற்றை (முறைப்படி) உடல் முழுதும் பூசிக் கொள்ளுதல்.*
4. ***அங்கங்களில் ருத்திராக்ஷ மணிமாலைகளை அணிதல்.***
5. *சிவனுக்குப் பிடித்தமான வில்வம் முதல் பஞ்ச வில்வங்களாலும், நந்தியாவர்த்தம் முதலான அஷ்ட புஷ்பங்களாலும் சிவபூஜை செய்தல்.*

சிவபெருமானை எல்லோரும் வெறும் "அழித்தல் கடவுளாகவே" கருதுகிறார்கள். அது மிகமிக தவறு, அவர் "சம்ஹார" கர்த்தா என்று கூறப்பட்டிருப்பதே இதற்கு காரணம்.

பஞ்சக் கிருத்தியம் என்பது இறைவனின் ஐந்து செயல்பாடுகள் ஆகும். "ஐந்தொழில் ஆற்றும் அமரா" என்று ஆண்டவனைப் புகழ்வார்கள் நம் ஆன்றோர்கள். இதன்படி இறைவன் புரிவது "ஐந்தொழில்கள்" ஆகும். இதனை அறிய கீழ்க்கண்ட பட்டியலை பார்க்கவும்.

வ.எண்	இறைவனின் ஐந்து செயல்கள்	செயல் அதிகாரிகள்
1.	சிருஷ்டி (படைத்தல்)	பிரம்மா
2.	ஸ்திதி (காத்தல்)	விஷ்ணு
3.	சம்ஹாரம் (அழித்தல்)	ருத்திரன்
4.	திரோபவம் (மறைத்தல்)	ஈஸ்வரன்
5.	அனுக்கிரஹம் (அருளல்)	சதாசிவன்

இறைவன் படைத்து, காத்து பின்பு அனைத்தையும் அழித்து விட்டால், அதோடு எல்லாமே முடிந்து போகிறது. அதன்பின் பலன்களை அனுபவிக்க யாருமே இருக்கப்போவதில்லை. அப்படியென்றால் மேற்கண்ட பட்டியலில் உள்ள மற்ற இரண்டு செயல்களான "மறைத்தலும்" "அருளலும்" யாருக்காக? ஆன்மிக ஞானமுடையவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே "சம்ஹாரம்" என்று பார்த்தாலும், அதுவும் ஒன்றை முழுதும் "அழிப்பது" "கொன்று குவிப்பது" என்ற பொருளில் வரவில்லை. "ஏனெனில் இவ்வுலகில் ஒன்றை மற்றொன்றாக மாற்ற முடியுமே தவிர அதனை முழுவதும் அழித்துவிட முடியாது!"

எனவே இங்கும் "ருத்திரனின்" அழித்தல் செயல் என்பது, உயிரினங்களுக்கு வரும் துன்பத்தை ஒழித்தல், மனித குலத்திற்கு வரும் இன்னல்களை மாய்த்தல், பக்தர்களுக்கு வரும் ஆபத்துகளை அழித்தல் என்றே செயல்படுகிறது.

இப்படிப்பட்ட ஆபத் பாந்தவனான, அனாத ரக்ஷகனான, கருணை உள்ளம் மிக்க "ருத்திரன்" என்ற சிவனின் கண்களிலிருந்து வெளிப்பட்டு தோன்றியவைதான் நமது ருத்திராக்ஷ விருஷங்களும், அதில் உருவான ருத்திராக்ஷங்களும், எனவே நாம் அந்த சிவமணிகளின் "புனிதம்" அறிந்து போற்ற வேண்டும். அணிந்து இன்புற வேண்டும்.

2

ருத்திராக்ஷ மணிகள் சிவனின் கண்கள்

"ருத்திரன்" என்பவர் சிவன்.

"அக்ஷம்" என்றால் கண் என்று அர்த்தம், ருத்திரன் + அக்ஷம் = "ருத்திராக்ஷம்" என்றானது.

சிவனின் கண்களிலிருந்தே "ருத்திராக்ஷ மரங்கள்" தோன்றின, அதனால்தான் அம்மரத்தில் தோன்றும் மணிகளுக்கும் "ருத்திராக்ஷம்" என்ற பெயர் ஏற்பட்டது. சரி! சிவனின் கண்களில் இருந்து ருத்திராக்ஷ மரங்களும், மணிகளும் எப்படித்தோன்றின?...

3

ருத்திராக்ஷ மரங்கள் தோன்றிய புராணக்கதை

முன்னொரு காலத்தில் **தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி** என்று மூன்று அசுரர்கள் இருந்தார்கள். இவர்கள் மூவருக்கும் சேர்த்து **"திரிபுர அசுரர்கள்"** என்று பெயர். இவர்கள் முறையே தங்கக் கோட்டை, வெள்ளிக் கோட்டை, இரும்புக் கோட்டை என்ற மூன்று பறக்கும் தன்மை கொண்ட கோட்டைகளோடு பறந்து சென்று படையெடுத்து தேவலோகம் பூலோகம் முழுதும் பல நாடு நகரங்களை அழித்தார்கள். தேவர்களை வதைத்தார்கள். இதனை பொறுக்க முடியாத அனைவரும் ஓடிச் சென்று சிவ்பெருமானிடம் முறையிட, சிவனும் அவர்களை அழிக்க சித்தம் கொண்டார்.

அதற்காக அவர் தம்மை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்ததர்லும் - யாரும் எளிதில் அடைய முடியாத ஒரு அஸ்திரத்தை பெற வேண்டியிருந்ததாலும் ஆயிரம் தேவ வருஷங்கள் கண்மூடாமல் விழித்திருந்து **"அகோராஸ்திரம்"** என்ற ஒரு அஸ்திரத்தை தியானம் செய்தார்.

ருத்திரன் அவ்வாறு தியானம் செய்த போது தேவர்களின் துயரத்தை எண்ணி வருந்தினார். அப்போது அவருடைய சோமம், சூரியம், அக்கினி என்ற மூன்று அம்சங்கள் உடைய, மூன்று கண்களிலிருந்தும், மூன்று கண்ணீர்த் துளிகள் உருண்டு திரண்டு முத்துக்கள் போல் பூமியில் விழுந்தன. அவையே **நேபாளம், இந்தோனேஷியா, ஜாவா, மலேசியா, இந்தியா** போன்ற பகுதிகளில் உலக மக்களின் இன்னல்களை அழிக்கும் தன்மை கொண்ட **"ருத்திராக்ஷ மரங்களாக"** ருத்திராக்ஷ மணிகளாகத் தோன்றின. இதன் பிறகே சிவன் திரிபுர அசுரர்களை சென்று போரிட்டு அழித்தார். அவர் அவ்வாறு திரிபுர சம்ஹாரம் புரிந்த திருத்தலம் கடலூர் பண்ருட்டி அருகே உள்ள **திருவதிகை** ஆகும்.

4

ருத்திராக்ஷ மணிகளின் நிறப்பிரிவுகள்

முக்கண்ணன், சிவனின் "சூரிய மயமான" கண்களில் இருந்து தோன்றியவை 12 விதமாகும். இவற்றிலிருந்து தோன்றும் மணிகள் கபில வண்ணம் மற்றும் செம்மை பொன்மை நிறங்கொண்டவை. சிவனின் "சந்திரமயமான" கண்களிலிருந்து தோன்றியவை 16 விதமாகும். இவற்றிலிருந்து தோன்றும் மணிகள் "வெண்மை" யானவை. சிவனின் "அக்கினி மயமான" விழிகளிலிருந்து தோன்றியவை 10 விதமாகும். இவற்றிலிருந்து தோன்றும் மணிகள் கறுப்பு நிறமானவை. இவ்வாறாக ருத்திராஷ மணிகளில் (12+16+10=38) 38 வகைகள் உள்ளன. (இவை முகங்களை மட்டும் குறிப்பதல்ல நிறங்களையும் சேர்த்து குறிப்பவை)

முக்கண்ணன் சிவன்

"சோம சூரிய அக்கினி லோசனன்." என்பது சிவபெருமானுக்குரிய சமஸ்கிருத அர்ச்சனைகளில் ஒன்று. இதற்கு சூரியன் ஒருகண், சந்திரன் ஒரு கண்; அக்கினி ஒரு கண் என்ற மூன்று கண்கள் உடைய "முக்கண்ணன்" சிவன் என்று பொருள். இந்த மூன்று கண்களில் இருந்து தோன்றியவையே ருத்திராக்ஷ மரவகைகளும் அதில் உண்டான மணிவகைகளும்.

திருமந்திரம் (1025)

முக்கணன் றானே முழுசுடராயவன்
அக்கணன் றானே அகிலமும் உண்டவன்
திக்கணன் திசையெட்டுங் கண்டவன்
எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே (திருமூலர்)

மேற்கண்ட திருமூலர் திருமந்திரப்பாடலும் சிவன் முக்கண்கள் கொண்டவன் என்பதை வலியுறுத்தும்.

5

ருத்திராக்ஷ மணிகளின் முகங்களும், பயன்களும்

ருத்திராஷ மணிகளில் ஆழமான நெடுங்கோடுகள் இருக்கும். இவை உரித்த "சாத்துக்குடி" பழத்தில், ஒவ்வொரு சுளையையும் பிரிக்க ஒரு கோடு உள்ளது போல் காணப்படும். இக்கோடுகளே முகங்கள் என்று கூறப்படுகின்றன. இவ்வாறு உள்ள கோடுகளை எண்ணியே, அது எத்தனை முகம் கொண்ட ருத்திராக்ஷ மணி என்பதைத் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஒன்று முதல் பதின்மூன்று முகங்கள் வரை உள்ள ருத்திராக்ஷ மணிகள் மட்டுமே உள்ளதாக பழந்தமிழ் நூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. ஆனால் தற்காலத்தில் 14 முகம் வரை உள்ள ருத்திராக்ஷ மணிகள் கிடைக்கின்றன என்று தெரிகிறது. மேலும் சிலர் 21 முகங்கள் வரை உள்ளதாகவும் வாதிடுகின்றனர். 15 முகம் முதல் 21 முகம் வரை உள்ள அவை சிவஸ்வரூபனாவை என்றும் தெரிவிக்கின்றனர் உண்மையில் அப்படி கிடைக்கின்றனவா?

இந்த செய்தி எந்த அளவுக்க உண்மையானது என்று அறிய முடியவில்லை.

இது வரை மொத்தமாக வகுத்தும் தொகுத்தும் பார்த்ததில், ருத்திராக்ஷ மணிகள் நிறம், இனம், முகம், சிறிதும் பெரிதுமான அளவுகள் படி 38 வகைகளில் உள்ளன என்றும், 14 முகங்கள் வரையில் கிடைக்கின்றன என்றும் தெரிகிறது. அவற்றிற்கான அதிதேவதைகள் எவை அவற்றை அணிவதால் உண்டாகும் பலன்கள் என்னென்ன என்பதை பற்றியும் இங்கே பார்க்கலாம்.

ஏக முக ருத்திராக்ஷம்
(ஒருமுக மணி)



ஒரு முகம் கொண்ட மணிகள் மிகமிக அரிதானவை, அதிகம் கிடைக்காது, அதனால் இவ்வகை மணிகள் விலை அதிகமாக இருக்கும். இது சாட்சாத் "ஸ்ரீ பரமேஸ்வரன்" ஸ்வரூபமாகும். இதன் அதிதேவதை "சூரியன்" இதனை அணி வதால் கொலை பாதகங்கள் நீங்கும், பிராம் மணரைக் கொன்ற "பிரம்ம ஹத்தி" தோஷம் கூட பொடிப் பொடியாகும் பின்பு சிவஞானம் ஏற்பட்டு சிவகதி பெறுவர்.

த்வி முக ருத்திராக்ஷம்
(இருமுக மணி)

இரண்டு முகம் கொண்ட மணிகள் மிகவும் அபூர்வமானவை, இதுவும் அதிகம் கிடைக்காது அதனால் விலை கூடுதலாக இருக்கும். இது சிவனும் சக்தியும் கூடிய "ஸ்ரீ அர்த்த நாரீஸ்வரர்" ஸ்வரூபமாகும், இதன் அதிதேவதை "சந்திரன்" இதனை அணிவதால் விலங்குகளைக் கொன்ற கொலை பாவம் போகும், கொடும் பாவமான, பசுவைக் கொன்ற "கோஹத்தி" தோஷம் கூட விலகிவிடும்.

த்ரி முக ருத்திராக்ஷம்
(மும்முக மணி)



மூன்று முகம் கொண்ட மணிகளும் அரிதானது சாதாரணமாகக் கிடைப்ப தில்லை, இதுவும் விலை கூடுதலானதே, இது "சோம சூரிய அக்கினி" எனும் சிவனின் முக்கண் வடிவானவை சூரியன், சந்திரன், அக்கினிதேவன் மூவருமே இதற்கு அதிபதிகள் இதனை அணிவதால் பெண் களைக் கொன்ற "ஸ்ரீ ஹத்தி" தோஷம் கூட விலகும், பல வகை பாவங்கள் எரிந்து சாம்பலாகும், மேலும் இதனை அணிந்தவன் மிக உயர்ந்த நிலைகளை எளிதாக அடைவான்.

சதுர் முக ருத்திராஷம்

(நான்முக மணி)

நான்கு முகம் கொண்ட மணிகள், நான்கு முகங்கள் உடைய "பிரம்மதேவன்" ஸ்வரூபமானவை, அனைத்து துறைகளிலும் உள்ள படைப்பாளிகள் இதனை அணிந்தால், கற்பனை வளமும், படைப்புத் திறனும் மேம்படும். பலவகைக் கொலைபாதகங்கள் தீர்ந்து, கல்வி, கலைத்திறன்கள், நுண்கலைகள் வளர்ச்சிபெறும்.

பஞ்ச முக ருத்திராக்ஷம்

(ஐம்முக மணி)

ஐந்து முகம் கொண்ட மணிகள் சாதாரணமாக கிடைப்பவை, விலை குறைவானவை இது "காலாக்கினிருத்திர" ஸ்வரூபம் உடையது. அகோரம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம், ஈசானம் எனும் சிவனின் ஐந்து முகங்கள் இதற்கு அதிதேவதைகள். இதனை அணிவதால் மாமிசம் முதலான உண்ணத்தகாத உணவுகளை உண்ட பாபம் தீரும் பலவகை பாபங்கள் நசித்து, சிவசாருபம் கிடைக்கும் உண்ணும் உணவில் உள்ள விஷக் குற்றங்கள் விலகும்.

ஷண்முக ருத்திராக்ஷம்

(அறுமுக மணி)

ஆறு முகங் கொண்ட மணிகள், அதேபோல் ஆறு முகங்கள் கொண்ட "ஷண்முகர்" வடிவானவை இவ்வகை மணிகளை அணிந்து கொண்டால், தமிழ்க் கடவுளான முருகன் அருள் பெருகும். பிராம்மணர்களை கொன்ற கொலைப் பழி பாவங்கள் நீங்கி அனைத்திலும் வெற்றி கிட்டும், புகழ் பெருகும்.

சப்த முக ருத்திராக்ஷம்

(எழு முக மணி)

ஏழு முகங்கள் கொண்ட மணிகளும் மிக அரிதானவை, பிரம்மதேவன் கட்டளையினால், கீழேழு உலகங்களை அதலம், விதலம், சுதலம் தராதலம், ரசாதலம், பாதாலம், எனும் சப்தலோகங்களில் உள்ள

"நாகர்களில்" தலைவனாக இருந்து ஆயிரம் தலைகளோடு கூடி பூமியைதாங்கிய "ஆதீசேஷன்" அம்சமானவை, இவ்வகை மணிகள். இதனை அணிவதால் பசுக்கொலை செய்த பாவமும் போகும்.

பிறர் பொன் பொருளைத் திருடிய பாபங்கள் விலகும் சப்தமாதாக்களின் சப்த கன்னிகளின் பேரருள் கிட்டும். நாக தோஷங்கள் நிவர்த்தியாகும். கல்வி, நுண்கலைகள் மேம்படும். யோகசக்திகள் கைவரும்.

அஷ்டமுக ருத்திராக்ஷம்

(எண்முக மணி)

எட்டு முகம் கொண்ட மணிகளும் அரிதானவை எளிதில் கிடைக்காதவை இவ்வகை மணிகள், ஸ்ரீ பல்லாளேச கணபதி, ஸ்ரீ வரத கணபதி, ஸ்ரீ சிந்தாமணி கணபதி, ஸ்ரீ மயூரேச கணபதி ஸ்ரீ சித்தி கணபதி, ஸ்ரீ மஹா கணபதி, ஸ்ரீ விக்னேச கணபதி, ஸ்ரீ கிரிஜாத்மஹ கணபதி என்ற "அஷ்டகணபதி" ஸ்வரூபமானவை இதனை அணிந்து கொண்டால் அஷ்ட வசுக்களின் ஆசிகள் கிட்டும். குருவைக் கொன்று, குருபத்தினியைத் தீண்டிய கொடும் பாவங்களும் விலகி, புண்ணியம் ஏற்படும் பொன் திருடிய குற்றங்கள் நீங்கும். அஷ்டமாசித்திகளும் வாய்க்கும், அஷ்ட லஷ்மிகளின் அருள் கிட்டும், பல வகையில் வரும் காரியத் தடைகள் அகலும்.

நவ முக ருத்திராக்ஷம்

(ஒன்பது முக மணி)

ஒன்பது முகம் கொண்ட மணிகள் கூட அவ்வளவாக கிடைப்பதில்லை. கையிலை மலையின் எண்திசைகளிலும் காவல் புரியும் தேவதைகளான அசிதாங்க பைரவர், ருரு பைரவர், சண்ட பைரவர், குரோத பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர் என்ற அஷ்ட பைரவர்களின் உற்பத்திக்கு மூலகாரணன் ஆன ஸ்ரீ மஹா பைரவர் ஸ்வரூபமானவைகளே இந்த ஒன்பது முகம் கொண்ட ருத்திராக்ஷமணிகள் இதனை அணிவதால் பில்லி சூனியம் விலகும் பலவகை கொலை பாவங்கள் நசிக்கும் பாம்புகளால் வரும் துன்பங்கள் நீங்கும். நவக்கிரஹ பீடைகள் விலகி, நவசக்திகளின் பேரருள் கிட்டும், சித்தியும் முக்தியும் ஏற்படும்.

தசமுக ருத்திராக்ஷம்

(பத்துமுக மணி)

பத்து முகம் கொண்ட மணிகள் அரிதானவை. இம்மணிகள் மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி அவதாரங்களின் நாயகனான, ஸ்ரீ விஷ்ணு ஸ்வரூபமானவை, இவற்றை அணிவதால் பூத, பிரேத, பைசாச, பிரம்மராக்ஷசர்களால் ஏற்படும். ஆபத்துகள் விலகும். ஏவல், பில்லி, சூனியங்கள் வலுவிழந்து போகும், பலவகையான பீடைகளிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள்.

ஏகாதச முக ருத்திராக்ஷம்

(பதினோருமுக மணி)

பதினோரு முகம் கொண்ட மணிகளும் அபூர்வமானவை, எளிதில் கிடைக்காதவை, இவ்வகை மணிகள், மஹாதேவன், அரன், ருத்திரன், சங்கரன், நீலலோஹிதன், ஈசானன், விஜயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் என்ற ஏகாதச ருத்திரர்களின் அம்சமானவை. இவற்றை அணிந்துகொண்டால், பலவகை உயிரினங்கள், பறவைகள் என பிராணிகளைக் கொன்ற பாவம் நீங்கும். வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள அஸ்வமேதயாகம் முதலான அனைத்துவிதமான யாகங்களையும், விரதங்கள் பூஜை களையும் செய்த புண்ணியம் ஏற்படும். நூறு வாஜ பேய யாகம் செய்த புண்ணியம் வரும், சிவஞானம் சித்திக்கும்.

துவாதச முக ருத்திராக்ஷம்

(பன்னிருமுக மணி)

பனிரெண்டு முகம் உடைய மணிகளும் எளிதில் கிடைக் காது, மிகவும் அரிதானவை, இவ்வகை மணிகள், வைகர்த்தன், வைவஸ்வதன் வாசன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகப் பிரகாசன், லோக சாக்ஷி, திரிவிக்கிரமன், ஆதித்தியன், திவாகரன், அங்கிசமாலி எனும் "துவாதச ஆதித்தியர்களின்" ஸ்வரூபமாகும். (இவை தமிழ் மாதங்கள் 12லும் வரும் 12 சூரியன் பெயர்களாகும்) இவ்வகை மணிகளை அணிவதால் பலவகையான கொலை பாதகங்கள்

தீர்ந்து நல்ல மனோநிலை ஏற்படும். பொன்னை தானம் செய்த புனிதம் வரும், ஆயிரம் அஸ்வமேத யோகங்கள் செய்த புண்ணியம் கிட்டும், கல்வி மேம்படும், அறிவில் தெளிவு உண்டாகி சிவஞானம் ஏற்படும்.

திரயோதச முக ருத்திராக்ஷம்

(பதின்மூன்று முகமணி)

பதின்மூன்று முகமணிகள் "ஸ்ரீ சுப்பிரமணியர் ஸ்வரூப மானவை. இவையும் எளிதில் கிடைக்காத அரிய வகை மணிகளே, இதனை அணிந்தால் போக, போக்கியங்களும், பலவகையான சித்தி சாதனைகளும் ஏற்படும், மேலும் குழந்தை, மனைவி, தாய், தகப்பன், சகோதரன், பெரியோர் மற்ற வகை உறவு குடும்பப் பெண்களைக் கொன்ற கொலை பாதகங்களும் விலகி புண்ணியம் ஏற்படும், அதன்பின் நல்லகுணம் ஏற்பட்டு சிவகதி பெறுவான்."

சதுர்தச முக ருத்திராக்ஷம்

(பதினான்கு முக மணி)

பதினான்கு முக மணிகள் "சிவசக்தி" வடிவானவை - இதனை அணிந்துகொள்வதால் சகல பாவங்களும் நசிந்து "சிவ ஞானம்" உண்டாகும், தேவர் முனிவர்களையும் வசப்படுத்தும். இவ்வகை மணிகளும் சாதாரணமாக கிடைப்பதில்லை என்று தெரிகிறது.

கௌரீசங்கர ருத்திராக்ஷம்

மேற்கண்ட வகைகள் தவிர இரண்டு ருத்திராக்ஷங்கள் சேர்ந்தது போலவும் ஒருவகை உண்டு (இது இரட்டை வாழைப்பழங்கள் சேர்ந்தது போல சேர்ந்திருக்கும்) இதற்கு "கௌரீசங்கரம்" என்று பெயர். இது சிவ சக்தி ஸ்வரூபமானது இதனை அணிவதால் சதகோடி பாபங்கள் விலகி எண்ணற்ற புண்ணியங்கள் ஏற்படும். இதனை வெள்ளி அல்லது தங்கத்தில் கட்டி அணியலாம்.

கணேஷ் ருத்திராக்ஷம்

சிலவகை ருத்திராக்ஷ மணிகளில் "தேள் கொடுக்குக் காய்" போல வளைந்துள்ள மணிகள் காணப்படும் இவை விநோதமாக

கணபதி முகம் போல இருக்கும் இவ்வகை மணிகளை வெள்ளி, தங்கப்பூண் கட்டி கழுத்தில் அணியலாம், இவ்வகை மணி "ஸ்ரீ கணேஷ் ருத்திராக்ஷம்" என்றழைக்கப்படுகிறது. இதன் அதிபதி கணபதி இதனால் "பதிஞானம் ஏற்படும்" கல்வி சிறக்கும் காரியத் தடைகள் விலகும்.

கர்ப்ப கௌரி ருத்திராக்ஷம்

"கர்ப்ப கௌரீ" ருத்திராக்ஷமும் ஓரளவு "கௌரீ சங்கர" ருத்திராக்ஷம் போலவேதான் இருக்கும். ஆனால், "கௌரீ சங்கர"த்தில் உள்ள மணிகள் இரண்டும் சமஅளவு பருமன் கொண்டதாக இருக்கும், ஆனால் "கர்ப்ப கௌரீ" ருத்திராக்ஷ மணிகளில் ஒன்று பெரியதாகவும் மற்றொன்று மிகச் சிறிய தாகவும். இருக்கும், இது சக்திஸ்வரூபமானது, எல்லோருமே அணியலாம். இதனை அணிவதால் பற்பல பாவங்கள் நசித்து, மிகச்சிறந்த புண்ணிய பலன்கள் ஏற்படும், குறிப்பாக பெண்கள் விரும்பி அணியலாம், புத்ரபாக்யம் ஏற்படும், இந்த வகை மணியும் அதிசயமானது அவ்வளவு எளிதில் கிடைக்காது.

த்ரிஜுடி ருத்திராக்ஷம்

இது சமஅளவு பருமன் உள்ள மூன்று ருத்திராக்ஷ மணிகள் ஒன்றாக சேர்ந்து இருக்கும். இது இயற்கை குறிக்கும். "மும்மூர்த்தி" வடிவமாக இருக்கும். இதனை எல்லோரும் அணியலாம், நற்பலன்கள் ஏற்படும். இதன்பலன்கள் பற்றி சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. இவ்வகை மணிகளும் அபூர்வமானதே.

"த்வைத்" ருத்திராக்ஷம்

இது "கௌரீசங்கரம்" போலவே இரு பிரிவாக இருக்கும், அதில் உள்ள ஒரு ருத்திராக்ஷம் நன்றாக இருக்கும். ஒரு ருத்திராக்ஷத்தில் மட்டும் சிறிது பிளவு போல் ஏற்பட்டு இரு பிரிவாக இருக்கும். இதன் அம்சம், அதிதேவதை, பலன்கள் பற்றி குறிப்புகள் கிடைக்கவில்லை.

மற்ற சில வகை மணிகள்

மேற்படி மணிகள் போலவே நான்கு மணிகள் ஒட்டி உருவான வகை ஒரு பெரிய மணியில் இரு சிறு மணிகள் ஒட்டி உருவானது. ஒரு முழு மணியில் ஒரு மணி சந்திர பிறை போல ஒட்டி உருவானது என்று பல அதிசயப் பிறவி மணிகள் உண்டு இதன் பலன்களும் தெரியவில்லை.

ருத்திராக்ஷங்களில் மேலும் சில வகைகள்

15 முதல் 21 முகங்கள் வரை மேலும் சில ருத்திராக்ஷ மணிகள் தற்காலங்களில் காணக் கிடைக்கின்றன. அக்காலத்தில் வந்த பழய நூல்களில், 13 மற்றும் 14 முகங்கள் வரை மட்டுமே குறிப்புகள் உள்ளன. அக்காலங்களில் இவ்வகை மணிகள் அதிகம் கிடைக்காததே இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இவை கிடைப்பதற்கு மிகமிக அரிதான வகை என்பதால் ஒரு சில பகுதிகளில், ஒரு சில மணிகள் பயன்பாட்டில் இருந்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

எனவே இவ்வகை மணிகளுக்கு அதிதேவதை இதற்கான பலன்கள் பற்றி, பழங்காலக் குறிப்புகள் ஏதும் நம்மிடம் இல்லை இப்பகுதியில் உள்ள குறிப்புகள் அனைத்தும், புதிதாக வந்த சில நூல்களில் உள்ள குறிப்புகளே. ஆகும். எனவே இவை எந்த அளவுக்கு நம்பகத்தன்மை உள்ளதாக இருக்கும் என்று சொல்ல இயலாது.

15 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "பசுபதி ருத்திராக்ஷம்" எனப்படுகிறது. இதன் அதிபதி சிவன். இதனை அணிந்து கொண்டால், நம் உடலும் மனமும் ஆன்மிக முன்னேற்றம் அடையத் தகுதி பெறும் என்கிறார்கள். செல்வம் கிடைக்குமாம். வாழ்வில் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுமாம்.

16 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "ஜெய ருத்திராக்ஷம்" எனப்படுகிறது. ஜெயம் என்றால் வெற்றி என்று பொருள். இதனை அணிவதால் செய்தொழில் ரீதியாகவும், அரசியல் வாழ்விலும் ஏற்படும் பற்பல பிரச்சனைகள் தீர்ந்து வெற்றி கிடைக்குமாம். கள்வர்கள், எதிரிகளிடமிருந்தும் நம்மை காப்பாற்றுமாம்.

16 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "விஸ்வகர்மா" ருத்திராக்ஷம் எனப்படும். இதன் அதிபதி "விஸ்வகர்மா" என்ற தேவனாம். இதனை அணிந்தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படுமாம். உள் மன ஆற்றல்கள் வீரியம் பெறுமாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தும், மதிப்பு மரியாதையும் பெற விரும்புபவர்கள் இதனை அணியலாம் என்கிறார்கள்.

18 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "பூமி ருத்திராக்ஷம்" எனப்படுகிறது. இதன் அதிதேவதை "பூமி தேவி". இதனை அணிந்து கொண்டால் - குடும்பம் தழைத் தோங்கும். உங்கள் குழந்தைகளுக்கு நன்மைகள் ஏற்படுமாம். உங்கள் பரம்பரையையே பாதுகாக்கும் தன்மையையுடையதாம். அதுமட்டு மல்ல பெண்கள் அணிந்தால், குறைபிரசவத்தை தடுக்கும் பிறக்கும் குழந்தைகளை ஆரோக்கியமாக வைத்திருக்கும் என்கிறார்கள்.

19 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "நாராயண ருத்திராக்ஷம்" எனப்படுகிறது. இதன் அதிபதி "நாராயணனாம்". இதனை அணிந்து கொண்டால், நல்ல குறிக்கோள்கள் அமையுமாம். தொழிலில் அபிவிருத்தி ஏற்படு மாம். முக்கியமான பெரிய செயல் திட்டங்களை உருவாக்கி அதனை செய்ய முற்படுபவர்கள், இதனை அணிந்தால் அவற்றில் வெற்றிபெற முடியுமாம்.

20 முக ருத்திராக்ஷ மணிகள்

இது "பிரம்ம ருத்திராக்ஷம்" எனப்போற்றப்படுகிறது. இதன் அதிபதியும் "பிரம்மா" என்கிறார்கள். கல்விக்கும், அறிவு வளர்ச் சிக்கும் கற்பனை வளத்துடன் ஒன்றை சிந்தித்து உருவாக்கு வதற்கும் இது உற்சாகம் தருமாம். மேலும் குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படுமாம்.

21 முக ருத்திராக்ஷ மணிகள்

இதனை "குபேர ருத்திராக்ஷம்" என்கிறார்கள். இதன் அதிபதி "குபேரானாம்". இதனை அணிந்து கொண்டால், மிகுந்த செல்வம் சேரும், சேர்ந்த செல்வம் பாதுகாப்புடன் இருக்கும். பௌதீக உலகின் அனைத்து செல்வங்களையும் இதன் மூலம் அடையலாம் என்கிறார்கள். மேலும் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படுமாம்.

- *ஆதாரம்:* Rudraksha The ancient power Bead

6

ருத்திராக்ஷ மணிகளின் சிறப்புகள்

பரிமாணம்

★ ருத்திராக்ஷ மணிகளில் நெல்லிக்காயளவு பெரியது முதல், இலந்தைக் கொட்டை மற்றும் கொண்டைக்கடலை அளவு வரையான சிறிய வகை மணிகளும் உண்டு, சிலர் "ருத்திராக்ஷப் பூ" என்று மிகச் சிறிய மணிகளையும் அணிவார்கள். இவை ஒவ்வொன்றுக்குமே ஒவ்வொரு வகையான சிறப்புகள் உண்டு, ஒவ்வொரு வகையான பலன்கள் உண்டு.

திரிமூர்த்தி அம்சம்

★ ருத்திராக்ஷ மரங்களின் அடிப்பகுதியில் பிரம்மாவும், நடுப்பகுதியில் விஷ்ணுவும் மேற்பகுதிகளான கிளை, இலை, பூ, பிஞ்சு, காய், கனி அதன் கொட்டைகளில் சிவபெருமானின் அம்சமான ருத்திரனும் வாசம் செய்கிறார்கள். இதனால் அம்மரத்தின் நிழல் கூட தெய்வாம்சம் பொருந்தியது என்றால் மணிகளின் சிறப்புகள் சொல்லவும் வேண்டுமா?

சிவ புண்ணியங்கள்

★ ருத்திராக்ஷ மணிகளின் சிறப்பை ஓத கேட்பதால் நூறு மடங்கு புண்ணியமும், ருத்திராக்ஷத்தை தொடுவதால் ஆயிரம் மடங்கு புண்ணியமும், அதனை பூஜை செய்வதால் லக்ஷம் மடங்கு புண்ணியமும், அதனை உடல் முழுதும் அணிவதால் கோடி மடங்கு புண்ணியமும், ருத்திராக்ஷ விதிப்படி சிறப்புகளை

கேட்டு, தொட்டு பூஜித்து, அணிந்து, அதன்பிறகு சிவத்தியான மும் மேற்கொண்டு "பஞ்சாஷர மந்திரங்கள்" ருத்திர மந்திரங்கள் என சிவ மந்திரங்களை ஜபித்தால் கோடானுகோடி மடங்கு மஹா புண்ணியங்களும் வாய்க்கும்.

மணிகளின் பகுதி

★ ருத்திராக்ஷ மணிகளின் அடிப்பகுதி மற்றும் சுயிறு "பிரம்மா" நடுப் பகுதி விஷ்ணு, முகங்கள் உள்ள மேற்பகுதி ருத்திரன் பிந்துவோ முப்பத்துமுக்கோடி தேவர்களின் ஸ்வரூபமாகும்.

சடங்குகளில் சிவமணி

★ நாம் செய்யும், சந்தியாவந்தனம், ஜபம, யாகம், திருமணம் போன்ற சுபச் சடங்குகள் "அஸ்வமேத யாகம்" போன்ற பெரிய யாகங்கள், திருக்கோயில் பூஜை, திருவிழா போன்ற சுப நிகழ்ச்சி கள் அனைத்திலும் ருத்திராக்ஷ மாலைகளை அணிந்தபடி அமர்ந்து அந்தந்த கிரியைகளை செய்தால் அதனால் ஆயிரமாயிரம் மடங்கு புனிதம் கூடும். கோடானு கோடி மடங்கு நற்புண்ணியங்கள் சேரும் என்று பலநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவாலய தரிசன அனுமதி

★ நாம் சிவாலய தரிசனத்திற்கு செல்லும் போது சிவச் சின்னங்களான விபூதி என்ற திருநீறு பூசி "ருத்திராக்ஷம்" என்ற சிவமணிகளை அணிந்து சென்றால்தான், சிவாலய காப்பாளர் களும், நந்தி, மஹாபலி, சண்டேசுவரர் போன்ற சிவகணங்களும் நம்மை, சிவனை தரிசிக்க அனுமதிப்பார்கள் என்பது தொன் னூல்கள் கூறும் உண்மை.

திருமாங்கல்யமே ருத்திராக்ஷம்

பெண்களுக்கு "தாலி" என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது சிவனடியார்களுக்கு "ருத்திராக்ஷ மாலை" என்பது.

திருமாங்கல்யம் உடைய பெண்ணை எப்படி நாம் சுமங்கலி என்று கருதுகிறோமோ அதுபோல் ருத்திராக்ஷ மணிந்த ஒரு வனையே "சைவன்" என்று கருத முடியும்.

திருமாங்கல்யம் அணிந்த பெண் எப்படி எல்லா சுப காரியங் களையும் செய்யத் தகுதி உடையவளாக ஆகிறாளோ, அதுபோல்

"ருத்திராக்ஷ மாலை" அணிந்த ஒரு சைவனோ சிவபூஜை முதலான எல்லா சுப காரியங்களையும் செய்ய தகுதி உள்ளவன் ஆகிறான்.

மணி மந்திரம் ஔஷதம்

நமது பண்டைய மருத்துவத்துறையில் "மணி மந்திர ஔஷதம்" என்ற ஒரு வாக்கியம் உண்டு. இதில் மணி என்பது மருந்துண்ணும் கால அளவையும், மந்திரம் என்பது உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள் மற்றும் செய்ய வேண்டிய சில ரகசிய செயல்களையும், "ஔஷதம்" என்பது கை பாகம் செய்பாகம் தவறாமல் செய்ப்பட்ட மருந்துப் பொருளையும் குறிப்பிடும். இதுபோலவே "சைவ சமயத்திற்கும்" ஒரு மணிமந்திர ஔஷதம் உண்டு. அவை எவை தெரியுமா? இதில் மணி என்பது சிவமணியாகிய ருத்திராக்ஷம் ஆகும். மந்திரம் என்பது நமசிவாய என்ற பஞ்சாக்ஷரம் ஆகும். ஔஷதம் என்று கூறப்படுவது திருநீறு என்றழைக்கப்படும் "விபூதியாகும்."

மணிகளில் சிறந்தது ருத்திராக்ஷமணி

புருஷர்களில் சிறந்தவர் விஷ்ணு, கிரஹங்களில் சிறந்தது சூரியன், பசுவில் சிறந்தது காமதேனு, குதிரையில் சிறந்தது "உச்சை சிரவம்" விருக்ஷங்களில் சிறந்தது "கற்பக விருக்ஷம்" புற்களில் சிறந்தது அறுகம்புல். வேதங்களில் சிறந்தது "ரிக் வேதம்" மந்திரங்களில் சிறந்தது. "காயத்திரி மந்திரம்" மருந்துகளில் சிறந்தது. உயிர்காக்கும் "அமிர்தம்" உலோகங்களில் சிறந்தது "தங்கம்" நவரத்தினங்களில் சிறந்தது வைரம், இதுபோலவே அணிந்து கொள்ளும் மணிமாலைகளில் மிகச் சிறந்தது "ருத்திராக்ஷ மணிமாலை"யே ஆகும்.

எல்லா புண்ணியங்களையும் தரும் ருத்திராக்ஷம்

அனைத்து வேத, புராண, இதிகாசங்களையும் கற்று, எல்லா யாகங்களையும் செய்து, அனைத்து நோன்புகளையும் நோற்று, பலவகையான தவங்களையும் இயற்றி, சாஸ்திரங்களில் சொல்லப் பட்டுள்ள எல்லா தானங்களையும் கொடுத்து, அனைத்து தீர்த்தங்களிலும் நீராடி, மண்ணில் உள்ள அனைத்து சிவஸ்தலங்களையும் ஒருவன் தரிசித்தால் என்ன மஹா புண்ணிய பலன்களை அடைவானோ அப்பலன்கள் அனைத்தையும் சிவமணியாகிய ருத்திராக்ஷ மணி மாலைகளை அணிந்து சிவநாம ஜபம் செய்வதால் ஒருவன் உடனே பெற்றுவிட முடியும்.

அளவிலா ஆற்றல் கொண்டது சிவமணி

ஆகாயத்தை அளவிட முடியாது, ஆதியும் அந்தமும் இல்லா ஆண்டவன் பெருமைகளையும் அளவிட முடியாது. அந்த ஆகாயத்தில் இருக்கும் "விண்மீன்களையும்" அளவிட முடியாது. சூரியன் தரும் ஆற்றல்களையும் அளவிட முடியாது. அதுபோலவே சிவமணியாகிய "ருத்திராக்ஷ" மணிமாலைகளின் அருமை பெருமைகளையும் அதன் சக்திகளையும் அளவிட்டு கூற முடியாது. ஆம்! அளவில்லா ஆற்றல்களும் புனிதத்தன்மையும் கொண்டது "ருத்திராக்ஷ மணிகள்".

கோடானுகோடி சிவபுண்ணியம்

ருத்திராக்ஷ மணிகளை கண்ணால் கண்டாலே புண்ணிய மாகும். அதனை தொட்டால் நூறு மடங்கும், அணிந்தால் ஆயிரம் மடங்கும் அதனால் ஜபம் செய்தால் லட்சம் மடங்கும், ருத்திராக்ஷ மணிமாலைகள் அணிந்து முறைப்படி சிவபூஜை செய்தால் கோடி மடங்கும் "சிவ புண்ணியம்" ஏற்படும். இவை அனைத்தையும் முறைப்படி ஒருவன் தினம் தோறும் செய்வானா கில் அவனுக்கு கோடானுகோடி "நற்பலன்கள்" விளையும்.

பாபங்கள் போக்கும் பரமனின் மணிகள்

ஒரு மனிதன் எவ்வளவு பாபியாக இருந்தாலும் சரி அவ்வழி களை விட்டு திருந்தி வாழ்ந்து உயர்நிலையை அடைய எண்ணு வானேயானால் அவன் பக்தியுடன் குறைந்த பட்சம் ஒரு ருத்திரா க்ஷத்தையாவது கழுத்தில் அணிந்து, சிவ மந்திரங்களை ஜெபித்து, சிவகதைகளை கேட்டு, சிவஸ்தலங்களுக்கு யாத்திரை மேற் கொண்டு, சிவாலயத்தில் திருப்பணிகள் செய்து, சிவத்தொண்டர் களுக்கு உதவி புரிந்து, சிவதீர்த்தங்களில் நீராடினால் பாபங்கள் நீங்கி சிவகதி அடைவதற்கான பாதையில் பிரவேசிப்பான்.

விலங்குகளையும் முன்னேற்றும் வீரிய மணிகள்

முன்னொரு காலத்தில், உருத்திராக்ஷ மணிகள் கட்டிய மூட்டைகளை பொதியாக சுமந்து சென்ற ஒரு கழுதை, விந்திய பர்வத மலைப் பகுதியில் ஏற முடியாமல் விழுந்து இறந்ததாம். அது கழுதையாக இருந்தாலும் ருத்திராக்ஷ பாரத்தை சுமந்த பெரும் புண்ணியத்தால் கற்பகோடிகாலம் சிவலோகத்தில், சிவ கணங்களில் ஒன்றாக இருந்து "சிவசாயுஜ்யம்" பெற்றதாம். எனவே சிவமணியாகிய ருத்திராக்ஷத்தின் பெருமைகளை சொல்ல நமது நாக்குகள் போதாது, கேட்க செவிகள் போதாது.

எல்லா காலங்களிலும் ருத்திராக்ஷமணிகள்

கற்கும்போது ருத்ராக்ஷம் அணிந்தால் அதனால் கல்வி மேம்பாடும், வேத நூல்களை கற்ற புண்ணியம் சித்திக்கும், உண்ணும் போது உருத்திராக்ஷம் அணிந்திருந்தால் உணவில் உள்ள சில குற்றங்களை நீக்கி நன்மை விளைக்கும். நீராடும்போது ருத்திராக்ஷம் அணிந்தால் கங்கை முதலான ஏழு புண்ணிய நதிகளில் மூழ்கிய புண்ணியத்தை கொடுக்கும், ஸ்தல யாத்திரை செய்யும்போது ருத்திராக்ஷமணிந்திருந்தால் உண்மை ஞானம் பிறக்கும். யாகம் மற்றும் சிவபூஜை செய்யும்போது ருத்திராக்ஷம் அணிந்திருந்தால், அதில் நம்மையறியாமல் செய்யும் குற்றங்கள் நீங்கி முழுதான "பூஜா பலன்" கிட்டும். "பித்ரு காரியங்கள்" செய்யும்போது ருத்திராக்ஷம் அணிந்து செய்தால், பித்ரு தேவதைகள் நித்ய திருப்தி உள்ளவர்களாகி மகிழ்வார்கள். எனவே குறிப்பிட்ட சில அசந்தர்ப்பங்கள் தவிர்த்து மற்ற எல்லா காலங்களிலும் ஒருவன் ருத்திராக்ஷம் அணிந்திருக்கலாம் என்று புராதன நூல்கள் குறிப்பிடுகின்றன.

சிவலோக பதவி சித்திக்கும்

ருத்திராக்ஷங்களை தொடர்ந்து அணிந்து கொள்வதாலும், வெண்மையான சிரௌதாக் கினியில் உண்டான விபூதியை திரிபுண்டரமாக (மூன்று விரல்களால் பட்டையாக) அணிந்து கொள்வதாலும் ருத்திரபாராயணம் செய்வதாலும், சிவய நம என்ற பஞ்சாக்ஷர ஜபம் செய்வதாலும், சிவமஹாபுராணங்களை கேட்பதாலும் சிவத் தொண்டுகள் புரிவதாலும், சிவலிங்க பூஜை செய்வதாலும், சிவஸ்தலங்களுக்கு பிரயாணம் மேற்கொண்டு தரிசிப்பதாலும், சிவதீர்த்தங்களில் நீராடுவதாலும் ஒருவன் பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கி "சிவலோகத்தை" அடைய முடியும். (சிவலோக பதவி என்பது மரணமில்லை.)

ருத்திராக்ஷ விருஷத்தின் சிறப்புகள்

ருத்திராஷ மரங்கள் நிறைய உள்ள வனங்களில் அம்மரங்களில் வாசம் செய்வதாலும், அம்மரத்தின் சருகு, இலை, தளிர், புஷ்பங்கள் நிழலில் படுவதாலும், அம்மரத்தின் மீது பட்ட தூசி, காற்று மேலே ஸ்பரிசிப்பதாலும், அம்மரத்தில் மலர்ந்த மலர்களின் நறுமணம் படும் தூரத்தில் இருப்பதாலும், அருகில் உள்ள புல், பூண்டு, மரம், செடி, கொடிகள், விலங்குகள், பறவையினங்கள், புழுபூச்சிகள், கிருமிகள் கூட தமது நிலையிலிருந்து உயர்ந்து, வெகு எளிதாக புண்ணிய பதவியை அடைகின்றன. எனவே அம் மரத்தின் முதிர்ந்த மணிகளை அணிபவன் எவ்வகை உயர்நிலைகளை அடைவான் என்பதை சொல்லவும் வேண்டுமோ.

7

ருத்திராக்ஷ மணிமாலைகள் கட்டும் முறை

★ ருத்திராக்ஷங்களை கோர்க்கும்போது அவற்றின் முகத்தோடு முகமும், அடியோடு அடியும் இருப்பது போல கோர்த்து கட்டிட வேண்டும் அப்போதுதான் அதன் வீரியம் மேலும் அதிகரிக்கும் என்கின்றன புராதன நூல்கள்.

★ பட்டுநூல், செம்புக்கம்பி, வெள்ளிக்கம்பி, தங்கக்கம்பி போன்றவற்றால் மட்டுமே ஜப மாலைகளை கட்ட வேண்டும் வேறு பொருள்களால் கட்டக்கூடாது. அதற்கு மத்திபமான பலன்களே ஏற்படும்.

★ கட்டும்போது மதுமாமிசம் உண்ணாமல் உபவாசமிருந்து தெய்வ சிந்தனையுடன் கட்ட வேண்டும், தெய்வ நம்பிக்கையில்லாத தீய நடத்தைகள் உள்ள, அபசார குணம் மிக்க ஆசர அனுஷ்டானங்கள் இல்லாத, பொற்கொல்லர்களிடம் தந்து கட்டக்கூடாது.

★ பொதுவாக ஜபம் செய்யும் அக்ஷமாலைகள் 51 எண்ணிக்கையுள்ள மணிகளே மிகச் சிறந்தவை, தனியாக ஒரு மணியை குஞ்சம் போல வைத்து டாலர் தொங்குவது போல கட்ட வேண்டும். இதற்கு "மேரு" மணி என்று பெயர்.

★ ஜபம் செய்யும் அக்ஷ மாலைகளில் ருத்திராக்ஷம் மட்டும் அல்ல இன்னும் சில மணிகளாலும் கட்டலாம், ஆம், முத்து, பவழம், ஸ்படிகம், சங்கு, சந்தனமணி, தாமரைமணி, பொன்மணி, வெள்ளி மணி, துளசி மணிகளாலும் அவரவர் சம்பிரதாயம், அவரவர் நிதி வசதிகட்கு ஏற்ப ஜபமாலைகளை கட்டிக் கொள்ளலாம்.

★ ருத்திராக்ஷங்களுக்கு இருபுறமும் பூவேலைப் பாடுகள் செய்த வெள்ளிக் குப்பி, தங்கக் குப்பி சேர்த்தும் கம்பியில் கட்டினால், அழகாக இருக்கும். மணியை முழுதும் மூடிவிடாமல்

இடை இடையே மணி வெளியில் தெரிய வேண்டும், அது உடலில் படுமாறு அணிவதற்காகவே இந்த முறை ஏற்பட்டது.

★ அக்கால மணிமாலைகளில் மணிக்கு கவசம் வைத்துக் கட்டாமல், ஒவ்வொரு மணிக்கு நடுவிலும் வெள்ளியில் அல்லது தங்கத்தில் வட்டமாக வில்லை செய்து கோர்த்துக் கட்டுவார்கள். அந்த வெள்ளி வில்லை, தங்க வில்லை முறை இப்போது தங்கவில்லை அல்லது மெள்ள மறைந்து வருகிறது என்று கூறலாம், சில ஆன்றோர்கள் அணிந்துள்ளார்கள்.

★ முதன் முதலாக கட்டி வந்த ருத்திராக்ஷ மாலைகளை, நீரில் சுத்தம் செய்து, சுவாமியிடம் வைத்து பூஜை செய்து சந்தன குங்குமம் வைத்து சிவாசாரியார்கள், மஹான்கள், குருமார்கள், தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா மற்ற பெரியார்களின் கையால் ஆசி பெற்று மாலையை அணிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு தினசரி சாதாரணமாக நாமே அணிந்து கொள்ளலாம்.

★ பல்வகை முகங்கள் உள்ள மணிகளை ஒரே மாலையாக கட்டக் கூடாது. இப்படிப்பட்ட கதம்ப மாலைகள் பலன் தராது, ஐந்துமுக மணிகள் என்றால் அவற்றால் மட்டுமே ஒருமாலை கட்ட வேண்டும், ஆறுமுக மணிகள் என்றால் அவற்றால் மட்டுமே ஒரு மாலை தொடுக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

★ நடு நடுவே, தங்கமணி, வெள்ளிமணி, முத்துமணி, பவள மணி, ஸ்படிக மணி என்று பலவர்ண மணிகளைக் கலந்தும் மாலை கட்டி அணிகிறார்கள். அவ்வாறு அணியலாம். அழகாக இருக்கும். ஆனால் தனியான ருத்திராக்ஷங்கள் வைத்து கட்டும் அளவுக்கு அது வீரியமுடையதாக இருக்காது. எனவே, மேற்படி மணிகளை மாலையாக அணிய விரும்புபவர்கள் அவற்றை தனி மாலையாக கட்டி அணியலாம். ருத்திராட்சங்களை தனியாகக் கட்டி அணியலாம்.

★ ருத்திராக்ஷ மணிமாலைகளை நாம் அணியாத சமயங் களில் அதனை மிகவும் பக்தியுடன் ஒரு இடத்தில் வைத்து பொன்நகைகளைவிட மேலாக பாதுகாக்க வேண்டும் இதனை போட்டுவைப்பதற்கு பட்டுத்துணியால் தைத்த சுருக்குப்பை, மண்பாத்திரம், சுரைக்குடுக்கை, தேங்காய் ஓட்டு பாத்திரம், தூய மரங்களால் செய்த பெட்டி, மற்றும் வெள்ளிப் பேழை, தங்கப் பேழைகள் போன்றவற்றை பயன்படுத்தலாம். வேறு வகையான பொருள்களில் வைக்கக்கூடாது.

★ பட்டு நூலில் தான் ருத்திராக்ஷ மணிகளைக் கோர்த்து அணிய வேண்டும் இயலாதவர்கள் பருத்தி இழைகளிலும் கோர்த்து அணியலாம், 21 இழைகளை எண்ணி சிவமந்திர ஜெபம் செய்தபடி முறுக்கேற்றி அதில் ருத்திராக்ஷ மணிகளைக் கோர்த்து பூஜித்து பின்பு அணிய வேண்டும்.

8

ருத்திராக்ஷ மணிகளை அணியும் முறை

ருத்திராக்ஷ மணிகளை நாம் நமது உடலில் எங்கெங்கு அணிந்து கொள்ள வேண்டும், எப்படி அணிந்து கொள்ள வேண்டும். எத்தனை மணிகள் அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணங்கள் உண்டு. அவற்றை இங்கே பார்க்கலாம். ருத்திராக்ஷங்கள் மின்காந்த ஆற்றல் மிக்கவை என்பதால் இவற்றிற்கெல்லாம் நற்பலன்கள் உண்டு.

சிகாமணி

1 முகம் உடைய ஒரு ருத்திராக்ஷ மணியை, அக்கால முனிவர் கள். தங்கள் “ஜடா முடியின்” உச்சியில் அணிவார்கள். இதற்கு **“சிகாமணி”** என்று பெயர். நம் யோக சாஸ்திரத்தின் அடிப்படை யில், உச்சிக்குமேல் 12 அங்குலம் வரை வியாபித்துள்ள அந்த “துவாதசாந்தம்” எனும் ஸ்தானத்தை சிவமணியால் அலங்கரிப் பதே இது, அதன்படி அணிபவன் சிறந்த ஞானியாவான்.

சிரோன்மணி

1 முகம் உடைய ஒரு ருத்திராக்ஷ மணியை ஜடாமுடி இல்லாது, சாதாரணமாக இருப்பவர்கள். தங்கள் தலை உச்சியில் அணிந்து கொள்வதே இது, இதற்கு **சிரோன்மணி** என்று பெயர். இதனை பிரம்மரந்திரம் என்று அழைக்கப்படும் நம் உச்சிக்குழி யில் படும் வண்ணம் அணிந்து கொள்ள வேண்டும், இதனால் சிறந்த சிவஞானம் சித்திக்கும், கல்விக்கும் இதற்கும் தத்துவ சம்பந்தம் உண்டு.

சிரோபந்தனம்

11 முகங்கள் கொண்ட 36 மணிகள் அல்லது 40 மணிகளை மாலையாகக் கோர்த்து நம் தலையை சுற்றிலும் பரிவட்டம் (முண்டாசு எனும் தலைப்பாகை) கட்டுவது போல அணிய வேண்டும், இதனை சில மடாதிபதிகள் அணிந்திருப்பதை இன்றும் பார்க்கலாம், இதற்கு **சிரோபந்தனம்** என்று பெயர்.

லலாட பந்தனம்

1 முகம் 2 முகம் 3 முகம் உள்ள மூன்று மணிகளை வரிசை யாகக் கட்டி அதனை அக்கால ஞானிகள் நெற்றிப்பட்டம் போல அணிந்தார்கள். இது **லலாட பந்தனம்**, இம்முறை வழக்கொழிந்து விட்டது. இம்மூன்று மணிகளும், சூரியன், சந்திரன், அக்கினி எனும் சக்திகளைக் குறிப்பதாகும்.

நேத்திர பந்தனம்

1 முகம் மற்றும் 2 முகம் உள்ள மணிகள் இரண்டை, சற்று இடைவெளி விட்டு கட்டி அதனை கண் இமைகளின் மேல் படும்படி "மூக்குக் கண்ணாடி" போல அணிவதும் ஒரு பழங்கால முறை. இதற்கு **"நேத்திர பந்தனம்"** என்று பெயர் இம்முறையும் இன்று வழக்கத்தில் இல்லை, ஞானியர் சிலர் இவ்வாறு அணிந்து கொண்டார்களாம், இதற்குக் காரணம் மஹான்களை தரிசனம் செய்ய சில மஹா பாபிகளும் வருவார்கள், அவர்கள் முகத்தில் நேராக விழித்தால் அதனால் ஒரு பாபம் வரும், பார்க்காமல் இருக்கவும் முடியாது. இந்த தர்ம சங்கடத்தை தீர்க்கவே இந்த "நேத்திர பந்தனம்". இதனை இமைகளில் படுமாறு கட்டி பார்த்தால் பாபிகளை பார்த்த பாபம் வராதாம்.

ருத்திராக்ஷ குண்டலம்

5 முகம், 7 முகம், 10 முக மணிகளை வகை ஒன்றுக்கு 4 மணிகள் வீதம் 12 மணிகள் எடுத்து, காது ஒன்றுக்கு 6 மணிகள் வீதம் வளையமாகக் கட்டி அணிய வேண்டும். இதற்கு **ருத்திராக்ஷ குண்டலம்** அல்லது **கர்ண குண்டலம்** என்று பெயர்.

கர்ணாபரணம்

5 முகம் 7 முகம் அல்லது 10 முக மணியில், ஏதாவது இரண்டை எடுத்து அதனை தோடுபோல கம்பியில் கட்டி, காது ஒன்றுக்கு ஒரு ருத்திராக்ஷ மணி மட்டுமே அணிவது இது, இதற்கு **கர்ணாபரணம்** என்று பெயர் (1 மணி மட்டுமே அணிவதைவிட 6 மணிகள் அணிவதே சிறந்த முறையாகும்)

கண்ட ருத்திராக்ஷம்

3, முகம் 4 முகம் அல்லது 5 முகம் 6 முகம் உடைய மணிகளில் ஏதாவது ஒன்றை மட்டும் எடுத்து, அதை பட்டுநூல் அல்லது வெள்ளி பொற்கம்பிகளில் கட்டி உட்கழுத்தில் அணிவதே இது. இதற்கு "கண்ட ருத்திராக்ஷம்" என்று பெயர்.

கண்ட மாலை

6 முகம் 8 முகம் உள்ள ருத்திராக்ஷ மணிகளில், 32 மணிகளை மட்டும் சேர்த்துக் கட்டி, கழுத்தில் வளையமாக அணிவது இது. இதற்கு "கண்டமாலை" என்று பெயர்.

ஜபாக்ஷ மாலை

4 முகங்கள் கொண்ட 50 மணிகளை மாலையாகக் கட்டி, தனி ஒரு மணியை குஞ்சம் போல "மேரு" மணியாகக் கட்டி, "கண்ட மாலைக்கு" அடுத்த சுற்றில் அணிவது இது, "மேருமணிக்கு" கௌரீ சங்கரம் என்ற மணியையும் இணைத்துக் கட்டி இதனை அணிந்து கொள்ளலாம், பட்டுப்பை, மர, செம்பு, வெள்ளி, பொன், பேழைகளிலும் வைத்துக் கொள்ளலாம், இது ஜபம் செய்ய வும் பயன்படும் ஆகையால், "ஜபாக்ஷ மாலை" என்று பெயர்.

யக்ஞ சூத்திரம்

14 முகங்கள் கொண்ட 108 மணிகளை மாலையாகக் கட்டி இடது தோளில் மாட்டி, வலது புறமாகத் தொங்கவிட்டு, பூணூல் போல் அணிய வேண்டும். இது ருத்திராக்ஷ யக்ஞ சூத்ரம் ஆகும். இதற்கு பதிலாக ஒரே ஒரு 14 முக மணியை மட்டும் பூணூலில் கோர்த்து கட்டிக் கொள்வதும் உண்டு.

ருத்திராக்ஷ ஹாரம்

4 முகம் 5 முக மணிகள் 108 எண்ணிக்கை எடுத்து நீண்ட வளையமாக தொடுத்து, மார்பில் அணிவது இது. நீண்டு வயிறு வரையில் தொங்கும் இதற்கு "ருத்திராக்ஷ ஹாரம்" என்று பெயர்.



ருத்திராக்ஷ கவசம்

மேலும் மேற்கண்ட மணிவகைகளில் 1008; 10,008 என்ற எண்ணிக்கைகளில் மாலை தொடுத்து, சுற்றிச் சுற்றி மார்பு முழுதும் மூடிவிடுவதுபோல அணிவது இது. இது மார்பு முழுவதும் தெரியாத வண்ணம் மூடி, ஒரு கவசம் போல இருக்கும்.

உதர பந்தனம்

4 முகங்கள் கொண்ட ருத்திராக்ஷங்களை 32 முதல் 40 மணிகள் வரை வயிற்றைச் சுற்றிலும் "கச்சு" போல அணியலாம். இதற்கு "உதர பந்தனம்" என்று பெயர்.

வாகு வலயம்

13 முகங்கள் கொண்ட ருத்திராக்ஷ மணிகளை தோளணியாக (தாயத்து கட்டுமிடத்தில்) பக்கத்திற்கு 16 மணிகள் வீதம் மொத்தம் 32 மணிகள் அணிய வேண்டும், இதற்கு "வாகு வலயம்" அல்லது "தோள் வளை" என்று பெயர்.

கடகம்

9 முகங்கள் கொண்ட ருத்திராக்ஷ மணிகளை, வலது இடது மணிக்கட்டுகளில், பக்கம் ஒன்றுக்கு 12 மணிகள் வீதம் மொத்தம் 24 மணிகள் அணிய வேண்டும், இதற்கு "கடகம்" அல்லது "கைவளை" என்று பெயர்.

வாரத்தின் ஏழு கிழமைகளில் பிறந்தவர்கள் அணிய வேண்டிய ருத்திராக்ஷ மணிகள்

வ.எண்	கிழமை	கிரகம்	அதிதேவதை	பிரதி தேவதை	அணிய வேண்டிய ருத்திராக்ஷ மணிகள்
1.	ஞாயிறு	சூரியன்	அக்னி	ருத்திரன்	1-3-5-11 முக மணிகள்
2.	திங்கள்	சந்திரன்	வருணன்	துர்க்கை, உமா	2-5-7 முக மணிகள்
3.	செவ்வாய்	அங்காரகன்	பூமிதேவி	ஷண்முகர்	3-7-6 முக மணிகள்
4.	[illegible]	புதன்	விஷ்ணு	புருஷோத்தமர்	4-10-21 முக மணிகள்
5.	வியாழன்	குரு	இந்திரன்	பிரம்மா	5-8-4 முக மணிகள்
6.	வெள்ளி	சுக்கிரன்	இந்திராணி	இந்திரன்	6-7-8 முக மணிகள்
7.	சனி	சனைச்சரன்	யமன்	பிரம்மா	7-3-4 முக மணிகள்

பனிரெண்டு ராசிகள் லக்னங்களில் பிறந்தவர்கள் அணிய வேண்டிய ருத்திராக்ஷ மணிகள்

வ.எண்	குறியீடு	ராசி லக்னம்	ராசி அதிபதி	சாதக கிரஹங்கள்	அணிய வேண்டிய ருத்திராக்ஷ மணிகள்
1.		மேஷம்	செவ்வாய்	செவ்வாய் குரு	3 முக 5 முக மணிகள்
2.		ரிஷபம்	சுக்கிரன்	புதன் சனி	6 முக 4 முக 7 முக மணிகள்
3.		மிதுனம்	புதன்	புதன் சுக்கிரன்	4 முக 6 முக மணிகள்
4.		கடகம்	சந்திரன்	சந்திரன் செவ்வாய்	3 முக 2 முக மணிகள்
5.		சிம்மம்	சூரியன்	சூரியன் செவ்வாய்	1 முக 12 முக 3 முக மணிகள்
6.		கன்னி	புதன்	புதன் சுக்கிரன்	4 முக 6 முக மணிகள்
7.		துலாம்	சுக்கிரன்	சுக்கிரன் சனி	6 முக 7 முக மணிகள்
8.		விருச்சிகம்	செவ்வாய்	குரு சந்திரன்	3 முக 5 முக 2 முக மணிகள்
9.		தனுசு	குரு	குரு சூரியன்	5 முக 1 முக 12 முக மணிகள்
10.		மகரம்	சனி	சனி சுக்கிரன்	7 முக 6 முக மணிகள்
11.		கும்பம்	சனி	சனி சுக்கிரன்	7 முக 6 முக மணிகள்
12.		மீனம்	குரு	குரு செவ்வாய்	5 முக 3 முக மணிகள்

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் அணிய வேண்டிய ருத்திராக்ஷ மணிகள்

வ.எண்	நக்ஷத்திரம்	அதிபதி	ருத்திராக்ஷ மணிகள்
1.	அஸ்வினி	கேது	9 முக மணிகள்
2.	பரணி	சுக்கிரன்	6 முக மணிகள்
3.	கார்த்திகை	சூரியன்	1-3-11-12 முக மணிகள்
4.	ரோகிணி	சந்திரன்	2 முக மணிகள்
5.	மிருகசீரிடம்	செவ்வாய்	3 முக மணிகள்
6.	திருவாதிரை	ராகு	8-5-11 முக மணிகள்
7.	புனர்பூசம்	குரு	5 முக மணிகள்
8.	பூசம்	சனி	7 முக மணிகள்
9.	ஆயில்யம்	புதன்	4 முக மணிகள்
10.	மகம்	கேது	9-2-3 முக மணிகள்
11.	பூரம்	சுக்கிரன்	6 முக மணிகள்
12.	உத்திரம்	சூரியன்	1-3-12 முக மணிகள்
13.	ஹஸ்தம்	சந்திரன்	2 முக மணிகள்
14.	சித்திரை	செவ்வாய்	3 முக மணிகள்
15.	சுவாதி	ராகு	8-5-11 முகமணிகள்
16.	விசாகம்	குரு	5 முக மணிகள்
17.	அனுஷம்	சனி	7 முக மணிகள்
18.	கேட்டை	புதன்	4 முக மணிகள்
19.	மூலம்	கேது	9-2-3 முக மணிகள்
20.	பூராடம்	சுக்கிரன்	6 முக மணிகள்
21.	உத்திராடம்	சூரியன்	1-3-11-12 முக மணிகள்
22.	திருவோணம்	சந்திரன்	2 முக மணிகள்
23.	அவிட்டம்	செவ்வாய்	3 முக மணிகள்
24.	சதயம்	ராகு	8 முக மணிகள்
25.	பூரட்டாதி	குரு	5 முக மணிகள்
26.	உத்திரட்டாதி	சனி	7 முக மணிகள்
27.	ரேவதி	புதன்	4 முக மணிகள்

9

ருத்திராக்ஷ மணிகளை யார் யார் அணிந்து கொள்ளலாம்?

★ ருத்திராக்ஷங்களில் வெண்மை நிற மணிகளை பிராமணர்களும் வேதம், ஆகமம், புராணம் இதிகாசம் போன்றவற்றை நன்கு பயின்ற ஆசான்களும், ரிஷிகளும், குருக்களும், சிவாசாரியார்களும் அணிந்து கொள்ளலாம். ஏனெனில் இவை மிகவும் புனிதமானவை. ஆசார அனுஷ்டானங்களுடன் போற்றத்தக்கவை "ஆசூசம்" என்ற தீண்டல்கள் படக்கூடாதவை.

★ செந்நிற மணிகளை அரசர்கள், அரசில் அங்கம் வகிக்கும், எம்.எல்.ஏ., எம்.பிக்கள், மந்திரிகள், ஆளுனர்கள், அரசு உயரதிகாரிகள் அரசு சார்ந்த உத்யோகஸ்தர்கள், ராணுவத்துறை, போலீஸ், தனியார் காவலர்கள் என மக்கள் பாதுகாப்பு மற்றும் ஆட்சி நிர்வாகத்துறை அமைப்பில் உள்ள அனைவருமே அணியலாம். இவ்வகை மணிகள் அவர்களை பாதுகாத்து அவர்களின் நிலையையும், வீரியத்தையும் உயர்த்தும்.

★ செம்மையும், பொன்மை நிறமும் கொண்ட மணிகளை, வியாபாரிகள், கணக்கர்கள், நிதி நிர்வாகிகள், வியாபார முகவர்கள், கல்வியாளர்கள், புள்ளியியல் துறை வல்லுனர்கள் என பலரும் அணியலாம். இவை அவர்களின் திறனை மேலும் மேம்படுத்தும். ஒரு ரக்ஷை போல இருந்து அவர்களை காக்கும்.

★ கறுப்பு நிறம் கொண்ட மணிகள் கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடுவோர் உடல் திறனால் வெற்றி பெறுவோர், என மற்ற அனைத்து பிரிவினரும் அணிந்து கொள்ளலாம், இவை அவர்களைக் காப்பாற்றி அவர்களின் திறனை மேன்மேலும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

பெண்கள் மாங்கல்யம் எனும் தாலிச் சரட்டிலும், பூணூல் அணியும் மரபினை சேர்ந்தவர்கள் பூணூலிலும், பொற்சங்கிலி களை கழுத்தில் அணிபவர்கள், அவற்றில் சேர்க்கப்படும் புலிநகம், டாலர் போன்றவற்றிற்கு பதிலாக அந்த இடத்திலும், "பிரேஸ் லேட்" என்ற கையழகு வளை அணிபவர்கள் அவற்றிலும், சிறந்த வகை ருத்திராக்ஷங் களை அணிந்து கொள்ளலாம்.

ருத்திராக்ஷ மணிகளை பெண்களும் அணியலாம்

சைவ சமயத்தில் "மனோன்மணி" என்பதும் ஒரு பெண்பால் தெய்வம் இவள் "சதாசிவர்" என்ற சிவவடிவத்திற்கு பெண் பால் சக்தியாவாள். இவள் ருத்திராக்ஷ மணிமாலையை கையில் பிடித்து ஜபம் செய்யும் காட்சியை

இந்து நிபவேத கர வன்னி நயனம் ஸ்யாத்
பங்கஜ வரதாபய ஜபாக்ஷ பல யுக்தம்
அங்க ஹிம பூஷண விசித்ர நயனம் ஸ்யாத்
துங்க மகுடோத்பல மனோன்மணி ஸ்வரூபம்

என்ற ரூபத்தியானத்தின் மூலம் தெரிவிக்கிறது சமஸ்கிருத நூல்கள். இதில் "ஜபாக்ஷ" என்ற வார்த்தை ருத்திராக்ஷ மணி மாலையை குறிப்பிடுகிறது.

பெண்கள் சிறந்த தெய்வமாக வணங்குவது ஸ்ரீ ஆதிபராசக்தியை. அவ்வம்மையும் ருத்திராக்ஷம் அணிந்துள்ளாள் என்பது புராதன நூல்களில் காணப்படும் செய்தி. இதனை, **"கொந்தளகம் சடை பிடித்து விரித்து பொன் தோள் குழை கழுத்தில் கண்டிகையின் குப்பை பூட்டி"** என்று பதிவு செய்துள்ளது "அருணாசல புராணம்" என்ற திருவண்ணாமலை ஸ்தலம் பற்றிய தொன்னூல்.

ஆனைக்காவில் அரசாளும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அட்ச மணி அணிந்த செய்தியினை **"இழியும் பழி பாதகம் முழுதும் இரிக்கும் நீறும், கண்மணியும் மொழியும் பனுவல் விதியாற்றான் முழுதும் திருமேனியில் அணிந்தாள்"** என்கிறது **"திருவானைக் கோயில்"** ஸ்தல புராண நூல்.

சிவ மஹா புராணமோ **"ஸர்வாஸ்ரமாணாம் ஸர்ணானாம் ஸ்திரீ...** என்ற வாக்கியத்தின் மூலமாக, பிரம்மச்சரியம், கிரஹஸ் தாஸ்ரமம், வானப் பிரஸ்தம் சன்னியாசம் என்ற எல்லா ஆசிரம வாழ்க்கையில் உள்ளவர்களும், பெண்களும் ருத்திராக்ஷம் அணிந்து கொள்ளலாம் என்று அறிவுறுத்துகிறது.

பெண்கள் தங்களின் **"திருமாங்கல்யம்"** என்ற தாலிக்கொடி யில் அவர் அவர்களின் மரபை ஒட்டி சிவச்சின்னம், வைணவச் சின்னங்களை அணிகிறார்கள் அது போலவே பொன்மணி, குண்டு, பவழ மணி என்று "உப மணிகளும்" அணிகிறார்கள் அதுபோலவே சற்று சிறியதாக உள்ள சிறந்த வகை ருத்திராக்ஷ மணிகளையும் அணியலாம். சற்று வயதானவர்கள் பெரிய ருத்திராக்ஷ மணிமாலைகளும் அணியலாம்.

- நன்றி **ஆனந்த நிலையம் ருத்திராக்ஷம்**

ருத்திராக்ஷத்தால் நந்தை என்பாள் பெற்ற நற்கதி

முன்பொரு காலத்தில் "நந்தை" என்று ஒரு பெண்மணி இருந்தாள், அவள் ருத்திராக்ஷம் என்னும் சிவமணிகளைப் பூண்டு சிறப்புடன் சிவபூஜை செய்து வந்தாள் அதனால் அந்தப் பெண் ஒரு பிறப்பிலேயே சிவ சாயுஜ்யம் பெற்றாள்.

அவள் தாம் வளர்த்து வந்த கோழிக்கும் குரங்கிற்கும் கூட ருத்திராக்ஷ மணிகளை அணிவித்திருந்தாள். அதனால் கோழி மறுபிறப்பில் "காஷ்மீரத்து" அரசன் புத்திரனாகி அந்நாட்டு இள வரசன் ஆனது. குரங்கு அந்த அரசனின் மந்திரியாகிய சுதன்மாவின் மகன் "தாரகன்" என்பவனாகப் பிறந்து முக்தி பெற்றன. இதனால் ருத்திராக்ஷத்தின் பெருமைகள் நன்றாகப் புலப்படும்.

10

ருத்திராக்ஷ மரம் சில தாவரவியல் தகவல்கள்

ருத்திராக்ஷ மணி என்பது ஒருவகை மரத்தின் விதைகளே ஆகும். இது அம்மரத்தில் பழுக்கும் ருத்திராக்ஷப் பழங்களிலிருந்து கிடைக்கின்றன, இவ்வகை விருக்ஷங்களுக்கு நம் நாட்டு ஞானி யர்கள் அருளிய பெயர் "ருத்திராக்ஷ மரம்" என்பதே. என்றாலும் இதற்கு "தாவரவியல் விஞ்ஞானம்" தரும் பெயர் வேறாகும்.

"எலோயோ கார்பஸ்" (Eloeocarpus) என்பது இவ்வகை மரங்களின் பொதுப் பெயராகும். மேலும் "எலோயோ கார்பஸ் ஜெனிட்ரஸ்" (Eloeocarpus Genitrus) "எலோயோ கார்பஸ் செர்ரடஸ்" (Eloeocarpus Serratus) மற்றும் "எலோயோகார்பஸ் டியூபர்குலேடஸ்" (Eloeocarpus Tuberculatus) என்ற பெயர்களுடன் ஏறக்குறைய இவற்றில் 25 வகையான மரங்கள் உள்ளன.

இவ்வகை மரங்கள் முழு வளர்ச்சி அடைந்து பயன்தர 12 முதல் 15 ஆண்டுகள் வரை ஆகின்றன, நன்கு முற்றிய மரங்கள் 80 அடி உயரம் வரை வளரும். இவை சராசரியாக 100 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. இவற்றில் இலைகள் பச்சை நிறமாகவும், பூக்கள் வெண்மை நிறமாகவும், காய்கள் பச்சைநிறமாகவும், கனிகள் கருநீல நிறமாகவும் இருக்கும். இக்கனிகளிலிருந்து கிடைக்கும் கொட்டையே ருத்திராக்ஷ மணிகள்.

ருத்திராக்ஷங்கள் விளையுமிடங்கள்

ருத்திராக்ஷ மரங்கள் வெளிநாடுகளில் தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளான ஜாவா, சுமத்ரா, போர்னியோ, பாலி, இரியன்

ஜாயா போன்ற பகுதிகளிலும், நேபாள நாட்டிலும் நம் இந்திய நாட்டின் சில பகுதிகளிலும் விளைகின்றன. இவற்றில் "இந்தோ னேஷியா" மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில் 70 சதவிகித மும், நேபாள தேசத்தில் 25 சதவிகிதமும், நம் இந்தியாவில் வெறும் 5 சதவிகிதம் மட்டுமே ருத்திராக்ஷ மணிகள் கிடைக்கின்றன.

தாவரவில் வரலாற்றிலேயே இயற்கையாகவே "துவாரங்கள்" அமைந்ததும் இயற்கையாகவே "கோடுகள்" என்ற "முகங்கள்" அமையப் பெற்றதுமான அமைப்பு, ருத்திராக்ஷ மணிகளுக்கு மட்டுமே உண்டு. இது இறைவன் தந்த இயற்கையின் அதிசயப் பரிசாகும்.

ருத்திராக்ஷ மணிகளின் குறுக்கு வெட்டுத் தோற்றம் அதிக பட்சம் 1 அங்குலம் வரை இருக்கும். ஒரு முழு நெல்லிக் காயளவே இருக்கும் ஒரு ருத்திராக்ஷம். இவற்றில் சிறிய வகைகளும் உள்ளன.

ருத்திராக்ஷத்தின் ஆற்றல்கள் பல்லாண்டுகளாகவே பல ஞானிகளுக்கு தெரிந்திருந்த போதிலும் 1980களுக்குப்பிறகே சாதாரண மக்களிடமும் இம்மணிகள் பிரபலமடையத் துவெங்கின. இன்று ருத்திராக்ஷங்கள் வியாபார ரீதியாக வெற்றிபெற்று வரு கின்றன. தங்கநகைகக் கடைகளில் ருத்திராக்ஷ மணிகள் வந்து விட்டன. இதற்காக தனிக்கண்காட்சிகள் பல தனியார் கண் காட்சிக் கூடம், மற்றும் ஆடம்பரமான 3 நக்ஷத்திர 5 நட்சத்திர ஹோட்டல்களிலும் நடைபெறுகின்றன.

அவற்றில் ரூ. 50 முதல் லட்சக்கணக்கான ரூபாய் வரை ருத்திராக்ஷங்கள் விலைபோகின்றன என்பது ஹிந்துக்கள் பெருமை கொள்ள வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

ருத்திராக்ஷ மணிகளை அணிய வேண்டிய காலங்கள்

வேத பாராயணம், வேதம் கற்றல், சந்தியாவந்தனம், சிவநாம ஜெபம், சிவபூஜை, சிவமஹா புராணங்கள் ஓதுதல், ஓதுவதை கேட்டல், சிவத்தியானம், சிவாலய தரிசனம், தேவார திருவாசகம் ஓதும் காலம், அவற்றை கூடியிருந்து கேட்கும் காலம் ஸ்தலங்களை சென்று தரிசிக்கும் சமயம் புனித தீர்த்தங்களில் நீராடல், விரதம் இயற்றும் காலங்கள், நீத்தார் நினைவு நாளில் செய்யும் சிராத்த கால சடங்குகள், வீட்டில் நடக்கும் புனித விழாக் காலங்கள் என்று அனைத்திலும் ருத்திராக்ஷ மணிகளை அணியலாம்.

11

ருத்திராக்ஷ மணிகள் பற்றிய விஞ்ஞான விந்தைகள்

1980ஆம் ஆண்டு வடநாட்டில் உள்ள வாரணாசி பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பிரிவுகள் துறையில் பணிபுரிந்த டாக்டர். சுஹாஸ்ராய் (Dr. Suhaas Rai) என்பவர் முயற்சியில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் "ருத்திராக்ஷ மணிகள்" உலகப் புகழ் பெறத் துவங்கின.

அவர் "வேதியியல் துறை" (Biochemistry) மனநோய் மருத்துவத் துறையில் உள்ள, மின் தொழில் நுட்ப மனநோய் மருத்துவப் பிரிவு (psychiatry) பொது மருத்துவத்துறை, மற்றும் உளவியல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து மேற்கொண்ட "ருத்திராக்ஷ மணிகள்" பற்றிய ஆய்வில், ருத்திராக்ஷங்களின் உண்மையான ஆற்றல்கள் வெளிப்பட்டன.

ருத்திராக்ஷ மணிகளுக்கு உள்ள அணுக்க மின்பாய்வு தன்மை (Inductive) காந்த முனைகளால் ஈர்க்கப்படும் தன்மை (paramagnetic) மற்றும் சக்தி மிகுந்த அதன் மின்காந்தப் பண்புகள் (Electro magnetic) என்று ருத்திராக்ஷத்தின் அனைத்து ஆற்றல்களையும் இவர்கள் விஞ்ஞான பூர்வமாக ஆய்ந்து நிறுவினார்கள்.

ருத்திராக்ஷ மணிகளின் இந்த ஆற்றல்மிகு செயல்பாடுகள், ருத்திராக்ஷ முகங்கள் என்று நாம் கருதும் ஆழ்ந்த கோடுகள், மற்றும் அவற்றுக்கு இடையில் உள்ள குறுகிய அல்லது அகன்ற இடைவெளிகளை மையமாக வைத்தே நிகழ்கின்றன என்பதையும் கண்டறிந்து வெளியிட்டார்கள்.

இதனால் பல வெளிநாடுகளுக்கும் ருத்திராக்ஷ மணிகளின் மகிமை பரவத் தொடங்கியது.

ருத்திராக்ஷங்களை பல்லாயிரம் ஆண்டுகளாகவே இந்தியாவில் உள்ள இந்துக்கள் மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும்,

பிறகு கொரியர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள் என்று பலரும் சில நூற்றாண்டுகளாக பயன்படுத்தி வருகின்றனர். "சென்" மதத்தினரும் பௌத்த சமயம் சார்ந்தோர்களும் ருத்திராக்ஷங்கள் பயன்படுத்து கின்றனர். ஆனால் இன்று பல்வேறு நாட்டினரும் பல்வேறு சமயம் சார்ந்தவர்களும் ருத்திராக்ஷத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

மேலை நாட்டினரும், கிறித்தவ மதம் சார்ந்த வெள்ளை இன மக்களும் கூட இன்று ருத்திராக்ஷ மணிகளை பயன்படுத்தத் துவங்கிவிட்டனர். இதற்காக வேதகாலம் முதலே இம்மணிகளின் பெருமையை உணர்ந்து அணியும் இந்துக்களான நாம் மிகவும் பெருமை கொள்ளலாம். இதிலிருந்தே நம் முன்னோர்கள் எவ்வளவு சிறந்தவர்கள் நம் ரிஷிகளும் ஞானியர்களும் எவ்வளவு அறிவாற்றல்கள் நிரம்பப் பெற்றவர்கள் என்பது புலப்படும்.

★ ருத்திராக்ஷமணிகள் ஆற்றல் மிக்கவை மின்காந்த ஆற்றல்கள் இம்மணிகளுக்கு உண்டு, அதனால் இதனை அணிந்து கொள்வோர் களின் ரத்த அழுத்தத்தை அதிகமாகவோ அல்லது மிகக் குறை வாகவோ இன்றி. சமமான நிலையில் வைத்துக் கொள்கிறது.

★ ருத்திராக்ஷ மணிகளை அணிந்தவர்கள் மூளையின் செயல் திறனில் முன்னேற்றம் ஏற்படுகிறது. நினைவுத்திறன் மேம்படுகிறது. சிவனின் "சந்திர" மயமான கண்களிலிருந்து தோன்றிய வெள்ளை நிற ருத்திராக்ஷ மணிகளுக்கு இந்த தன்மைகள் உண்டு. மூளைக் கும், மனோசக்திக்கும், சந்திரனின் கதிர்வீச்சுகளுக்கும் தொடர்பு உள்ளதாலேயே இது நிகழ்கிறது.

★ ருத்திராக்ஷ மணிகளை அணிந்தவர்களை பெரும்பாலான பல நோய்கள் நெருங்குவதில்லை ஏனெனில் இம்மணிகள் உடலை யும், மனதையும், உற்சாகமாக வைத்து உள்ளுடம்பின் "நோய் எதிர்ப்பு சக்தியை" வளர்ச்சிபெறச் செய்கிறது.

★ ருத்திராட்சங்களை தொடர்ந்து அணியும் ஒரு மனிதனின் மனம் ஒருமுகப்படுகிறது. "தன்முனைப்பு" அதிகரிக்கிறது. நன்மை களை நோக்கிய நடை வேகப்படுகிறது. நியாய தர்மங்களுக்குக் கட்டுப்படும் தன்மை அதிகரிக்கிறது.

★ ருத்திராக்ஷ மணிகளை அணிபவர்களுக்கு சுவாச கோசங் கள் சீராகி "பிராணாயாமம்" செய்யக்கூடிய தகுதி ஏற்படுகிறது. மனம் "கூர்மை" நோக்கம் கொண்டு தியானம், ஜபம் போன்றவை சித்திக்க உதவி புரிகிறது. யோக சாதனைகளுக்கான வழிகள் திறந்து "குண்டலினி" சக்தியை நோக்கி பயணித்து அதில் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகரிகிறது. சிவ சிந்தனை ஏற்பட்டு இறைநினைவோடு ஆன்மீக உயர்நிலைகளை எட்டுவதற்கான பாதையில் பயணம் புரிய உதவி செய்கிறது.

12

ருத்திராக்ஷ மணிகளின் மருத்துவ குணங்கள்

ருத்திராக்ஷம் என்னும் சிவமணி வெறும் அழகுச் சாதனம் அல்ல, அது புனிதத் தன்மை மிக்கது. வெறும் ஆன்மீக அணிகலன் மட்டுமல்ல, அது மருத்தவ குணங்களும் மிக்கது. பல்வேறு நோய் களை குணப்படுத்தும். வியாதிகளை சமனம் செய்யும் மகிமைத் தன்மைகள் அதற்கு உண்டு. ருத்திராக்ஷம் பல்வேறு நோய்களை குணமாக்கும் என்றாலும் பயன்படுத்தும் வழிமுறைகளை தெரிந்த சில மருத்துவ முறைகளை மட்டும் இங்கே பார்க்கலாம். இவற்றை பயன்படுத்தி சுகம் பெறவும்.

தேள் கடி பூரான் கடி விஷத்தை நீக்கும்

ஐந்து முக ருத்திராக்ஷம் எளிதாகக் கிடைக்கும், அதனை எடுத்து எலுமிச்சை சாறு விட்டு சந்தனம் இழைக்கும் கல்லில் மை போல் இழைத்து தேள் கொட்டிய, அல்லது பூரான் கடித்த கடிவாயில் வைத்து சூடுபறக்கத் தேய்த்து, 1 மூடி தேங்காயை கீறி பத்தைகளாக்கி கடித்து தின்றால் விஷம் போகும், நெஞ்சடைப் பது நிற்கும் கடிவாயில் கடுகடுப்பு குறையும்.

மாதவிடாய் கால வயிற்று வலியை நீக்கும்

ஒரு ருத்திராக்ஷ மணியை எடுத்து கல்லில் இழைத்து, மலைத் தேனும் செஞ்சந்தனம் சேர்த்து வெற்றிலையில் வைத்து நக்கிச் சாப்பிட்டால் பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளால் வரும், கடுமையான வயிற்றுவலி நீங்கும். மற்றவர்களுக்கு ஏற்பட்ட சாதாரண வயிற்று நோயும் போகும்.

தோல் நோய்கள் போக்கும்

நாகவல்லி மற்றும் கருந்துளசி, வெண்மிளகு, வேப்பம் பருப்புடன் ருத்திராக்ஷம் பவுடரும் சேர்த்து கழுதைப் பாலில் கலந்து உடல் எங்கும் (1 மண்டலம்) பூசி ½ மணி நேரம் ஊறவிட்டு பின்பு குளித்தால் கடுமையான தோல் நோய்கள் நீங்கும்.

புண்கள் கொப்புளங்களை ஆற்றும்

தீயினால் சுட்ட புண்கள், அம்மை நோய் முதலியவற்றை ருத்திராக்ஷம் மாற்றும். தீப்புண்கள் மீதும் அம்மை கொப்புளங் கள் மீதும் ருத்திராக்ஷக் கொட்டைகளை பாலில் அறைத்து சந்தனம் போல் பற்றுப் போட்டால் உடன் காயங்கள் ஆறும், கொப்புள வடுக்கள் கூட மறைந்து போகும்.

இரத்த அழுத்தம் போக்கும்

ருத்திராக்ஷத்தை தண்ணீரில் இட்டு ஊறவைத்து அந்த நீரில் மஞ்சள் தூள் கலந்து குடித்தால், குத்திருமல், ரத்த வாந்தி போன்றவை கூட குணமாகிவிடும். அதுமட்டுமல்ல, துளசி தீர்த்தத்தோடு ருத்திராக்ஷம் இழைத்த நீரையும் சேர்த்து அருந்தி னால் உடல் ரத்த அழுத்தம் உடனே சீராகும்.

கரு உற்பத்தியை தள்ளிப்போடும்

ருத்திராக்ஷத்தின் பழம் மற்றும் மிளகு கலந்த நீரைப் பருகி னால் மங்கையர்கள் கர்ப்பம் தரிக்கும் காலத்தை கொஞ்சம் தள்ளிப் போடலாம். அதற்காக கருத்தடை மாத்திரைகள் சாப்பிட்டு உடலையும் மனதையும் கெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

பக்க வாதத்தை நீக்கும்

காய்ச்சிய பசும் பாலில் ருத்திராக்ஷத்தை இழைத்து அந்த பாலை குழந்தைகளுக்கு அருந்தக் கொடுத்தால், கக்குவான், இருமல் கட்டுப்படும் இதேபோல பெரியவர்கள் தொடர்ந்து 3

ருத்திராக்ஷ மணிகளை அணியக்கூடாத காலங்கள்

குழந்தை பிறந்த தீண்டல், மரணமடைந்த தீண்டல், மாதவிலக்கு தீண்டல், குஷ்டரோகம் போன்ற பெரு நோயுற்ற காலங்கள், தாம்பத்யத்தில் ஈடுபடும் சமயம், மலம் கழிக்கும் நேரம், தூங்கும் சமயங்களில் ருத்திராக்ஷம் மணிமாலைகளை கழற்றி வைத்துவிட வேண்டும், இந்த சமயங்களில் ருத்திராக்ஷம் அணியக் கூடாது. அணிந்தால் தோஷம் ஏற்படும்.

மாதங்கள் வரை குடித்தால் பக்கவாதம் போன்ற பெரிய நோய்களும் மெள்ள குணமாகிவிடும்.

மன இறுக்கம், கோபம் தீர்க்கும்

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தூய்மையான நீரை எடுத்துக் கொள்ளுங்கள். முதல் நாள் சூரியன் மறைந்த பிறகு இரண்டு மூன்று ருத்திராக்ஷ மணிகளை அதில் போட்டு மூடுங்கள், காலையில் எழுந்ததும் ருத்திராக்ஷத்தை எடுத்துவிட்டு அந்த நீரை வெறும் வயிற்றில் குடியுங்கள். இதனால் படபடப்பு, கிறுகிறுப்பு, ரத்த அழுத்தம், மன இறுக்கம், கோபம் போன்ற நோய்கள் சமனப்படும்.

சிறுநீரக நோய்கள் போக்கும்

யானை நெருஞ்சி என்ற பெருநெருஞ்சி முட்கள் 100 எண்கள் பொறுக்கிவந்து, அலசி 1 குவளை நீர் விட்டு அது ½ குவளையாக சுண்டும் வரை சுருக்கி காய்ச்சி வடித்தெடுத்து அந்த சாற்றில் ருத்திராக்ஷத்தை கல்லில் உரைத்து வழித்தெடுத்து கலக்கி 1 வாரம் உள்ளுக்கு சாப்பிட்டு வந்தால் சிறுநீரகக் கற்கள் உடையும், சிறுநீரக வலி குறையும். சிறுநீர் பாதை அழற்சி நோய் தீரும், நன்றாக சிறுநீர் பிரியும்.

கண் கட்டிகள் நீங்கும்

ருத்திராக்ஷ மணிகளை சந்தனம் மற்றும் கஸ்தூரி மஞ்சளுடன் சேர்த்து சந்தனக் கல்லில் தாய்ப்பால் விட்டு இழைத்து கண்கட்டிகளுக்கு பற்றுபோட்டால் கண்ணில் வரும் சூட்டுக் கட்டிகளும், கணினியின் கதிர்வீச்சுகளால் எழும் சிறு வீக்கங்களும் கரையும்.

ருத்திராக்ஷ தெரபி

நவரத்தினங்களை நகைகளாக்கி நாம் அணிந்து கொள்கிறோம். இதனால் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. அது கோள்களிலிருந்து வரும் பாதிப்புகளை சற்று விலக்குகிறது. இவற்றை "ஜெம் தெரபி" (Gem therapy) என்று கூறுகிறார்கள். இதுபோலவே ருத்திராக்ஷ மணிகளை நாம் பலவகைகளில் அணிகலன்களாக்கி உடலில் அணியும்போது, அதனால் பலவித "நவக்கிரஹ" கோளாறுகள் நீங்கி மனதில் அமைதியும் உற்சாகமும் ஏற்படுகிறது, அதனால் இதனை "ருத்திராக்ஷ தெரபி" (Rudhraksha therapy) என்றே இன்று அழைக்கிறார்கள்.

கண்டாவுடதம்

அக்கிரகாரம், வெள்ளி, பவளம், அதிமதுரம், வில்வம், கலங்கொம்பு, பொன், முத்து, மாசிக்காய், திப்பிலி, கிராம்பு, உருத்திராக்கம் ஆகிய பன்னிரெண்டு பொருட்களையும் தேவையான

அளவு எடுத்து, முலைப்பால் விட்டு முறைப்படி அரைத்து நுனி நாவில் தேய்க்கவும். பதின்மூன்று தோடமும் தீரும்.

ஜன்னி தோஷத்திற்கு

பொன், ருத்திராட்சம், கலையின் கொம்பு, முத்து, வெள்ளி, நீலம், பச்சை, அக்கிராகாரம், திப்பிலி, கிராம்பு இவற்றை முலைப்பால் விட்டரைத்து நாவில் பூசவும் ஜன்னி தோஷம் தீரும்.

★ ருத்திராக்ஷத்தை உடலில் மற்றும் தலையில் அணிந்தபடி, சாதாரண நீரில் நீராடினாலும் அது கங்கை முதலான ஏழு புண்ணிய நதிகளில் நீராடிய புண்ணியத்தையும், ஆரோக்கியத்தையும் தருமாம், பலநோய்களை போக்குவது மட்டுமல்ல, நோய்களை வராமல் தடுக்கும் "காரணியாகவும்" ருத்திராக்ஷ மணிகள் செயல்படுகின்றன.

★ மரணத் தறுவாயில் ஒரு மனிதன், ஜன்னி வந்து கண்கள் சொருகி, பல்கள் கிட்டி படுத்திருந்தாலும், உயர்ந்த வகை ருத்திராக்ஷ மணியை, சந்தனக் கல்லில் இழைத்து, வழித்தெடுத்து அதனை தேனில் குழைத்து உண்ணச் செய்தால் அவன் மீண்டும் உணர்வு பெற்று எழுவான் என்கிறது நம் நாட்டின் பண்டைய வைத்திய முறை -

★ சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், பஞ்சபூதங்கள், இவையெல்லாம் மதங்களை பார்த்து அவர்களிடம் சேருவதில்லை, அதுபோலவே "ருத்திராக்ஷ மணிகளுக்கும்" மதப்பாகுபாடு இல்லை. எனவே இம்மணிகளை அனைவரும் அணியலாம்.

பிரம்மோத்தர காண்டத்தில் ருத்திராக்ஷ சிறப்பு

ஆயமாமணி ஆயிரம் புனைந்திடில் அவரை
மாய நான்முகன் புரந்தரன் வானவர் முதலோர்
பாயு மால்விடைப் பரமென பணிகுவர் என்றால்
தூய மாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்வீர்
- பிரம்மோத்தர காண்டம்

பொருள்: ருத்திராக்ஷ மணிகள் ஆயிரமாயிரம் மணிகளை அள்ளி மாலையாக உடல் முழுதும் அணிந்தவர்களை, நான்முகம் கொண்ட பிரம்மனும், புரந்தரன் என்ற புகழப்படும் தேவேந்திரனும், மற்ற பிற தேவர்களுமே, இவன் "மால் விடை" என்ற ரிஷபவாகனத்தில் ஏறிவரும் சிவன் தானோ என்று எண்ணி வணங்குவார்கள் என்றால், தூய்மை மிகுந்த இந்த ருத்திராக்ஷ மணிகளை அணிந்தவர்கள் சாதாரண மனிதர்களாக இருக்க முடியுமா என்று சொல்லுங்களேன்.

ருத்திராக்ஷம் பற்றிய சில தகவல்கள்

நீலகண்டன் : யாதொருவன் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளபடி, உச்சி, தலை, கழுத்து, மார்பு, தோள், கைகள், இடுப்பு என்று எல்லா அங்கங்களிலும், சரியான எண்ணிக்கைகளில் ஆன ருத்திராக்ஷங்களை அணிகிறானோ அவன் நீலகண்டனாகவே ஆகிறான் என்று பொப்ப தேவர் கூறுகிறார்.

- பதார்த்த ஆதர்சம்

வேத வேள்வி பூஜைகள்: ருத்திராக்ஷ மணிகளை அணிந்த ஒரு மனிதன் வேதங்களைக் கற்று, வேள்விகள் செய்து, தவங்கள் இயற்றி, தானதர்மங்கள் கொடுத்த ஒருவன் என்ன பலன்களை அடைகிறானோ அதே பலனை அடைகிறான்.

- ஸ்ரீ தத்வநிதி

ருத்திரன்: ஒருவன் அசுத்தனாக இருந்தாலும் சாப்பிடத் தகாதவைகளை சாப்பிட்டிருந்தாலும் செய்யத்தகாத செயல்களை செய்திருந்தாலும் சகலவிதமான பாபங்களை புரிந்திருந்தாலும் அவற்றை எல்லாம் உணர்ந்து திருந்தி சிறந்த ருத்திராக்ஷ மணிகளை அணிந்து கொண்டால் அவன் ருத்திரனாகவே ஆகிறான். - சைவ நிதி

விபூதி - ருத்திராக்ஷம்: யாதொரு பிராம்மணன், நித்ய கர்மாக்களையும் நைமித்திக கர்மாக்களையும், மற்றுமுள்ள காரியங்களையும் விபூதி - ருத்திராக்ஷம் அணிந்து கொள்ளாமல் செய்கிறானோ அவனுக்கு அந்த கர்மாவினால் எந்த பலன் களும் கிடைக்காது. *- ஹரிதீக்ஷிதீயம்*

பாபங்களிலிருந்து விடுதலை: மனிதன் கெடுதலான சிந்தையும் நிந்திக்கப்பட்ட ஆசாரமும், நெறிகெட்ட பிறவியும் உடையவனாக இருந்தாலும், அவன் ருத்திராக்ஷத்தை தரித்துக் கொண்டானேயானால், அவன் சகலவிதமான பாபங்களிலிருந்தும் விடுதலையடைகிறான். *- சித்தாந்த சேகரம்*

ருத்திராக்ஷ தானம்: சாந்தமுள்ள சிவபக்தர்களுக்கு உத்தமமான சிறந்தவகை ருத்திராக்ஷங்களை தானமாகக் கொடுக்கலாம், அப்படி ருத்திராக்ஷ தானம் தருவதனால் வரும் சிவபுண்ணிய பலன்களை அளவிட்டு கூற இயலாது. *- ச்ரௌத சித்தாந்தம்*

சிவ சாயுஜ்யம்: விபூதி, ருத்திராக்ஷங்களை அணிவதாலும் ஜபமாலையோடு சிவநாமாவை ஜபிப்பதாலும், சிவனை பூஜிப்பதாலும், காசி, விருத்தாசலம், நைமிசாரண்யம் போன்ற

ஸ்தலங்களில் வசிப்பதாலும், ஒரு மனிதன் சிவ சாயுஜ்யம் எனும் முக்தி நிலையை சுலபமாக அடைந்துவிட முடியும்.

- விருத்தாசலம் சிவஸ்தல புராணம்

மோக்ஷநிலை: விபூதி ருத்திராக்ஷத்தை அணிந்து கொள், ருத்திரநாம ஜெபம் செய், சதா சிவனை பூஜை செய், புண்ணிய ஸ்தலங்களில் வாசம் செய், சிவபூஜை செய்த தீர்த்தங்களை அருந்து, சிவப் பிரசாதங்களை சாப்பிடு, சிவஞானம் உள்ள சாதுக்களுடன் சகவாசம் கொள், இரண்டற்றதான ஒரே ஆத்ம ஸ்வரூபத்தை தியானம் செய், இவற்றால் மோக்ஷம் பெறலாம்.

- பிரம்ம கைவர்த்த புராணம்

ருத்திராக்ஷ மணிபற்றிய தகவல்கள்: ருத்திராக்ஷ மணி பற்றிய தகவல்களை நாம் எங்கெங்கு தேடி அறியலாம் தெரியுமா? ருத்திராக்ஷ ஜாபால உபநிஷத், அக்ஷ மாலிகோ உபநிஷத், பிரம்ம கைவர்த்த புராணம்,. ஸ்காந்த புராணம், கூர்ம புராணம், பாத்ம புராணம், பிரம்மோத்தர காண்டம், அக்கினி புராணம், லிங்கபுராணம், சிவமஹாபுராணம், சிவ ஆகம நூல்கள், தேவீபாகவதம் மற்றும் சில சைவ நூல்களிலும் ருத்திராக்ஷத்தின் பெருமைகள் பேசப்படுகின்றன.

மரமணி வகைகள் ஐந்து: மரங்களை கடைசல் பட்டறை களில் கடைந்து துளையிட்டும் ஜபமணி மாலைகள் கோர்த்துக் கட்டலாம். இதற்கு ஐந்து வகையான மரங்களை உபயோகப் படுத்தலாம். அவை 1. கற்பக மரம், 2. சந்தனமரம், 3. தேவதாரு மரம், 4. மந்தார மரம், 5. பாரிஜாத மரம் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் "கடம்பு" "மருதமரம்" போன்றவற்றிலும் மணிகள் கடையலாம்.

நீங்களும் தேவனாகலாம்!

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்குமாலை கொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராய் தகுவிப்பது
நக்கன் நாமம் நமசிவாயவே.

என்பார் "நமசிவாயத் திருப்பதிகத்தில்" ஞானசம்பந்தர் பெருமான், இதன் பொருள் என்னவெனில், உள்ளம் உருகி, ஆர்வம் பெருகி பக்தியுடன் இறைவனை நினைந்து "ருத்திராஷ ஜப மணி மாலையை கையில் வைத்துக் கொண்டு விரல்களால் அதனைத் தள்ளி எண்ணி நமசிவாய என்ற பஞ்சாக்ஷரத்தை நாம ஜெபம் செய்யும் சாதாரண மனிதர்களும் தேவர்களாகி சிறப்படை வார்கள் என்பதே ஆகும்.

13

ருத்திராக்ஷம் பற்றிய சில எச்சரிக்கைகள்

★ ருத்திராக்ஷத்தை நல்லதா? போலியானதா? என்று கண்டு பிடிக்க தண்ணீரில் போட்டால் அது மிதக்காது. நீரினுள் அமிழ்ந்து விடும் என்று சிலர் கூறுகிறார்கள், ஆனால் அது இப்போது சாத்தியமில்லை. போலியான மணிகளுக்குள்ளும் காரீயம், ஈயம் போன்றவற்றை துளையிட்டு அடைத்து மூடி, வண்ணமிட்டு விடுகிறார்கள். இதனால் சில போலிகளும் நீரில் மூழ்கும்.

★ சிலவகை ருத்திராக்ஷங்கள் அதிகம். கிடைக்கும், சில வகை மணிகள் அதிகம் கிடைக்காது. இதை வைத்துதான் மார்க்கெட் டில் அதன் விலை ஏற்றம் அல்லது இறக்கம் ஏற்படுகிறது. மாலைகளில் விலை உயர்ந்தது அதிகமான. பலன்களைத் தரும், விலை குறைந்தவை பயன் தராது என்பதெல்லாம் கிடையாது.

★ ஏழை மக்கள் கூட அணிந்து பயன் பெற வேண்டும் என்பதற்காக இறைவன் சிவன் தன் ஸ்வரூபமாகவே உள்ள ஐந்து முக மணிகளை கோடி கோடியாக ஏராளமாக படைத்திருக்கிறார். இவை தாராளமாகக் கிடைக்கும், விலையும் மிகமிகக் குறைவு தான். எனவே ஒரு மனிதன் வாங்கி அணிந்து பலன் பெற இம் மணிகளே போதும்.

★ உலகின் பற்பல பகுதிகளில் வசிக்கும் ஆன்மீக வாதிகள், இறை நம்பிக்கையுடைய மக்கள் தத்தமது மதச்சின்னங்களை அணிந்து கொள்ள தயங்குவதோ, வெட்கப்படுவதோ இல்லை. ஆனால் ஏனோ நம் இந்துமதத்தில் உள்ள சில பெரியோர்களும் இளைஞர்களும் அதனை அணிந்து கொள்ள வெட்கப்படுகிறார் கள். இனியாவது எல்லோரும் அணிந்து கொள்ள வேண்டும்.

★ எந்த பொருளுமே மக்கள் ஆதரவைப் பெற்று வியாபாரத்திற்கு என்று வந்துவிட்டால், அதில் முறைகேடுகளும் வந்துவிடும், தாராளமாக கிடைக்கும் சிலவகை ருத்திராக்ஷங்களை வாங்கி, அதில் சில முகங்களை ரசாயனக் கலவைகள் பூசி மறைத்து ஒருமுகம் இருமுகம் மும்முகம் நான்முகம் என்று ஏமாற்றியும், புதிதாக சில முகங்களை நுண்மையான கருவிகள் மூலம் அறுத்தும், அதிக முகங்கள் கொண்ட ருத்திராக்ஷம் என்று கூறி பித்தலாட்டம் செய்தும் விற்பனை செய்கிறார்கள்.

★ சிலர் உறுதியான சில மரக்கட்டைகளை கடைசல் இயந்திரத்தில் உருண்டையாகக் கடைந்து எடுத்து, அதில் ருத்திராக்ஷம் போல் செதுக்கி பல முகங்களை அறுத்தும் விற்றுவருகின்றனர், சிலர் ஏமாந்து இதனை வாங்கி அணிகிறார்கள்.

★ சில கற்பனை வளம் உள்ள அதிமேதாவிகள் போலியான ருத்திராக்ஷக் கொட்டைகளை செய்து, அதில் சிவலிங்கம், திரிசூலம், நாகம் போன்ற வடிவங்களை எல்லாம் செதுக்கி, இந்த வகை மணிகள் அபூர்வமானவை என்று கூறி அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள். எல்லா துறைகளிலும் ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தானே செய்வார்கள்.

ருத்திராக்ஷத்தால் உயர்ந்த குணநிதி

முன்பொரு சமயம் கோசலம் என்ற தேசத்தில் "குணநிதி" என்றொரு பிராம்மணன் வசித்து வந்தான், அவன் தீயவர்களின் கூட்டுறவால் தீயவனானான், கண்டபடி வாழ்ந்து கெட்டு, சீரழிந்தான். தமக்கு அறிவுரைகள் கூறிய தந்தையையும், குருவையும் தம் வாழ்க்கைக்கு அவர்கள் இடைஞ்சலாக இருப்பதாய் கருதி கொலை செய்துவிடுகிறான். குருவின் மனைவியை பலாத்காரம் செய்து சீரழித்து விடுகிறான்.

பலகாலங்கள் வழிப்பறி செய்யும் திருடனாக இருந்து இழிந்து, பின்பு காட்டிலேயே யாருமின்றி அனாதையாக இறந்து போகிறான்.

அவன் இறந்து விழுந்த இடத்திற்கு அருகில் ஒரு ருத்திராக்ஷ மரம் இருந்து உடல் மீது அதன் நிழலும் காற்றும் பட்ட ஒரே காரணத்தால், பாபங்கள் தொலைந்து அடுத்த ஜென்மத்தில் சிவஞானம் உள்ளவனாய் பிறந்து தவம் செய்து சிவபதவி பெற்றான். - தேவீபாகவதம்

★ சில நடைபாதை வியாபாரிகள் நம்மிடம் காட்டும்போது, சிறந்த வகையில் ஆன நல்ல ருத்திராக்ஷங்களைக் காட்டி கவரில் போட்டு பார்சல் செய்து தரும்போது போலி மணிகளைப் போட்டு ஏமாற்றி விடுகிறார்கள். இதனைத் தவிர்க்க, சிறந்த சித்த ஆயுர்வேத அமைப்புகளில் ஆன்மிக அமைப்புகளில், மடத்தில் உள்ள விற்பனைக் கூடங்களில், ஆலய வாயில்களில் உள்ள பெரிய "டிவைன் ஷாப்"களில் வாங்கலாம்.

★ சிதைவுற்றது, பின்னமானது, பூச்சி அரித்தது, வண்டு குடைந்தது, உடைந்து மீண்டும் ஒட்ட வைத்து போன்ற மணி களை வியாபாரிகள் உங்கள் தலையில் கட்டி விடுவார்கள். எனவே ருத்திராக்ஷ மணிகளை வாங்கும்போது விஷயம் தெரிந்த பெரிய வர்களை உடன் அழைத்துச் சென்று வாங்க வேண்டும்.

★ முகத்தோடு, முகம் வைத்துக் கட்டாமல் அடியோடு அடி வைத்து கோர்க்காமல், எண்ணிக்கையை சரியாகப் பின்பற்றாமல் சாதாரணமாக மணிகள் கோர்ப்பது போல சரசரவென கோர்த்து சில விஷயம் தெரியாத வியாபாரிகள் மாலை கட்டி விற்பார்கள் இவர்களிடம் மாலை வாங்கக்கூடாது. உதிரியாக வாங்கி பொற் கொல்லர்களிடம் தந்து முறையாகக் கட்டிக் கொள்ள வேண்டும்.

★ வேறு வகையான சில விதைகளையும் இலந்தைப் பழத்தின் கொட்டைகளையும் கூட, உளியால் ருத்திராக்ஷம் போல "கீறி" செதுக்கி விற்றுவிடுகின்றனர்.

★ உண்மையான ருத்திராக்ஷம் வெகுகாலங்களுக்கு வீணாகா மல் இருக்கும். சிலர் வீடுகளில் பழைய பெட்டிகளில் தலைமுறை தலைமுறைகளாக இருக்கும். பயன்படுத்த பயன்படுத்த பளபளப் பாகவும் வழுவழுப்பாகவும் மெருகு கூடும் ருத்திராக்ஷ மணிகள் "கருங்காலி" மரம்போல் மிகவும் உறுதியாக இருப்பதே இதற்கு காரணம் (போலியான மணிகள் இவ்வாறு தாங்காது சில நாட்களிலேயே அதன் சாயம் வெளுத்து வேடம் கலைந்துவிடும்.)

விலை குறைவாகக் கிடைக்கும் இரண்டு "பஞ்சமுக" ருத்திரா க்ஷங்களில், கால் பகுதியை அறுத்து எடுத்துவிட்டு, மிச்சம் உள்ள இரண்டு "முக்கால் மணி"களையும் மிகச் சிறந்த வகை பசை களால் ஒட்டி, வண்ணம் பூசி, இது "கௌரீ சங்கர" ருத்திராக்ஷம் என்று கூறி மிக அதிகமான விலைக்கு விற்று விடுகிறார்கள்.

மலேசியா போன்ற வெளிநாடுகளில் காட்டில் விளையும் பெரீஸ் (berries) இன பழக் கொட்டைகளை குடைந்து செதுக்கி செம்புக்கம்பிகளில் கட்டி மாலையாக்கி, இது சிறிய வகை ருத்திராக்ஷ மணிமாலை என்று கூறி விற்று விடுகிறார்கள்.

நவீன "சிந்தெடிக்" பொருள்களால் செயற்கையாக செய்யப் பட்ட, 1 முகம், இரு முகம், மும்முகம் மற்றும் "கௌரீ சங்கரம்" கணேஷ் ருத்திராக்ஷா போன்ற அரிய வகையிலான ருத்திராக்ஷ மணிகள் விற்பனைக்கு வருகின்றன. எனவே எச்சரிக்கை தேவை.

மிக உறுதியான கொட்டைபாக்குகளில் (betel nuts) ருத்தி ராக்ஷ மணிகளைப் போல உளிகளால் குடைந்தும் செதுக்கியும் சில அரியவகை முகங்களுடன் மணிகள் உருவாக்கப்பட்டு விற்கப் படுகின்றன.

1) பூச்சிகள் அரித்தது 2) விரிசல் உள்ளது அல்லது உடைந்து ஒட்டவைத்தது 3) உளுத்துப் போனது, 4) மிகமிக சிறிதாயிருப் பது. 5) மேற்புரம் முட்கள் போனற் அமைப்பின்றி வழுவழுப்பாக உள்ளது. 6) சுற்றளவு சரியான வட்ட வடிவில் இல்லாதது, 7) இரண்டு முதல் பல மணிகள் வரையில் ஒட்டி உருவாகி அதிலும் ஒழுங்கின்றி இருப்பது, 8) பிறப்பிலேயே கோண்லாய் உருவானது. இந்த எட்டு வகையான ருத்திராக்ஷங்களை பயன்படுத்தாமல் விலக்கிவிட வேண்டும்.

ஒருவன் மிகச் சாதர்ரண மனிதனாயிருந்தாலும் உயர்ந்த ஆன்மிக ஞானமில்லாவிடினும், அவன் ருத்திராக்ஷ மணிமாலை கள், விபூதி போன்ற சிவ பிரசாதங்களை அணிந்து கொண்டிருப்பா னேயானால், அவனைவிட உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து, அவனை திட்டி, ஒருவன் அவமரியாதை செய்தான் என்றால், அவன் எவ்வளவு உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும், எவ்வளவு செல்வாக்குடன் வளம் கொழித்தாலும் பாபியாகி அடுத்த பிறவியில் ரௌரவாதி நரகத்தை அடைவான்.

14

ருத்திராக்ஷ மணிகள் உருவாகக் காரணமான ஒரு சிவஸ்தலம் (திருவதிகை)

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டத்தில் உள்ளது "திருவதிகை" என்ற திருத்தலம், இது விழுப்புரத்திலிருந்து தென்மேற்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நடு நாட்டுப் பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் 23இல் இத்தலம் 7ஆவது இடத்தில் இருக்கிறது. மிக மிக அற்புதமானது. கலையழகுமிக்க சிற்பங்கள் உடையது இவ்வூர் கோயில்.

சிவபெருமான் எட்டுவகையான வீரச் செயல்களை புரிந்தார். அவை ஒவ்வொரு வீரச் செயலும் ஒவ்வொரு ஸ்தலத்தில் நிகழ்ந் துள்ளன. (இதன் விபரம் தனிப் பெட்டிச் செய்தியில் காண்க.) அவற்றில் "திரிபுர அசுரர்களை அழித்த" திருத்தலமே இந்த "திரு வதிகை". அதனால் "திருவதிகை வீரட்டம்" என்ற அடைமொழி யோடே இத்தலம் விளங்குகிறது. சிவன் இந்த "திரிபுர அரசுர்களை" சம்ஹாரம் செய்யும் சமயத்தில்தான் அவன் கண்களிலிருந்து "ருத்திராக்ஷ மரங்களும் அதில் மணிகளும் தோன்றின" என்பது குறிப்பிடத்தக்கது.

சமண சமயத்தில் இருந்து மேம்பட்டு "தருமேசேனர்" என்று பட்டம் பெற்ற ஒரு தமிழ்ப் பெரியார். "சூலை நோயால்" வருந்தி தமது தமக்கை திலகவதியார் என்பவரிடம் சென்று சரணடைய, அவர் இத்தலத்தில் திருவைந்தெழுத்தை ஒதி திருநீறு எடுத்து பூச, தீராத அவர் சூலை நோய் தீர்ந்தது. அதனால் தருமசேனர் என்ற அந்த "சமணர்" சிவனை வணங்கும் சைவப்பெரியார் ஆனார். அவரே நமது திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் பெருமான் ஆவார்.

சமண சமயத்தவர் பொறாமையால் இவர் மீது சினம் கொண்டு, சுண்ணாம்புக் காளவாயில் இட்டு சுட்டும், நஞ்சு அருந்தச் செய்தும், யானையை மிதிக்க ஏவியும், கருங்கற்களோடு சங்கிலியால் கட்டி கடலில் போட்டும், பல்வேறு தண்டனை களைத் தந்தனர். அவை அனைத்தையும் சிவனருளால் வெற்றி கொண்டு உயிர் பிழைத்த அப்பர் பெருமான் இத்திருவதிகை ஈசன் ஆலயத்தில் பல்லாண்டுகள் பணிசெய்து, உழவாரத் தொண் டாற்றினார், அப்போது அவர் பாடிய தேவாரப் பதிகங்கள் 16 ஆகும். மேலும் சம்பந்தர் 1 பதிகமும் சுந்தரர் 1 பதிகமும். பாடி இத்தல வீரட்டானேஸ்வரரை பணிந்துள்ளனர். ஒரு முறை திரு வதிகை சென்று வழிபட்டு வாருங்கள். உங்கள் தீராத வினைகள் எல்லாம் தீர்ந்துவிடும். "திரிபுர அசுரர்களை மாய்த்த" சிவனுக்கு "திரிபுராந்தகன்" என்ற திருநாமம் உண்டு. சிவபெருமானின் 25 வகையான திருவடிவங்களில் இவர் 9வது இடத்தை வகிக்கிறார். சிவபெருமானின் 64 திருவிளையாடல் கோலங்களில் "திரிபுராந்தக மூர்த்தி" 20வது இடத்தை அலங்கரிக்கிறார். இந்த சிவமூர்த்திக்கு சிறப்பு "உருவ வழிபாடு" உள்ள சிவஸ்தலம் இந்த "திருவதிகை" தான்.

இந்த ஸ்தலத்தில் உள்ள சிவபெருமானுக்கு, ஸ்ரீ வீரட்டானேஸ்வரர் என்பது புனிதப் பெயர். இதற்குப் பொருள் வீரச் செயல் விளைத்த ஈசன் என்பதே ஆகும். அம்மைக்கு ஸ்ரீ திரிபுர சுந்தரி என்பது திரு நாமம் இதற்குப் பொருள் "முப்புரம் எரிசெய்த அழகி" என்பதே ஆகும். இங்கே ஸ்தல விருக்ஷம் "கொன்றை மரமாகும்", தீர்த்தம். சக்கரத் தீர்த்தம், சூல தீர்த்தம், கருட தீர்த்தம் மற்றும் கெடிலநதி என்பதாகும். ஒரு முறை திருவதிகை சென்று தரிசித்து வாருங்கள்.

அஷ்ட வீரட்ட ஸ்தலங்கள்

ஸ்தலங்கள்	சிவனின் வீரச் செயல்கள்
1. திருக்கண்டியூர்	பிரம்மனின் தலையை கொய்தது
2. திருக்கடவூர்	காலன் எமனைக் காலால் உதைத்து வீழ்த்தியது
3. திருவதிகை	**திரிபுர அசுரர்களை அழித்தது**
4. திருவழுவூர்	கயா சூரனை வதைத்தது
5. திருப்பறியலூர்	தக்ஷன் தலையறுத்து யாகத்தை அழித்தது
6. திருக்கோவலூர்	அந்தகாசுரனை சம்ஹாரம் செய்தது
7. திருக்குறுக்கை	மன்மதனை எரித்து மாய்த்தது
8. திருவிற்குடி	ஜலந்தராசூரனை வதம் செய்தது.

15

ருத்திராக்ஷ மணிகளால் ஜபம் செய்யும் முறைகள்

★ நீராடி திருநீறு ருத்திராக்ஷம் அணிந்து, பட்டாடை உடுத்தி, ஒரு அமைதியான சுத்தமான இடத்தில் தனியாக அமர்ந்து பவித்திரம் அணிந்து சங்கல்பம் செய்து மனம் வேறு காரியங்களில் செல்லாமல் உறுதியான ஒரே நினைவோடு வலது கையில் ஜபமாலையுடன் இஷ்ட தேவதையை ஜபம் செய்யத் துவங்க வேண்டும்.

★ ஜபம் செய்வதற்கு அமரும் ஆசனம் மிகமிக முக்கியமானது மான் தோல், புலித்தோல் போன்றவை ஆசனத்தில் அமர்வது மிகச் சிறந்தது. ஆனால் இன்றுள்ள சட்டதிட்டங்களுக்கு இது ஒத்து வராது. எனவே மரப்பலகை, தர்ப்பைத் தடுக்கு, அல்லது படுக்கப் பயன்படுத்தாத புதிய ஓலை அல்லது கோரைப் புற்களால் ஆன பாய், இவற்றை பயன்படுத்தி கிழக்கு அல்லது வடக்கு முகமாக பத்மாசனத்தில் இருந்து ஜபம் செய்ய வேண்டும். (வெறும் தரையில் அமர்ந்து ஜபம் செய்யக் கூடாது.)

★ ஜபத்தில் மூன்று முறைகள் உள்ளன. அவை 1. மானசம், 2. உபாம்சு, 3. வாசிகம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு மொழியிலிருந்து மற்றோரு மொழி ஒரு எழுத்திலிருந்து மற்றோரு எழுத்து ஒரு பதத்திலிருந்து மற்றோரு பதம் என்று சிந்தித்து முறையே மூலதெய்வத்தின் "பீஜாக்ஷரங்கள்" உள்ள மந்திரங்களை மணிகளை வலது கையால் எண்ணியபடி தியானிக்க வேண்டும் (இதில் உச்சரிப்பு இல்லை) இதுவே "மானசம்" என்பது இதுவே ஜபங்களுள் உத்தமமான, சிறந்த முறையாகும்.

★ நுனி நாக்கு அசையாமல், இதழ்களை சிறுக சிறுக அசைத்து, அருகில் உள்ளவர்களின் காதுகளில் விழாத வண்ணம் மெலிதாக

ரகசியம் பேசுவது போல் மந்திரங்களை உச்சரிப்பது “உபாம்சு” எனப்படும். இது “மத்தியமமானது”

★ உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், தீர்க்க ஸ்வரிதம் என்ற படி, முறையே சாதாரண உச்சரிப்பு, ஒரு மாத்திரை நேரம் இறக்கி உச்சரிப்பு, சாதாரண ஸ்வரத்திலிருந்து ஒரு மாத்திரை நேரம் ஏற்றி உச்சரிப்பு, சாதாரண ஸ்வரத்திலிருந்து இரண்டு மாத்திரை நேரம் நீட்டி ஏற்றி உச்சரிப்பு, என்ற இலக்கணப்படி மூலமந்திரங் கள், பீஜாக்ஷரங்கள், வாய்விட்டு வெளியே யாவருக்கும் கேட்கும் வண்ணம் ஜபம் செய்ய வேண்டும். இது “வாசிகம்” எனப் படும். இந்த முறை சாதாரணமானதுதான், இதனால் ஜபிப்பவரை விட, இம்மந்திரங்களை கேட்பவர்களுக்கே பலன் அதிகம்.

★ காலையில் ஜபம் செய்யும்போது மணிகளை எண்ணும் வலதுகை மேற்புர நோக்கியபடியும், மாலையில் கீழ்முகம் நோக்கிய படியும், உச்சிவேளையில் ஜபம் செய்தால், இருகைகளையும் மேல்நோக்கி கூப்பியபடி கும்பிடுவது போல மணிகளை எண்ணும்படியும் வைத்துக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

★ அதிகாலையில் துவங்கி சூரியன் உதயமாகும் வரையிலும், மாலையில் துவங்கி இரவு நக்ஷத்திரங்கள் தோன்றும் வரையிலும், உச்சி வேளையில் 1 முகூர்த்த நேரம் போதுமானது. (சுமார் 1½ மணி நேரமாகும் இது.)

★ கோயில் யாகசாலை மடம், தியான மண்டபம், பசுமடம் சொந்த வீடு, உறவினர் இல்லம், புண்ணிய ஸ்தலம் புனித தீர்த்தம்; ஆற்றங்கரை, குளக்கரை, கடற்கரை, நந்தவனங்கள், தனிமையில் உள்ள சாந்தமான மிருகங்கள் உலவும் காடு, நிலவரை (under Ground), முதலிய இடங்கள் ஜபம் செய்வதற்கு ஏற்ற இடங்களாகும்.

★ ஜபம் செய்யும் போது "ஜபமாலையின்" மணிகளை விரல் களால் தள்ளியபடி எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். அப்படி எண்ணும்போது வளையமாக சுற்றி, சுற்றி (Rotation) எண்ணாமல் அம்மாலையில் தனியாக குஞ்சம் தொங்குவது போல் கட்டப் பட்டுள்ள "மேரு" என்ற மணியை தாண்டாமல் "பிரதோஷகால" "சோம சூத்திர" பிரதக்ஷிணம் போல திரும்ப திரும்ப சுற்றி எண்ண வேண்டும்.

★ மணிகளை விரல்களால் தள்ளி எண்ணும்போது பெருவிர லால் தள்ளி எண்ணினால் முக்தியைத் தரும், ஆள்காட்டி விரலால் எண்ணினால் எதிரிகள் நாசமாகுவர், நடுவிரலால் எண்ணிக்கையிடின் செல்வம் சேரும், மோதிர விரலால் எண்ணினால் உடல் பலம், மனோ பலம் கூடும், சுண்டுவிரலால் எண்ணினால் இன்னல்களி லிருந்து பாதுகாப்பையும் தரும் அனைத்திலும் இந்த விரல் களோடு பெருவிரலை சேர்த்தே பயன்படுத்த வேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஏனெனில் பெருவிரல் "இறைவனை" குறிக்கும் ஒரு குறியீடு ஆகும்.

★ ஜபம் செய்யும்போது, பிறரோடு பேசுதல், பிற விஷயங் களை பற்றி சிந்தித்தல், அருகில் எழும் சப்தங்களால் கவனம் திசை மாறுதல், உச்சரிப்புப் பிழைகள், கண்டிப்பாக ஏற்படக் கூடாது.

ஜெப மாலையின் வேறு பெயர்கள்

நம் இந்து மதத்தில் "ஜெப மாலை" என்று புகழப்படும் "மணி மாலைகள்". கிறிஸ்தவ மதத்தில் "ரோசரி" என்றழைக்கப் படுகின்றன. ஈரான், ஈராக் சவுதி அரேபியா, துருக்கி போன்ற இஸ்லாமிய நாடுகளில் "தஸ்பீஸ்" என்றழைக்கப்படுகிறது. திபெத்திய ஞானிகளான லாமாக்கள் இடையே இவ்வகை மணிமாலைகள் "தெங்க்வா", என்று கூறப்படுகின்றன. பர்மிய பௌத்தர்கள் "படீக்" என்றழைக்கிறார்கள்.

16

ருத்திராக்ஷ மாலை மற்றும் ஜபமாலை பூஜை முறைகள்

ருத்திராக்ஷ மாலைகள் இறைவனின் நுண்மை வடிவானவை, அதிலும் 51 மணிகள் கொண்டு கட்டப்பட்ட ஜபமாலைகள் மிகமிகப் புனிதமானவை (அது எப்படி? என்று நீங்கள் வியப்படைவது புரிகிறது)

"அக்ஷம்" என்றால் "கண்" என்பதை முன்பே பார்த்தோம். அதில் உள்ள "அக்ஷ" என்ற பதம் சமஸ்கிருதத்தில் உள்ள "அ" முதல் "க்ஷ" வரையான 51 அஷரங்களையும் குறிக்கும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்ற மூதுரை இங்கு சிந்திக்கத் தக்கது. ஒரு செயலை ஆதியோடு அந்தமாக செய்ய வேண்டும் என்பதை "அகாராதி ஷகாராந்தம்" அனைத்தும் செய்ய வேண்டும். என்பார்கள், அக்கால பெரியோர்கள் (இது ஆங்கிலத்தில் வரும் A to Zக்கு இணையானது)

மேற்கண்ட 51 அக்ஷரங்களைக் குறிப்பிடும் ஒரு குறியீடே 51 மணிகள் கொண்ட "ஜபமணிமாலை", எனவே இந்த மாலையை அதே 51 அக்ஷரங்களை உச்சரித்து நியாசம் செய்து பூஜிக்க வேண்டும் என்பது ஒரு பழங்கால முறை.

ருத்திராக்ஷ ஜபமாலை பூஜை முறை

முதலில் பூஜையறையில் கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து 'ஒரு பீடத்தில் தாம்பாளம்' வைத்து அதன் நடுவில் "ஜப்மணிமாலைஎ்யை" வைத்து அதற்கு பால், சந்தனம், பன்னீர், பஞ்சகவ்யம் போன்றவற்றால் அபிஷேகம் செய்து துணியால்

துடைத்து எடுத்து "அஷ்ட கந்தம் பூசி, பொட்டு வைத்து, புஷ்பம் அறுகு அக்ஷதை சாத்தி பிறகு பூஜையை தொடங்க வேண்டும்.

ஜபமாலையை பீடத்தில் "மேருமணி" கிழக்கே இருப்பது போல வளையமாக வைத்து முதல் மணியிலிருந்து ஒவ்வொரு மணியாக கைகளால் தொட்டு ஒவ்வொரு அக்ஷரத்தையும் "அம் நம:", "ஆம் நம" இம் நம: என்று உச்சரித்தபடி புஷ்பம் அக்ஷதைகளால் வலமாக பூஜை செய்ய வேண்டும். நிறைவாக "மேரு" மணியில் "ஸ்ரீம் நம:" என்று சொல்லி தொட்டு, பூஜித்து தூப தீபம், நைவேத்யம் காட்டி, ஸ்வர்ணபுஷ்பம் சாத்தி பூஜை நிறைவில் "ஜபமணிமாலையை" உத்யாபனம் செய்து, அதன்பிறகு ஜபம் செய்ய வேண்டும். இப்படி பூஜித்த மாலையில் செய்யப்படும் ஜபம் சிறந்த பலனை உடனடியாக அளிக்கும் என்று "குஹப்பெருமான்" கூறியருளினார் என்பது அக்ஷமாலிகோ உபநிஷத் கூறும் உண்மை.

திருநீறு, ருத்திராக்ஷம் போன்ற சிவச்சின்னங்களை அணிந்த ஒவ்வொரு சைவனும் நியாய தர்மங்கள் தவறாது நடக்க வேண்டும், குளித்து தூய்மையுடன் விளங்க வேண்டும், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டையும் பரம்பொருளாக எண்ணி வணங்க வேண்டும். காலையில் "பிராம்மீ" உச்சிநேரத்தில் "வைஷ்ணவி" மாலையில் "ரௌத்திரி" என்ற மூன்று சந்தியா. கால தேவதைகளையும் வந்தனம் செய்ய வேண்டும்.

சைவ சமய பஞ்சமுத்திரைகளில் ருத்திராக்ஷம்

சைவ சமயத்தை சேர்ந்த முழுநீறு பூசிய முனிவர்கள், சிவபக்தர்கள், கைக்கொள்ள வேண்டிய முத்திரைகள் ஐந்தாகும். இவை "பஞ்ச முத்திரை" என்று குறிப்பிடப்படுகிறது. அவை 1. ருத்திராக்ஷ ஜப மணிமாலை, 2. காவி வஸ்த்திரம், 3. யோக தண்டம், 4. கமண்டலம் என்ற மூக்குடைய நீர்க்குவளை, 5. ஜடா முடி என்று வரையறுக்கப்பட்டுள்ளன.

ஜபமாலை மணிகள் 51இல் மாத்ருகாக்ஷர பூஜை

அக்ஷர நாமம்	அக்ஷர நாமம்
1. "அம்" நம:	26. "ஞம்" நம:
2. "ஆம்" நம:	27. "டம்" நம: (Tam)
3. "இம்" நம:	28. "ட்டம்" நம: (TTam)
4. "ஈம்" நம:	29. "டம்" நம: (Dam)
5. "உம்" நம:	30. "ட்டம்" நம: (DDam)
6. "ஊம்" நம:	31. "ணம்" நம:
7. "ரிம்" நம:	32. "தம்" நம: (Tham)
8. "ரீம்" நம:	33. "த்தம்" நம: (TTham)
9. "லும்" நம:	34. "தம்" நம: (Dham)
10. "லூம்" நம:	35. "த்தம்" நம: (DDham)
11. "ஏம்" நம:	36. "நம்" நம:
12. "ஐம்" நம:	37. "பம்" நம: (pam)
13. "ஓம்" நம:	38. "ப்பம்" நம: (ppam)
14. "ஔம்" நம:	39. "பம்" நம: (bam)
15. "அம்" நம:	40. "ப்பம்" நம: (bbam)
16. "அஹந்" நம:	41. "மம்" நம:
17. "கம்" நம: (kam)	42. "யம்" நம:
18. "க்கம்" நம: (kkam)	43. "ரம்" நம:
19. "கம்" நம: (Gam)	44. "லம்" நம:
20. "க்கம்" நம: (GGam)	45. "வம்" நம:
21. "ஙம்" நம:	46. "ஸம்" நம:
22. "சம்" நம: (SAM)	47. "ஷம்" நம:
23. "ச்சம்" நம: (cham)	48. "ஸ்ஸம்" நம:
24. "ஜம்" நம: (Jam)	49. "ஹம்" நம:
25. "ஜ்ஜம்" நம: (JJam)	50. "ளம்" நம:
	51. "க்ஷம்" நம:

51வது (மேருமணியில் ஓம் ஸ்ரீம் நம:)

51 மாத்ருகா அக்ஷரங்களின் தேவதைகள்

வ. எண்	அக்ஷரம்	அதற்குரிய தேவதை
1.	அ	சர்வதேவதை
2.	ஆ	பராசக்தி
3.	இ	விஷ்ணு
4.	ஈ	மாயா
5.	உ	வாஸ்த்து தேவர்
6.	ஊ	பூமிதேவி
7.	ரு	பிரம்மா
8.	ரூ	குரு
9.	லு	அஸ்வினி தேவர்
10.	லூ	அஸ்வினி தேவர்
11.	ஏ	வீரபத்திரர்
12.	ஐ	சரஸ்வதி
13.	ஓ	ஈஸ்வரன்
14.	ஔ	ஆதிசக்தி
15.	"அம்"	மஹேஸ்வரன்
16.	"அஹ"	காலாக்கினி ருத்திரர்
17.	(Ka)	பிரம்மா
18.	(Kka)	கங்கை
19.	(Ga)	கணபதி
20.	(Gga)	பைரவர்
21.	ங	காலன்
22.	(Sa)	சண்ட ருத்திரர்
23.	(cha)	பத்திரகாளி
24.	(Ja)	இந்திரன்
25.	(JJa)	அர்த்தநாரீஸ்வரர்
26.	ஞ	கோடிருத்திரர்
27.	(Ta)	பிருங்கிமுனி

வ. எண்	அக்ஷரம்	அதற்குரிய தேவதை
28.	(Tta)	சந்திரன்
29.	(Da)	ஏகருத்திரர்
30.	(Dda)	இயமன்
31.	ண	நந்தி
32.	(Tha)	வாஸ்து தேவர்
33.	(Ttha)	தர்ம தேவதை
34.	(Dha)	துர்க்கை
35.	(Ddha)	குபேரன்
36.	ந	சாவித்திரி
37.	(Pa)	ஆகாயம்
38.	(Ppa)	பசுபதி
39.	(Ba)	திரிமூர்த்தி
40.	(Bba)	சுக்கிரன்
41.	ம	மன்மதன்
42.	ய	வாயு
43.	ர	அக்கினி
44.	ல	பிருதிவி
45.	வ	வருணன்
46.	(sa)	லக்ஷ்மீ
47.	ஷ	துவாதச ஆதித்தியர்
48.	ஸ	சக்தி
49.	ஹ	சிவம்
50.	க்ஷ	வித்யாதத்வம்
51.	ஸ்ரீ / மேருமணி	திரிசக்தி / மஹாலஷ்மி

ருத்திராக்ஷ மணி மாலைகளின் வேறு பெயர்கள்

அக்ஷமாலை, அட்ச மாலை, அக்கமாலை, அக்குமணி, அக்குமாலை, ருத்திராக்ஷ மாலை, உருத்திராட்ச மணிமாலை, உத்திராட்ச மாலை, சிவமணிமாலை, கண்மணிமாலை, ஜபாக்ஷ மாலை, சிவஜப மாலை, அக்ஷ வடம், அட்சவடம், அக்கவடம் அக்காரம், தாழ்வடம், கண்டி, கண்டிகை.

திருமூலர் திருமந்திரம்

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்பது எழுத்தே அஞ்செழுத்தாமே (எண்: 2698)

பின்குறிப்பு: மேற்கண்ட திருமந்திரம் பாடல் மூலமாக அக்ஷரங்கள் ஐம்பது என்று வருகிறது, ஆனால் 51 அக்ஷரம் என்று 51 மணிகளை ஏன் மாலை கட்ட வேண்டும் என்று சிலர் சந்தேகிக்கலாம். சமஸ்கிருத அக்ஷரங்களில் வரும் "ள" கர எழுத்து "ல" கர எழுத்தின் உச்சரிப்பிலேயே அடங்கி விடுகிறது. என்பது சில ஆகமங்களின் கருத்து. எனவே இந்த இரண்டு பீஜாக்ஷரங்களையும் ஒரே மணியில் பூஜை செய்துவிட்டால் 1 மணி தனியாக நிற்கும், அது மாலையில் குஞ்சம் போல் உள்ள "மேரு" மணியாகும். அதில் "ஸ்ரீம்நம: என்று பூஜித்து பூஜையை நிறைவு செய்வதே முறையாகும்."

ருத்திராக்ஷ மணி மாலைகளுக்கான பூஜா மந்திரங்கள்

பொதுவாகவே "ஜபமணி" மாலைகள் வெறும் அழகிற்கான அணிகலன்கள் அல்ல. அவை தெய்வாம்சம் உடையவை, ஒவ்வொரு வகை நிறமணிகளிலும், ஒவ்வொரு முக ருத்திராக்ஷங்களுக்கும், அரிய வகையிலான பல மணி பேதங்களுக்கும். அதனையே மாலை யாக செய்த பிறகும், அவற்றிற்கெல்லாம் பல்வேறு வகை தத்து வங்கள் உண்டு. பல்வேறு வகையான ஆற்றல்கள் அதிலிருந்து வெளிப் படும், எனவே அவற்றை பூஜித்த பிறகே அணிய வேண்டும். சாஸ்திர சம்பிரதாயங்களில் கூறியுள்ள படியே அவற்றை பக்தி யுடன் கையாள வேண்டும். அவற்றிற்கான பூஜா மந்திரங்களை இங்கே பார்க்கலாம்.

வ. எண்	அக்ஷரம்	அதற்குரிய தேவதை
28.	(Tta)	சந்திரன்
29.	(Da)	ஏகருத்திரர்
30.	(Dda)	இயமன்
31.	ண	நந்தி
32.	(Tha)	வாஸ்து தேவர்
33.	(Ttha)	தர்ம தேவதை
34.	(Dha)	துர்க்கை
35.	(Ddha)	குபேரன்
36.	ந	சாவித்திரி
37.	(Pa)	ஆகாயம்
38.	(Ppa)	பசுபதி
39.	(Ba)	திரிமூர்த்தி
40.	(Bba)	சுக்கிரன்
41.	ம	மன்மதன்
42.	ய	வாயு
43.	ர	அக்கினி
44.	ல	பிருதிவி
45.	வ	வருணன்
46.	(sa)	லக்ஷ்மீ
47.	ஷ	துவாதச ஆதித்தியர்
48.	ஸ	சக்தி
49.	ஹ	சிவம்
50.	க்ஷ	வித்யாதத்வம்
51.	ஸ்ரீ / மேருமணி	திரிசக்தி / மஹாலக்ஷ்மி

ருத்திராக்ஷ மணி மாலைகளின் வேறு பெயர்கள்

அக்ஷமாலை, அட்ச மாலை, அக்கமாலை, அக்குமணி, அக்குமாலை, ருத்திராக்ஷ மாலை, உருத்திராட்ச மணிமாலை, உத்திராட்ச மாலை, சிவமணிமாலை, கண்மணிமாலை, ஜபாக்ஷ மாலை, சிவஜப மாலை, அக்ஷ வடம், அட்சவடம், அக்கவடம் அக்காரம், தாழ்வடம், கண்டி, கண்டிகை.

திருமூலர் திருமந்திரம்

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்பது எழுத்தே அஞ்செழுத்தாமே (எண்: 2698)

பின்குறிப்பு: மேற்கண்ட திருமந்திரம் பாடல் மூலமாக அக்ஷரங்கள் ஐம்பது என்று வருகிறது, ஆனால் 51 அக்ஷரம் என்று 51 மணிகளை ஏன் மாலை கட்ட வேண்டும் என்று சிலர் சந்தேகிக்கலாம். சமஸ்கிருத அக்ஷரங்களில் வரும் "ள" கர எழுத்து "ல" கர எழுத்தின் உச்சரிப்பிலேயே அடங்கி விடுகிறது. என்பது சில ஆகமங்களின் கருத்து. எனவே இந்த இரண்டு பீஜாக்ஷரங்களையும் ஒரே மணியில் பூஜை செய்துவிட்டால் 1 மணி தனியாக நிற்கும், அது மாலையில் குஞ்சம் போல் உள்ள "மேரு" மணியாகும். அதில் "ஸ்ரீம்நம: என்று பூஜித்து பூஜையை நிறைவு செய்வதே முறையாகும்."

ருத்திராக்ஷ மணி மாலைகளுக்கான பூஜா மந்திரங்கள்

பொதுவாகவே "ஜபமணி" மாலைகள் வெறும் அழகிற்கான அணிகலன்கள் அல்ல. அவை தெய்வாம்சம் உடையவை, ஒவ்வொரு வகை நிறமணிகளிலும், ஒவ்வொரு முக ருத்திராக்ஷங்களுக்கும், அரிய வகையிலான பல மணி பேதங்களுக்கும். அதனையே மாலை யாக செய்த பிறகும், அவற்றிற்கெல்லாம் பல்வேறு வகை தத்து வங்கள் உண்டு. பல்வேறு வகையான ஆற்றல்கள் அதிலிருந்து வெளிப் படும், எனவே அவற்றை பூஜித்த பிறகே அணிய வேண்டும். சாஸ்திர சம்பிரதாயங்களில் கூறியுள்ள படியே அவற்றை பக்தி யுடன் கையாள வேண்டும். அவற்றிற்கான பூஜா மந்திரங்களை இங்கே பார்க்கலாம்.

பல முக ருத்திராக்ஷ மணிகளுக்கான சிவமஹா புராண மற்றும் வித்யேஸ்வர சம்ஹிதா மூல மந்திரங்கள்

ருத்திராக்ஷமணி	மூலமந்திரம்
1. முகம்	*ஓம் ஹ்ரீம் நமஹ:*
2. முகம்	*ஓம் நமஹ:*
3. முகம்	*ஓம் க்லீம் நமஹ:*
4. முகம்	*ஓம் ஹ்ரீம் நமஹ:*
5. முகம்	*ஓம் ஹ்ரீம் நமஹ:*
6. முகம்	*ஓம் ஹ்ரீம் ஹௌம் நமஹ:*
7. முகம்	*ஓம் ஹம் நமஹ:*
8. முகம்	*ஓம் ஹம் நமஹ:*
9. முகம்	*ஓம் ஹ்ரீம் நமஹ:*
10. முகம்	*ஓம் ஹ்ரீம் நமோந் நமஹ:*
11. முகம்	*ஓம் ஹ்ரீம் ஹம் நமஹ:*
12. முகம்	*ஓம் க்ரோம் க்ஷோம் ரவ்ம் நமஹ:*
13. முகம்	*ஓம் ஹ்ரீம் நமோந் நமஹ:*
14. முகம்	*ஓம் நமஹ:*

பலமுக ருத்திராக்ஷ மணிகளுக்கான பத்ம புராண மந்திர மஹார்ணவ மூல மந்திரங்கள்

ருத்திராக்ஷமணி	மூலமந்திரம்
1. முக மணி	*ஓம் ஓம் த்ருஷாண் நமஹ:*
2. முகமணி	*ஓம் ஓம் நமஹ: / ஓம் கும்:*
3. முக மணி	*ஓம் ஓம் நமஹ: / ஓம் வீம்:*
4. முக மணி	*ஓம் ஹ்ரீம்:*
5. முக மணி	*ஓம் ஹௌம் நமஹ: / ஓம் ஹ்ரீம்:*
6. முக மணி	*ஓம் ஹௌம் நமஹ: / ஓம் ஹ்ரூம்*
7. முக மணி	*ஓம் ஹம் நமஹ: / ஓம் ஹ்ரீம்:*

8. முக மணி	ஓம் சஹ் ஹௌம் நமஹ: / ஓம் கீம்:
9. முக மணி	ஓம் ஹம் நமஹ: / ஓம் ஸம்:
10. முக மணி	ஓம் ஹ்ரீம் நமஹ: / ஓம் க்க்ஷீம்:
11. முக மணி	ஓம் ஸ்ரீம் நமஹ: / ஓம் ஸ்ரீம்:
12. முக மணி	ஓம் ஹௌம் ஹ்ரீம் நமஹ: / ஓம் ஹ்ரீம்
13. முக மணி	ஓம் க்க்ஷாம் சாஸ் நமஹ: / ஓம் க்கெஷளம்
14. முக மணி	ஓம் நமோந் நமஹ: / ஓம் ந்ராம்:

பலமுக ருத்திராக்ஷ மணிகளுக்கு "ஸ்கந்த புராண" மூலமந்திரங்கள்

ருத்திராக்ஷமணி	மூலமந்திரம்
1 முக மணி	ஓம் ஐம் நமஹ:
2 முக மணி	ஓம் ஸ்ரீம் நமஹ:
3 முக மணி	ஔர் தம் தம் நமஹ:

ஜபத்தில் ருத்திராக்ஷ மாலைகளின் சிறப்பு

வெறும் விரல்களினால் எண்ணி ஜபம் செய்தால் ஒரு பங்கு பலனும், விரல்களின் "கணு" ரேகைகளை எண்ணி ஜபம் செய்தால் எட்டு பங்கு பலனும், சங்கு மணிகளால் எண்ணி ஜபம் செய்தால் 108 மடங்கு பலனும் முத்து மணிகளால் எண்ணி ஜபம் செய்தால் முன்னூறு மடங்கு பலனும், தாமரை மணிகளை எண்ணி ஜபம் செய்தால் ஆயிரம் மடங்கு பலனும், ஸ்படிக மணிகளை எண்ணி ஜபம் செய்தால் முப்பதாயிரம் மடங்கு பலனும், தர்ப்பைப் புல்லால் ஆன கயிற்றில் முடிச்சுகள் இட்டு, அதனை எண்ணிக் கொண்டு ஜபம் செய்தால் கோடானுகோடி மடங்கு பலனும், சிறந்த ருத்திராக்ஷ மணிகளை எண்ணி ஜபம் செய்தால் அளவிட முடியாத அளவுக்கு மிகச்சிறந்த புண்ணிய பலன்களும் ஏற்படும். எனவே ருத்திராக்ஷ மணிகளை எண்ணி ஜபம் செய்வது ஜபங்களிலேயே சிறந்த ஜப முறையாகும்.

4 முக மணி	ஓம் ஹ்ரீம் ஹௌம் நமஹ:
5 முக மணி	ஓம் ஹ்ரீம் ஹௌம் நமஹ:
6 முக மணி	ஓம் ஹ்ரீம் நமஹ:
7 முக மணி	ஓம் ஹ்ரீம் நமஹ:
8. முக மணி	ஓம் கீம் வீம் நமஹ:
9 முக மணி	ஓம் ஹ்ரீம் நமஹ:
10 முக மணி	ஓம் ஹ்ரீம் நமஹ:
11 முக மணி	ஓம் ஸ்ரீம் நமஹ:
12 முக மணி	ஓம் ஹ்ராம் ஹ்ரீம் நமஹ:
13 முக மணி	ஓம் க்ஷ்யீம் ஸ்தன் நமஹ:
14 முக மணி	ஓம் தம் மாம் நமஹ:

பலவகை ருத்திராக்ஷ மணிகளுக்கான பாரம்பரிய மூலமந்திரங்கள்

ருத்திராக்ஷமணி	மூலமந்திரம்
1 முக மணி	ஓம் ஐம் ஹம் அஉம் ஐம் ஓம்
2 முகமணி	ஓம் க்ஷீம் ஹ்ரீம் க்ஷோம் வீம் ஓம்
3 முக மணி	அஉம்
4 முகமணி	ஓம் வாம் க்ராம் டாம் ஹாம்
5 முகமணி	ஓம் ஹ்ராம் ஆம் க்ஷம்யான் ஸ்வாஹா:
6 முகமணி	ஸோம் ஐம்
7 முகமணி	ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்ரீம் சோம்
8 முகமணி	ஓம் ஹ்ரீம் க்ரீம் லீம் ஆம் ஸ்ரீம்
9 முகமணி	ஓம் ஹ்ரீம் வீய்ங் யுன் ரய்ம் லைம்
10 முகமணி	ஓம் ஹ்ரீம் க்லீம் வ்ரீம் ஓம்
11 முகமணி	ஓம் ரூம் மூம் யூம் அஉம்
12 முகமணி	ஓம் ஹ்ரீம் க்ஷௌம் எஹ்ரானிஹ் ஸ்ரீம்
13 முகமணி	ஓம் ஈம் யாம் ஆப் அஉம்
14 முகமணி	ஓம் அஉம் ஹஸ்ப்ரீம் கப்ரீம்:

1 முதல் 21 முகம் வரை உள்ள எல்லா வகை ருத்திராக்ஷ மணிகளுக்கும் மூல மந்திரம்

ஓம் நம சிவய
ஓம் சிவய நமஹ:
ஓம் பஸுபதயே நமஹ:

கணேஷ் ருத்திராக்ஷ மந்திரம்

ஓம் கம் கணபதயே நமஹ:
ஓம் மஹா கணபதயே நமஹ:
ஓம் சங்கட ஹர கணபதயே நமஹ:

கௌரீ சங்கர ருத்திராக்ஷ மந்திரம்

ஓம் சிவ சக்திஸ்வரூபாய நமஹ:
ஓம் அர்த்த நாரீஸ்வராய நமஹ:
ஓம் கௌரீ சங்கராய நமஹ:

கர்ப்ப கௌரீ ருத்திராக்ஷ மந்திரம்

ஓம் பராசக்தியை நமஹ:
ஓம் கௌர்யை நமஹ:
ஓம் கர்ப்ப கௌர்யை நமஹ:

"திரிஜுடி" திரிமூர்த்தி ருத்திராக்ஷ மந்திரம்

ஓம் ப்ரம்ம விஷ்ணு ருத்திராய நமஹ:
ஓம் ஏகபாத திரிமூர்த்தி ஸ்வரூபாய நமஹ:
ஓம் தத்தாத்ரேய ஸ்வாமிநே நமஹ:

ருத்திராக்ஷ ஜெபத்தில் மிருத்தியுஞ் ஜெய மஹா மந்திரம்

ஓம்: த்ரியம் பஹம் யஜா மஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனான்
மிருத்தியோர் முக்க்ஷீய மாம்ருதாத்

- பிருகஜ்ஜாபாலு உபநிஷத்

17

ருத்திராக்ஷம் பற்றி உபநிஷதம் கூறும் உண்மைகள் - I

(ருத்திராக்ஷ ஜாபாலோ உபநிஷத்)

1. *அத ஹைனம் காலாக்னி ருத்ரம் புஸுண்ட:*
யப்ரச்ச கதம் ருத்திராக்ஷோத் பத்தி|
தம் ஹோவாச பகவான் காலாக்னி ருத்ர:|

காலாக்கினி ருத்திரரை அணுகிய புசுண்டர் என்பவர், அவரிடம் ருத்திராக்ஷங்கள் உற்பத்தி ஆகும் விதம் பற்றி உபதேசித் தருளுங்கள் என்று வேண்டினார், அதற்கு பகவான் காலாக்னி ருத்ரர் கீழ்க்கண்டவாறு கூறினார்.

2. *திவ்யவர்ஷ ஸஹஸ்ராணி, சக்ஷுருன்மீலிதம்*
மயா| பூமா வக்ஷி புடாப்யாம் து
பதிதா ஜல பிந்தவ:| தத்ராச்ரு
பிந்தவோ ஜாதா மஹா ருத்ராக்ஷ விருக்ஷகா:|

ஆயிரம் தேவ வர்ஷங்கள் என் கண்கள் திறந்திருந்தன, அவற்றிலிருந்து பூமியில் விழுந்த என் கண்ணீர் துளிகளிலிருந்து மிகப்பெரிய ருத்திராக்ஷ மரங்கள் தோன்றின.

3. *பக்தானாம் தாரணாத் பாபம், திவா ராத்ரி*
க்ருதம் ஹரேத்| ஸுப்தே பீதே ஸதாகாலம்
ருத்ராக்ஷம் தாரயேந் நர:|

இவற்றை அணிந்த என் பக்தர்கள் இரவு பகல் எந்த காலத்திலும் அவர்கள் செய்த பாபங்கள் விலகுகின்றன, மனிதன் சதா சர்வ காலமும் ருத்திராக்ஷத்தை அணிந்து கொண்டிருக்கட்டும்.

4. *தாத்ரீ பலப் பிரமாணம் யச்ச் சேஷ்ட முதா*
ஹ்ருதம்| பதரீ பல மாத்ரம் து மத்யமம்,
புரோச்யதே புதை:| அதமம் சணக மாத்ரம்
ஸ்யாத் ப்ரக்ரியைஷா மயோச்யதே|

நெல்லிக்காய் அளவுள்ள ருத்திராக்ஷம் எதுவோ அது சிறந்தது, இலந்தைப் பழம் அளவுள்ளது மத்யமம், கொண்டைக் கடலை அளவுள்ளது அதமம் என்று அறிவளிகளால் கொள்ளப்படுகிறது.

5. *பிராம்மணோ பிப்ருயாச் ஸ்வேதான்,*
ரக்தான் ராஜா து தாரயேத்|
பீதான் வைஸ்யஸ்து பிப்ருயாத்
க்ருஷ்ணான் சூத்ரஸ்து தாரயேத்|

பிராம்மணன் வெள்ளை நிற மணிகளையும், ராஜ வம்சத்தினர் சிவப்பு நிற மணிகளையும், வியாபாரத் துறையினர் மஞ்சள் நிற மணிகளையும், மற்றவர்கள் கருப்பு நிற மணிகளையும் அணிந்து கொள்ள வேண்டும்.

6. *ஸ்வய மேவ க்ருதம் துவாரம்*
ருத்ராக்ஷம் ஸ்யாதி ஹோத்தமம்|
யத்து பௌருஷ ப்ரயத்தனேன
க்ருதம் தன மத்யமம் பவேத்|

இயற்கையாகவே துவாரம் உள்ள மணிகள் உத்தமமானவை, மனிதனால் துவாரம் செய்யப்பட்டவை மத்தியமமானவை.

ருத்திராக்ஷ ஜபமணி மாலைகளின் தத்துவம்

மணிகளின் எண்ணிக்கை முறையில் பல்வேறு மாலைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை குறிக்கும், பொதுவாக மணிமாலைகளில் உள்ள மணிகள் உலக உயிர்கள் அனைத்தினையும் குறிக்கும். மாலையாக கோர்க்கப்பட்டு அதன் நடுவில் ஊடுருவி செல்லும் பட்டுநூல் அல்லது உலோகக் கம்பி, உலக உயிர்களில் எல்லாம் பொதுவாக ஊடுருவி இயங்கும், அந்த "பிரம்மத்தை" குறிக்கிறது. எனவேதான் ருத்திராக்ஷ மாலை மற்றும் பலவகை ஜபமாலைகள் இறைவனின் அம்சமாகவே விளங்குகின்றன.

7. ஸமான் ஸ்னிக்தான் த்ருடான் ஸ்தூலான்
க்ஷௌம ஸூத்ரேண தாரயேத்|

சமமாகவும், பளபளப்பாகவும், திடமாகவும், பருமனாகவும் உள்ள மணிகளை பொருக்கி எடுத்து அதனை பட்டு நூலில் கோர்த்து அணிய வேண்டும்.

8. ஸர்வ காத்ரேண ஸௌம்யேன ஸாமான்யானி விஸக்ஷண:|
நிகஷே ஹேமரேகாபா யஸ்ய ரேகா
ப்ரத்ருச்யதே| ததக்ஷம் உத்தமம் வித்யாத்
தத்தார்யம் சிவபூஜகை|

முழுதும் ஒரே மாதிரி பருமன் உள்ளதும், பொன் வண்ண கோடு உள்ளதாகவும், இருப்பவை உத்தமம், அது சிவபூஜை செய்பவர்களால் அணிதற்கு உரியதாகும்.

9. ஏக வக்த்ரம் து ருத்ராக்ஷம் பரதத்வ ஸ்வரூபகம்|
தத் தாரணாத் பரே தத்வே லீயதே விஜிதேந்த்ரியே:|
த்விவக்த்ரம் து முனிச்ரேஷ்ட ச அர்த்தநாரீஸ்வராத்மகம்|
தாரணாத் அர்த்தநாரீச: ப்ரீயதே தஸ்ய நித்யச:|
திரிமுகஞ் சைவ ருத்திராக்ஷம் அக்னித்திரய ஸ்வரூபகம்|
தத்தாரணாச்ச ஹுதபுதக் தஸ்ய துஷ்யதி நித்யதா|

ஒருமுக ருத்திராக்ஷம் பரபிரும்மத்தின் வடிவம் அதனை அணிபவன் புலன்களை வெல்வான் அதனால் பிரம்மத்தை அடைவான், முனி சிரேஷ்டரே, இரண்டு முகம் உள்ளதோ அர்த்தநாரீஸ்வரர் வடிவானது அதனை அணிபவன் அர்த்த நாரீஸ்வரரின் அருளைப் பெறுவான். மும்முகம் உள்ளது மூன்று அக்கினிகளின் வடிவமாகும். அதனை அணிந்தால் அக்னிதேவ னின் அருள் கிடைக்கும்.

10. *சதுர்வக்த்ரம் து ருத்ராக்ஷம், சதுர்வக்த்ர*
ஸ்வரூபகம்| தத் தாரணாத் சதுர்வக்த்ர:
ப்ரீயதே தஸ்ய நித்யதா| பஞ்ச வக்த்ரம் து
ருத்திராக்ஷம் பஞ்சப் பிரம்ம ஸ்வரூபகம்|
பஞ்ச வக்த்ர ஸ்வயம் ப்ரம்மபும் ஹத்யாச
வ்யபோஹதி| ஷட் வக்த்ரமபி ருத்திராக்ஷம்
கார்த்திகேயாயதி தைவதம்| தத் தாரணான்
மஹா ஸ்ரீ: ஸ்யான் மஹதா ரோக்கியம் உத்தமம்
மதி விக்ஞான ஸம்பத்தி சுத்தயே தாரயேத் சுதீ:|
விநாயகாதி தைவஞ்ச ப்ரவதந்தீ மனீஷிண:|

நான்கு முகமுடைய ருத்திராக்ஷம் நான்முகனின் வடிவமுடையது, அதனை அணிந்தால் பிரம்மா ப்ரீதி அடைவார், ஐந்துமுக ருத்திராக்ஷம் பஞ்சப் பிரம்ம வடிவானது, அதனை அணிந்தால் “பிரம்ம ஹத்தி” போன்ற பாவங்கள் தீரும், ஆறுமுக ருத்திராக்ஷம். கார்த்திகேயனை அதிபதியாகக் கொண்டது அதனை அணிவதால் பெரும் செல்வமும், நோயற்ற வாழ்வும் ஏற்படும், நல்ல புத்தி, சிறந்த ஞானம், சம்பத்து, தூய்மை, அனைத்திற்கும் இடமானது. இந்தமணி, எனவே சிறந்த புத்திமான்கள் இதனை அணிந்து கொள்ள வேண்டும், இதனால் விநாயகர் முதலிய தெய்வங்களும் அருள் புரிவார்கள் என்று மஹான்கள் கூறுகிறார்கள்.

11. *ஸப்த வக்த்ரம் து ருத்திராக்ஷம் ஸப்தமாதா தி*
தைவதம்: தத் தாரணான் மஹா ஸ்ரீ: ஸ்யான்
மஹ - தாரோக்யம். உத்தமம்| மஹதீ ஜ்ஞானஸம்பத்தீ:
சுசிர் தாரணத: ஸதா| அஷ்ட வக்த்ரம் து
ருத்திராக்ஷம் அஷ்ட மாத்ராதி தைவதம்| வஸ்வஷ்டகம்
பிரியஞ் சைவ கங்கா பிரீதிகரம் ததா|
தத்தாரணாதிமே ப்ரீதா பவேயு: ஸத்யவாதின:|
நவ வக்த்ரம் து ருத்திராக்ஷம் நவசக்த்யதி தைவதம்|
தஸ்ய தாரண மாத்ரேண ப்ரீயந்தே நவசக்த்ய:|

ஏழுமுக ருத்திராக்ஷம் சப்த மாதர்களை அதிபதியாகக் கொண்டது, அதனை அணிவதால் செல்வமும், ஆரோக்கியமும் வரும் சிறந்த ஞானம் சம்பத்து எல்லாம் ஏற்படும், எட்டுமுக ரத்திராக்ஷம் எட்டு மாத்ருகா தேவிகளின் உறைவிடம் அதை அணிபவர்கள் சத்திய வாதிகளாகவும் அஷ்ட மாதர்களின் ப்ரீதியையும், அஷ்ட வசுக்களின் ப்ரீதியையும், கங்கா தேவியின் அருளையும் பெறுவார்கள். ஒன்பது முக ருத்திராக்ஷம் நவசக்திகளின் உறைவிடம் அதை அணிவதால் நவசக்திகளின் அருள் கிட்டும்.

12. தச வக்த்ரம் து ருத்திராக்ஷம் யமதைவத்யமீரிதம்|
தசா ப்ரசாந்தி ஜனகம் தாரணாத்ர ஸம்சய:|
ஏகாதச முகம் த்வக்ஷம் ருத்ரைகாதச தைவதம்|
தநிதம் தைவதம் ப்ராஹு: ஸதா ஸௌபாக்ய வர்த்தனம்|
ருத்திராக்ஷம் த்வாதச முகம் மஹாவிஷ்ணு ஸ்வரூபகம்|
த்வாத சாதித்ய ரூபஞ்ச பிபர்த்யேவஹி தத்பரம்|

பத்து முக ருத்திராக்ஷம் யமனை அதிதேவதையாகக் கொண்டது, அதனை அணிவதால் நவக்கிரஹ தசைகளில் சாந்தி ஏற்படும் பதினொரு முகம் கொண்டது ஏகாதச ருத்திரர்களை அதிபதியாகக் கொண்டது, அது எப்போதும் சௌ பாக்யத்தை வழங்கும், பனிரெண்டு முக ருத்திராக்ஷம், பனிரெண்டு சூரியர்களை அதிபதியாகக் கொண்டதாகும்.

13. த்ரயோதச முகம் த்வக்ஷம் காமதம் சித்திதம் சுபம்|
தஸ்யா தாரண மாத்ரேண காமதேவ: ப்ரஸீததி|
சதுர்தச முகஞ்சாக்ஷம் ருத்திரநேத்ர ஸமுத்பவம்|
சர்வ வ்யாதி ஹரஞ்சைவ ஸர்வம் ஆரோக்யமாப்னுயாத்|

பதின் மூன்று முகமுடைய ருத்திராக்ஷம் விரும்பியபடி சுபமான சித்திகளை அருளவல்லது, அதனை அணிவதால் காமதேவன் என்ற மன்மதனின் அருள் கிட்டும், ருத்திர நேத்திரங்களிலிருந்து தோன்றிய பதினான்கு முக ருத்திராக்ஷம், எல்லா வியாதிகளையும் போக்கி எப்போதும் ஆரோக்கியத்தை தரும்.

14. ருத்திராக்ஷ மூலம் தத் பிரஹ்மா, தந் நாளம்
விஷ்ணு ரேவச| தன் முகம் ருத்ர இத்யாஹுஸ்
தத்-பிந்து சர்வ தேவதா:|

ருத்திராக்ஷத்தின் அடிப்பகுதி பிரம்ம பாகம், நாளம் உள்ள பகுதி விஷ்ணு பாகம், மேலே உள்ள முகம் ருத்திர பாகம், அதன் பிந்து பாகம் சர்வ தேவதைகளின் உறைவிடம்.

பலஸ்ருதி

15. இமாம் ருத்திராக்ஷ ஜாபாலோபநிஷதம்
நித்யமதீதே ஸமஹான் பவதி| ஸகுரு:
ஸர்வேஷாம் மந்த்ராணமுபதேஷ்டா பவதி||

இதி ருத்திராக்ஷ ஜாபாலோப நிஷத் ஸமாப்தா

எவர் இந்த ருத்திராக்ஷ ஜாபால உபநிஷதத்தை நாள்தோறும் படிக்கிறார்களோ, அவர் மஹானாகவும் எல்லோருக்கும் குருவாகவும், எல்லா மந்திரங்களையும் உபதேசிக்கக் கூடியவராகவும் விளங்குவார். இங்ஙனம் ருத்திராக்ஷ ஜாபால உபநிஷதம் முற்றுப்பெறுகிறது.

18

ருத்திராக்ஷம் பற்றி உபநிஷதம் கூறும் உண்மைகள் - II

(அக்ஷமாலிகோ உபநிஷத்)

1. *அத - ப்ரஜாபதிர் - குஹம் - ப்ராஹபோ பிரஹ்மன் அக்ஷமாலா - பேத - விதிம். ப்ருஹ்தி| தம் குஹ: பிரத்யுவாச|*

பிரம்ம, குஹனிடம் "பகவானே அக்ஷமாலையின் வகைகளை யும் விதிகளையும் கூறியருளுங்கள்" என்று கேட்க குஹப் பெருமான் கீழ்க் கண்டவாறு கூறியருளினார்.

2. *ப்ரவாள - மௌத்திக - ஸ்படிக - சங்க அஷ்டாபத - ரஜத - சந்தன - அப்ஜே - ருத்திராக்ஷா - இதி|*

பவழ மணி, முத்துமணி, ஸ்படிக மணி, சங்குமணி, பொன் மணி, வெள்ளி மணி, சந்தனமணி, தாமரைமணி, ருத்திராக்ஷமணி - என்ற ஒன்பது வகை மணிகளும் அக்ஷமாலைகளுக்கு உரியன.

3. *ஆதி - க்ஷாந்த மூர்த்தி: ஸாவதான பாவா|*

அவற்றில் உள்ள மணிகளில் "அ" காரம் "க்ஷ"காரம் வரை 51 அக்ஷரங்களையும் அதற்கான மூர்த்திகளையும் அதில் தியானிக்க வேண்டும்.

4. *ஸௌவர்ணம் - ராஜதம், தாம்ரம்சேதி ஸூத்ரத் திரயம்*

மணிகளை நடுவில் கோர்த்து கட்டும் கம்பிகள் பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகத்தில் இருக்க வேண்டும்.

5. யதஸ்யாந்தரம் ஸூத்ரம் தத் ப்ரஹ்ம।

ஜபமாலைகளில் நடுவில் உள்ள சூத்திரம் (கம்பி அல்லது கயிறு) இந்த உலகம் உலக உயிர்களின் உடே ஊடுருவி இருக்கும் பிரம்மத்தை குறிக்கிறது.

6. பஞ்சபிர் - கவ்யைஸ்தனுபி: சோதயித்வா
பஞ்சபிர் - கவ்யைர் - கந்தோதகேன
ஸம்ஸ்னாப்ய தஸ்மாத் ஸௌங்காரேண
பத்ர கூர்ச்சேன ஸனபயித்வா.

அக்ஷ மாலைகளை, ஐந்து வகையான தூய பொருள்களான பஞ்சகவ்வியத்தாலும், தூய சந்தனத்தாலும் அபிஷேகம் செய்ய வேண்டும். அதற்கு சிறந்த வகை இலைகள் மற்றும் தர்ப்பைப்புல் கூர்ச்சங்களை பயன்படுத்த வேண்டும்.

7. அஷ்டபிர் - கந்தைராலிப்ய, ஸுமன:
ஸ்த்தலே நிவேச்ய அக்ஷத புஷ்பை - ராராத்ய
ப்ரத்யக்ஷ மாதிக்ஷாந்தைர் வர்ணையர் - பாவயேத்।

அதில் அஷ்டகந்தம் என்ற எட்டுவகையான வாசனைப் பொருள் களை பூசி, தேவ பூஜைக்கு உரிய உயர்ந்த இடத்திலே அதனை வைத்து "அ" முதல் "க்ஷ" வரை 51 மணிகளில் புஷ்பம் அக்ஷதை களால் பூஜை செய்ய வேண்டும்.

8. புனரேதஸ் - யாம் ஸர்வாத்மகத்வம்
பாவயித்வா மஹோபஹாரை - ரூபஹ்ருத்ய
ஆதி க்ஷாந்தாக்ஷரை - அக்ஷ மாலாம் அஷ்டோத்தர
சதம் ஸ்ப்ருசேத்।

மீண்டும் அம்மணிகளில், உலகில் உள்ள எல்லா ஆத்மாக் களையும் இருப்பதாக தியானித்து அவற்றிற்கெல்லாம் நன்மை விளைய வேண்டுமென இறைவனை இதய பூர்வமாக வேண்டி - 108 முறை அர்ச்சனைகளால் அக்ஷமாலையை தொட வேண்டும்.

அஷ்ட கந்தம்

அஷ்ட கந்தம் என்றால் வாசனாதி திரவியங்கள் எட்டு என்பது பொருள். பூஜைகளில் இதனை சுவாமிக்கு பூசுவதும் ஒரு வழக்கம். அவை - 1, சந்தனம், 2. அகில், 3. கஸ்தூரி, 4. பச்சை கற்பூரம், 5. குங்குமம், 6. இலாமிச்சை, 7. கோஷ்டம், 8. பச்சிலை என்று வகைபடுத்தப்பட்டுள்ளன.

9. அத புனருத்தாப்ய - ப்ரதக்ஷிணீ க்ருத்ய।

அதனை எடுத்து வைத்து மீண்டும் ஒருமுறை இறைவனை மனமுருக வேண்டி, பிரதக்ஷிணம் செய்க.

10. மந்திரங்கள்

ஓம் நமஸ்தே பகவதி மந்த்ர மாத்ருகே
அக்ஷமாலே சர்வ சங்கரி
ஓம் நமஸ்தே பகவதி மந்த்ர மாத்ருகே
அக்ஷமாலே உச்சாடனி
ஓம் நமஸ்தே பகவதி மந்த்ர மாத்ருகே
அக்ஷமாலே விஸ்வாம்ருதே
ஓம் ம்ருத்தியுஞ் ஜய ஸ்வரூபிணி

சகல - லோகோத் தீபீனி
சகல - லோக - ரக்ஷாதிகே
சகல - லோகோ - ஜ்ஜீவிகே
சகல - லோகோத் - பாதிகே
திவா - ப்ரவர்த்திகே, ராத்ரி - ப்ரவர்த்திகே
நத்யந்தரம் - யாசி - தேசாந்த்ரம் யாசி
த்வீபாந்தரம் யாசி - லோகாந்தரம் யாசி
ஸர்வதாஸ் புரஸி - ஸர்வ ஹ்ருதி வாஸஸி

நமஸ்தே பரா ரூபாய
நமஸ்தே பச்யந்தி ரூபாய
நமஸ்தே மத்யமா ரூபே
நமஸ்தே வைகரீ ரூபே

ஸர்வ தத்வாமிகே
ஸர்வ வித்யாத்மிகே
ஸர்வ சக்த்யாத்மிகே
ஸர்வ தேவாத்மிகே

வஸிஷ்டேன முனினாராதிதே
விஸ்வாமித்ரேண முனினா உபஜீவ்யமானே
நமஸ்தே - நமஸ்தே

பல ஸ்ருதி

11. ஏவம் - அக்ஷமாலிகாயா ஜப்தோ மந்த்ர
ஸத்ய ஸித்திகரோ பவதீத்யாஹ
பகவான் குஹ: ப்ரஜாபதிமித் யுபநிஷத்॥

இப்படியாக பூஜை செய்த அக்ஷ மாலையில் ஜபித்த மந்திரம் உடனடியாக பலன் அளிப்பதாகும் என்று குஹப் பெருமான் பிரம்மாவிடம் சொன்னதாக இந்த உபநிஷதம் உள்ளது.

19

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ருத்திராக்ஷ ஜபத்திற்கான ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரம்

நாகேந்த்ர ஹாராய திரிலோசனாய
பஸ்மாங்கராகாய மஹேஸ்வராய
நித்தாய சுத்தாய திகம்பராய
தஸ்மை நகாராய நமசிவாய

மந்தாகினி ஸலில சந்தன சர்ச்சிதாய
நந்தீஸ்வர ப்ரமதநாத மஹேஸ்வராய
மந்தார் புஷ்ப பஹுபுஷ்ப பூஜிதாய
தஸ்மை மகராய நமசிவாய

சிவாய கௌரீ வதனாப்ஜ பால சூர்யாய
தக்ஷாத் வர நாசகாய
ஸ்ரீ நீலகண்டாய விருஷத்வஜாய
தஸ்மை சிகாராய நமசிவாய

வசிஷ்ட கும்போத்பவ கௌதமாய
முனிந்திர தேவார்ச்சித சேகராய
சந்த்ரார்க வைச்வாநர லோசனாய
தஸ்மை வகாராய நமசிவாய

யக்ஷ ஸ்வரூபாய ஜடாதராய
பினாக ஹஸ்தாய ஸனாதனாய
திவ்யாய தேவாய திகம்பராய
தஸ்மை யகாராய நமசிவாய

பல ஸ்ருதி

பஞ்சாக்ஷரம் இதம் புண்ணியம்: ய: படேச் சிவ ஸன்னிதௌ
சிவலோக மவாப்பேனாதி சிவனே ஸஹமோததே

20

மார்க்கண்டேயர் அருளிய

ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம்

ருத்ரம் பசுபதிம் ஸ்த்தாணும் நீலகண்டம் உமாபதிம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 1

காலகண்டம் காலமூர்த்திம் காலாக்நிம் காலநாசனம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 2

நீலகண்டம் விருபாக்ஷம் நிர்மலம் நிலயப்ரவம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 3

வாமதேவம் மஹாதேவம் லோகநாதம் ஜகத் குரும்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 4

தேவதேவம் ஜகந்நாதம் தேவேசம் வ்ருஷபத்வஜம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 5

த்ர்யக்ஷயம் சதுர்புஜம் சாந்தம் ஜடாமகுட தாரிணம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 6

பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் நாகாபரண பூஷிதம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 7

அநந்த மவ்யயம் சாந்தம் அக்ஷமாலாதரம் ஹரம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 8

ஆநந்தம் பரமம் நித்யம் கைவல்ய பததாயினம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 9

அர்த்த நாரீச்வரம் தேவம் பார்வதீ ப்ராணநாயகம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 10

ப்ரளயஸ்திதி கர்த்தாரம் ஆதிகர்த்தார மீச்வரம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 11

வ்யோமகேசம் விருபாக்ஷம் சந்த்ரார்த்த க்ருத சேகரம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 12

கங்காதரம் சசிதரம் சங்கரம் சூலபாணிநம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 13

ஸ்வர்க்கா பவர்க்க தாதாரம் ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்த காரிணம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 14

கல்பாயுர் தேஹிமே புண்யம் யர்வத்ராயுர ரோகதாம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 15

சிவேசானம் மஹாதேவம் வாமதேவம் ஸதாசிவம்
நமாமி சிரஸா தேவம் கிந்நோ ம்ருத்யு: கரிஷ்யதி! 16

பல ஸ்ருதி

மார்க்கண்டேய க்ருதம் ஸ்தோத்ரம் ய: படேத் சிவஸந்நிதெள,
தஸ்ய ம்ருத்யு பயம் நாஸ்தி ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் 17

ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே
வேதாசாஸ்த்ராத் பரந்நாஸ்தி ந்தைவம் சங்கராத்பரம் 18

21

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

வேதஸார சிவ ஸ்தோத்ரம்

பசூனாம் பதிம் பாபநாசம் பரேசம்
கஜேந்த்ரஸ்ய க்ருத்திம் வஸானம் வரேண்யம்।
ஜடாஜூடமத்யே ஸ்புரத்காங்கவாரிம்
மஹாதேவமேகம் ஸ்மராமி ஸ்மராரி॥ 1

மஹேசம் ஸுரேசம் ஸுராராதிநாசம்
விபும் விச்வநாதம் விபூத்யங்கபூஷம்।
விரூபாக்ஷ மிந்த்வர்க்க வஹ்னி த்ரிநேத்ரம்
ஸதானந்தமீடே ப்ரபும் பஞ்சவக்த்ரம்॥ 2

கிரீசம் கணேசம் கலே நீலவர்ணம்
கவேந்த்ராதிரூடம் குணாதீத ரூபம்।
பவம் பாஸ்வரம் பஸ்மனா பூஷிதாங்கம்
பவாநீகலத்ரம் பஜே பஞ்சவக்த்ரம்॥ 3

சிவாகாந்த சம்போ சசாங்கார்த்த மௌலே
மஹேசான சூலின் ஜடாஜூடதாரின்।
த்வமேகோ ஜகத் வ்யாபகோ விச்வரூப
ப்ரஸீத ப்ரஸீத ப்ரபோ பூர்ணரூப॥ 4

பராத்மாத்னமேகம் ஜகத்பீஜமாத்யம்
நிரீஹம் நிராகார மோங்கார வேத்யம்।
யதோ ஜாயதே பால்யதே யேன விச்வம்
தமீசம் பஜே லீயதே யத்ர விச்வம்॥ 5

ந பூமிர்ந சாபோ ந வஹ்னிர் ந வாயுர்
ந சாகாசமா ஸ்தே ந தந்த்ரா த நித்ரா।
ந க்ரீஷ்மோ ந சீதம் ந தேசோ ந வேசோ
ந யஸ்யாஸ்தி மூர்த்திஸ் த்ரிமூர்த்திம் தமீடே॥ 6

அஜம் சாச்வதம் காரணம் காரணாநாம்
சிவம் கேவலம் பாஸகம் பாஸகாநாம் |
துரீயம் தம: பாரமாத்யந்த ஹீநம்
பரபத்யே பரம் பாவநம் த்வைத ஹீநம் ||

நமஸ்தே நமஸ்தே விபோ விச்வமூர்த்தே
நமஸ்தே நமஸ்தே சிதாநந்த மூர்த்தே |
நமஸ்தே நமஸ்தே தபோயோக கம்ய
நமஸ்தே நமஸ்தே ச்ருதிக்ஞான கம்ய || 8

ப்ரபோ சூலபாணோ விபோ! ய்க்ஞமூர்த்தே
மஹாதேவ சம்போ மஹேச த்ரிநேத்ர |
சிவாகாந்த சாந்த ஸ்மராரே புராரே
த்வதந்யோ வரேண்யோ நமான்யோ ந கண்ய || 9

சம்போ மஹேச கருணாகர சூலபாணே
கௌரீபதே பசுபதே பசுபாசநாசிந் |
காசீபதே கருணயா ஜகதேததேகஸ்
த்வம் ஹம்ஸி பாஸி விததாஸி மஹேச்வரோஸி || 10

த்வத்தோ ஜகத்பவதி தேவபவ ஸ்மராரே
த்வய்யேவ திஷ்ட்டதி ஜகந் ம்ருட விச்வநாத |
த்வய்யேவ கச்சதி லயம் ஜகதேததீச
லிங்காத்மகே ஹர சராசர விச்வ ரூபிந் || 11

22

ஸ்ரீ வஸிஷ்ட்டர் அருளிய
தாரித்ர்ய து:க்கதஹன ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷரீ ஸ்தோத்ரம்

விச்வேச்வராய நரகார்ணவ தாரணாய
ஜ்ஞான ப்ரதாய கருணாம்ருத ஸாகராய!
கர்பூர குந்த தவளாய ஜடாதராய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 1

லோகோ த்தராய புஜகாதிப கங்கணாய
கங்காதராய கஜதானவ மர்தனாய!
கௌரீப்ரியாய சசிபால கலாதராய
தாரித்ர்ய து: க்க தஹனாய நம: சிவாய!! 2

பானுப்ரியாய பவஸாகர நாசநாய
காமாந்தகாய கமலாப்ரிய பூஜிதாய!
நேத்ர த்ரயாய சுபலக்ஷண ஸம்ஸ்த்திதாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 3

பக்திப்ரியாய பவரோக பயாபஹாய
திவ்யாத்ரி திவ்யபவனாய குணார்ணவாய!
தேஜோமயாய நிகிலாகம ஸம்ஸ்துதாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 4

சர்மாம்பராய சவபஸ்ம விலேபநாய
பாலேக்ஷணாய மணிகுண்டல மண்டிதாய
மஞ்ஜீரபாத யுகலாய வ்ருஷத்வஜாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 5

பஞ்சானனாய பணிராஜ விபூஷணாய
ஹேமாம்சுகாய புவனத்ரய வந்திதாய!
ஸ்வர்காபவர்க பலதாய மஹேச்வராய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 6

முக்தாய யஜ்ஞபலதாய கணேச்வராய
கீதப்ரியாய வ்ருஷபேச்வர வாஹனாய!
மாதங்க சர்மவஸனாய மஹேச்வராய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 7

ராமப்ரியாய ரகுநாத வரப்ரதாய
புண்யாய புண்யசரிதாய ஸுரேச்வராய!
நந்திப்ரியாய நகராஜ ஸுதாப்ரியாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 8

பக்த்யா ச து:க்கதஹனாஷ்டக மீச்வரஸ்ச
ஸங்கீர்தயேத் புரத ஏவ பினாகபாணே:!
யஸ்த-ஸய சைலஸுதயா பரிரப்ததேஹோ
ருத்ரோ ததாத்யம்ருதமிஷ்ட மனந்த லக்ஷம்!! 9

பாடமாற்றம்

(கௌரீப்ரியாய ரஜனீச கலாதராய)
காலந்தகாய புஜகாதிப கங்கணாய!
கங்காதராய கஜராஜவிமர்த்தனாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 10

ராமப்ரியாயரகு நாத வரப்ரதாய
நாகப்ரியாய நரகார்ணவதாரணய!
புண்யேஷு புண்யபரிதாய ஸுரார்ச்சிதாய
தாரித்ர்ய து:க்க தஹனாய நம: சிவாய!! 11

பல ஸ்ருதி

வஸிஷ்ட்டேனக்ருதம் ஸ்தோத்ரம்
ஸர்வரோக நிவாரணம்!

ஸர்வ ஸம்பத்கரம் சீக்ரம்
புத்ர பௌத்ராபிவர்த்தனம்!!
த்ரிஸந்த்யம் ய: படேந்நித்யம்
ஸ ஹி ஸ்வர்க்கமவாப்னு யாத்!! 9

23

ருத்திராக்ஷ குறிப்புகள் உள்ள சில தேவாரப் பாடல்கள்

சித்தத் தொகை - திருக்குறுந்தொகை

அக்கும் ஆமையும் பூண்டு அனலேந்தி - இல்
புக்கு பல்பலிதேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோர்
தொக்க வானவராற் தொழு வானையே - திருநாவுக்கரசர்

திருவிராகம்

அக்கினோடு அரவரை அணிதிகழ்
ஒளியதோர் ஆமை பூண்
டிக்குக மலிதலை கலனென
இடுபலி ஏகுவர்
கொக்கரை குழல்முழ விழவொடு
மிசைவதோர் சரிதையர்
மிக்கவர் உறைவது விரைகமழ்
பொழில் விழி மிழலையே. - திருஞானசம்பந்தர்

சிவபெருமான் திருவந்தாதி

"அக்காரம்" ஆடரவம் நாண்அறுவைத் தோல்பொடி
தக்காரந் தீர்ந்தேன் அடியேற்கு - வக்காரம்
பண்டரங்கன் எந்தை படுபிணஞ்சேர் வெங்காட்டுப்
பண்டரங்கன் எங்கள் பவன். - கபிலதேவநாயனார்

திருமந்திரம் (1662)

பூதி அணிவது சாதனம் ஆதியில்
காதணி தாம்பிர் குண்டலம் கண்டிகை
ஓதியவர்க்கும் உருத்திர சாதனத்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. - திருமூலர்

கணியணி மலர்கொடு காலையும் மாலையும்
பணியணி பவர்க்கருள் செய்த பான்மையர்
தணியணி உமையொடு தாமுந் தங்கிடம்
மணியணி கிளர் வைகல் மாடக் கோயிலே - சம்பந்தர்

அக்கரவணி கலனென அதனொடார்த்ததோர் ஆமை பூண்
டுக்கவர் சுடுநீறணிந் தொளிமல்கு புனர் காவிரிப்
புக்கவர் துயர் கெடுகெனப் பூசு வெண்பொடி மேவிய
மிக்கவர் வழிபாடு செய் விளநகரவர் மேயதே. - சம்பந்தர்

அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றாக
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்தோன்றி மாடத்தே

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும்கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத்தவர் பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.

பெரிய திருமொழி

அக்கும் புலியின் அதளும் உடையார் அவரொருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பர் ஊர்போலும்
தக்க மரத்தின் தாழ்சினையேறி - தாய்வாயில்
கொக்கின் பிள்ளை வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே.

- திருமங்கை ஆழ்வார்

அன்னதான மகிமை

எவன் ஒருவன் காதில் ருத்திராக்ஷம் அணிந்துள்ள ஒருவனுக்கு அன்னம் அளிக்கிறானோ, அவன் தனது இருபத்திஒரு தலைமுறைகளில் உள்ளவர்களையும் உத்தாரணம் செய்து ருத்திலோகத்தை அடைகிறான்.

- சிவபக்தி சுதர்ணவம்

ருத்திராக்ஷ ஜபத்திற்கான சில தேவாரப் பதிகங்கள்

ஞானசம்பந்தர் அருளிய

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம்) *(3-ஆம் திருமுறை*

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அமமையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்

மாடுகொ டுப்பன மனு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவ ரே. 11

திருச்சிற்றம்பலம்

அப்பரடிகள் அருளிய

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - காந்தார பஞ்சமம்) (4-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்

விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளிய
நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - கௌசிகம்) *(3-ஆம் திருமுறை*

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்

வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவி யே புகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

24

திருமந்திரம் கூறும் ஓரெழுத்து மற்றும் ஐந்தெழுத்தின் சிறப்புகள்

ஓங்காரம்

1. *ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி*
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. *(2676)*

2. *ஓங்காரத் துள்ளே யுதித்த ஐம்பூதங்கள்*
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே. *(2677)*

அஞ்செழுத்து

3. *அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்*
அஞ்செழுத் தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந்தானே. *(934)*

4. *அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்*
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே. *(966)*

5. சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. (2716)

6. சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகுந் திருவருளாமே. (2715)

7. சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோத
சிவாயவொ டவ்வே சிவனுருவாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளிய வல்லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந்தாரே. (981)

8. சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்த மாமே (2718)

9. சிவமான ஞானஞ் தெளியவொண் சித்தி
சிவமான ஞானஞ் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்தம் நல்குமே. (1587)

10. சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவபோதந்
தவமான மவையாகித் தானல்ல வாகுமே. (2539)

அப்பர் தேவாரம்

11. நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேற்றுமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

25. ருத்திராக்ஷ மணிமாலைகளின் பல மொழி பெயர்கள்

தமிழ்	- உத்திராட்சம், ருத்திராட்சை, அக்கம், அட்ச மாலை, சிவமணி
மலையாளம்	- நல்லகரா (Nallakara), கட்டக்கரா (Kattakara), மாலம்கரா (Malamkara), பிள்ளை பாக்கியரா (pilaibagyara), பங்காரி (pagari)
தெலுங்கு	- ருத்ராக்க்ஷ ஹலு (Rudraksha Halu)
கன்னடம்	- ருத்திராக்ஷி (Rudrakshi), பீஜந்த்மரா (Bijandmara) தந்தட டம்பா (Dhanda damba), ஹின்னல் டோடி (Hinnal todi), புடாடி (Bhutadi), தந்தேமரா (Dandemara), காபிக்கி (Kabikki), இண்டகிமரா (indagimara),
ஹிந்தி	- ருத்ராக் (Rudrak)
பெங்காலி	- ஜால்பாய் (Jalpai), ருத்ராக்கியா (Rudhrakiya)
ஒரியா	- நர்த் ச்சம்பா (narchampa), பனாசியா (panasiya)
நேபாளி	- கோவிங் (koving), பத்திராஸ் (bhadras), டல்ச்சிவாரி (Dalchivari)
மராத்தி	- ருத்ராக்க்ஷா (Rudhraksha), காஸ் (kaas), காஸவா (kasava)
அஸ்ஸாமி	- கடோங்கா (Gattonga), ஃபுல்சம்பா (fulchamba), செலாங் (Selang), பெரங் (perang), கோல் ரிங்கா (Golringa), பெல்ஃபோயி (Belfee), போர்ச்சம்பா (borchampa), பட்டிசோபா (patisopa), புட்குலி (phutkuli)
பீஹாரி	- கரேலா (Garela)
மணிப்பூரி	- சார்ப்பாய் (charpai)
பிராம்மி	- புடாலெட் (Butalet)
சமஸ்கிருதம் / கிரந்தம்	- ருத்திராக்க்ஷம் (Rudhraksham), ருத்திராக்க்ஷமாலா (Rudhraksha Mala), அக்ஷமாலா (Aksha Mala)
நீல்கிரி	- பாய்க்மரா (Baikumara)
ஆங்கிலம்	- வுட்டன் பெக்கர் (wooden begar), உத்ராசும்பீக் (utrasumbeek), டெக்கான் ஆலிவ் (Deccan Olive), சிலோன் ஆலிவ் (Silon Olive)

விரைவில்...

நந்தீஸ்வரர் மகிமை, பிரதோஷ மகிமைகளை விளக்கும்

ஒரு புராண ஆன்மீக ஆய்வு நூல்

நசிகேதனின்

ஸ்ரீ நந்திகேஸ்வரர்

பலவகை நந்திதேவர்கள், பற்பல நந்திக்கதைகள், பல நந்தி ஸ்தலங்கள், நந்திதேவர் பற்றிய பல்வேறு சிறப்புகளைத் தாங்கிய ஒரு கலைக் கருவூலமாக, ஒரு ஆன்மிகப் பெட்டகமாக வெளி வருகிறது இந்நூல்.

- பதிப்பகத்தார்

ருத்திராக்ஷ முகங்களும் வகைகளும்

கர்ப்ப கௌரி

கணேஷ்

15 முகம்

16 முகம்

17 முகம்

18 முகம்

19 முகம்

20 முகம்

21 முகம்

துவைத்

த்ரிஜுடி

நாற் பிரிவு

இரு பிரிவு

ஒரு பிரிவு

மாலை

மாலை







ருத்திரன் என்ற சிவனின் கண்களில் இருந்து தோன்றியவையே ருத்திராக்ஷ மரங்களும், மணிகளும். ருத்திராக்ஷ மணிகளின் "அடிப்பகுதி" பிரம்மம், அதன் "நாளம்" விஷ்ணு ஸ்வரூபம், "மேல்பகுதி" ஆகிய முகங்கள் ருத்திரனின் வடிவம். "பிந்து" எனும் மையப்புள்ளி, எல்லா தேவதைகளின் இருப்பிடம் ஆகும்.

- ருத்திராக்ஷ ஜாபால உபநிஷதம்